# போராட்டம்

2014 ஜுலை    இதழ் 14    இப்பத்திரிகை மக்கள் போராட்ட இயக்கத்தின் வெளியீடு    20.00 ரூபா


# மக்களின் சுகாதாரஉரிமைகளை பாதுகாக்க புதிய முன்னணி

**சுகாதார சேவை மற்றும் சுகாதாரக் கல்வி விற்பனை பண்டமாக்கி அதன் மூலம் தமது சுகாதாரம் சம்பந்தமாக மக்களுக்குள்ள மறுக்க முடியாத உரிமையை பறிப்பதற்கு எதிராக அத்துறையைச் சேர்ந்த அனைத்து பிரிவினரிதும் பங்களிப்புடன் ஒன்றிணைந்த போராட்ட முன்னணியை கட்டியெழுப்புவதாக தொழிலாளர் போராட்ட மத்திய நிலையம் கூறுகிறது.**

அதற்கேற்ப சுகாதார சேவையைச் சேர்ந்த அனைத்து தரங்களையும் உள்ளடக்கிய ஊழியர்கள், சுகாதாரத் தறை சார்ந்த கற்கை நெறிகளில் ஈடுபடும் பல்கலைக் கழக மாணவர்கள், நோயாளர்களின் உரிமைகளை பாதுகாக்கும் அமைப்புக்கள் உள்ளிட்ட சுகாதாரத் துறையை தனியாரிடம் ஒப்படைப்பதற்கு எதிரான அனைவருடனும் இது தொடர்பில்பேச்சுவார்த்தைகளஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் அடுத்த கட்ட நடவடிக்கையாக மிக விரைவில் இதனை சமூகக் கருத்தாடலுக்கு விடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகதொழிலாளர்போராட்ட மத்திய நலையம் கூறுகிறது.

## வன்முறைகளுக்கு தீர்வுகாண சம உரிமை இயக்கத்தின் கலந்துரையாடல்!

22.06.2014 இன்று மருதானை சி.எஸ்.ஆர் கேட்போர் கூடத்தில் அண்மையில் நாட்டில் எழுச்சி பெற்றிருக்கும் இன வன்முறைக்கு பொருத்தமான தீர்வு ஒன்றை காணும் நோக்கில் சம உரிமை இயக்கத்தினால் கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சம உரிமை இயக்கத்தின் ஏற்பாட்டாளர் ரவீந்திர முதலிகே தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் சிங்கள,தமிழ்,முஸ்லிம் மக்கள் மத்தியிலான புத்திஜீவிகள் பேராசிரியர்கள் சமூகபற்றாளர்கள் மனிதஉரிமை ஆர்வலர்கள் சிவில் அமைப்புக்களின் பிரதி நிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அர்த்தபுஷ்டியாக இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில் பல தரப்பட்ட கருத்துக்களும் முன்வைக்கப்பட்டன. 30 வருட யுத்தத்திற்குள் சிக்கி சீரழிந்த எமது நாடு மீண்டும் ஒரு யுத்தத்திற்கு வாய்ப்பான இன,மதவாதம் எழுச்சி பெறுவதை முற்றாக தோற்கடிப்பதற்கு ஏற்புடையதான பல யோசனைகள் இக்கருத்தாடலில் கலந்துகொண்டோரால் முன்வைக்கப்பட்ட.யோசனைகள் பற்றி ஆராய்ந்து இறுதி முடிவு எடுப்பதற்காக மீண்டும் ஒரு கலந்துரையாடலை ஏற்பாடு செய்வது என ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

காலத்தின் தேவை கருதி இவ்வாறானதொரு கலந்துரையாடலை ஏற்பாடு செய்திருந்த சம உரிமை இயக்கத்தினருக்கு கூட்டத்தில் கலந்து கொண்டோர் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் ஒரு கறுப்பு ஜுலை வேண்டாம்!




"மீண்டும் ஒரு கறுப்பு ஜுலை வேண்டாம்" என்ற தலைப்பின் கீழ் ஜுலை18ஆம் திகதி "சமஉரிமை இயக்கம்" கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தின் முன்பாக மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தின்போது எடுக்கப்பட்ட படம். புகையிரத நிலையத்தின் முன்பாக நடாத்திய

## மு.சோ.க. யின் தொடர் கருத்தரங்குகள்

போனபாட் பெரிதா, வேட்பாளர் பொதுவா, எதிர்பார்ப்பு வெள்ளையா? என்ற தொனிப்பொருளில் முன்னிலை சோஷலிஸக் கட்சி நடத்தி வரும் தொடர் கருத்தரங்கு கட்சியின் தோழர் துமிந்த நாகமுவ அசவர்களால் ஜுன் 16ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் தொடர்ச்சி 20 ஆம் திகதி கேகாலையிலும், 21ம் திகதி பொலன்னருவையிலும், 29 ம்திகதி பதுளையிலும் தோழர் புபுது ஜயகொட அவர்களின் பங்களிப்போடு நடைபெற்றது. ஜுன் 23ம் திகதி தோழர் சமீர கொஸ்வத்த அவர்களின் பங்களிப்போடு கண்டியில் நடைபெற்றது.

தவிரவும் ஜுலை 5ம் திகதி தோழர் துமிந்த நாகமுவ தலைமையில் பாணந்துறையிலும், ஜுலை 19ம் திகதி தோழர் புபுது ஜயகொட தலைமையில் கருத்தரங்கு நடைபெறவிருக்கிறது. மேற்படி கருத்தரங்கு ஜுலை மாதத்தில் அனுராதபுரம், காலி ஆகிய நகரங்களிலும் நடைபெறவிருக்கிறது. பிரதான நகரங்களை மையமாகக் கொண்டு இக்கருத்தரங்கு நடத்தப்படவிருப்பதாக மு.சோ.க. கூறுகிறது.

### தமிழ்– சிங்கள மேலாதிக்க... 14 பக்கம்

எவ்வாறு இனவாத மிளகாய் அரைக்கிறதோ - அதற்கும் மேலான இனவாத அங்கிடுதத்தி வேலைபார்ப்பதில் சிங்கள - ஆதிக்க வர்க்கம் மிகவும் கைதேர்ந்தது. நாவலர், இராமநாதன் கோஷ்டியைப் போன்று அநாகரீக தர்மபால, பண்டாரநாயக்க பரம்பரை, ஜே.ஆர். ஜெயவர்த்தன ஈறாக இப்போ ராஜபக்ஸ வரை தொடர்கிறது. சிங்கள மேலாதிக்கம் தனது நலனின் அடிப்படையில் இப்போது இலங்கையைக் கூறுபோட்டு சர்வதேசச் சந்தையில் மலிவு விலையில் விற்கிறது. அதை மறைக்க இனவாதத்தை வழமை போல - தமிழ் தேசிய சக்திகளாக கூறப்படும் மேலாதிக்க தமிழர்களுடன் மறைமுகமாக இணைந்து முன்னெடுக்கிறது.

வடக்கு முதலமைச்சரின் இருதேசம் - ஒரு நாட்டு வெடிகளைக் கேட்டு ”அதிர்ந்து” போன சிங்கள இனவாத-மேற்தட்டு வர்க்கக் கனவான்கள் சும்மா இருப்பார்களா என்ன ?!

80-களிலிருந்து தன்னை ஒரு இடதுசாரியாகவும், 90-களிற் தன்னை மனிதவுரிமை வாதிகளாகவும் முன்னிறுத்திய - அநாகரீக தர்மபாலாவினது வாரிசு தயான் ஜெயதிலக கொதித்தெழுந்து

”இலங்கையில் ஒரு தேசம் தான் இருக்க முடியும். அது சிங்கள தேசம் மட்டுமே! வேண்டுமானால் தேசியச் சிறுபான்மை அல்லது சிறுபான்மை இனங்கள் இலங்கையில் உண்டென்று வேண்டுமானால் கூறலாம்” ........” இலங்கையில் 4 வீத மக்கள் மட்டுமே தமிழர்கள். சி. ஐ. ஏ யின் கணக்குப்படி 3.9வீத தமிழர்களே இலங்கையில் உள்ளனர். சி. ஐ. ஏ சொல்வது கூட்டமைப்புக்கு பிரச்சனை இருக்காது என நினைக்கிறேன். 4 வீதம் உள்ளவர்கள் எப்படி ஒரு தேசமாக முடியும்?” எனத் தமது பச்சை இனவாதத்தைக் கைக்கியுள்ளார்.

யுத்தம் நடந்த காலத்தில் அரச தூதுவராகப் பதவிவகித்த போது ”யுத்தம் முடிந்த பின் இலங்கையில் சுரண்டலை இலகுவாக செய்யலாம் - யுத்தத்துக்கு ஆதரவு தாருங்கள்” என மேற்குநாடுகளிடம் இலங்கையை கூறுபோட்டு விற்றவர் தான் இந்த தயான் ஜெயதிலக. இப்போ வெளியாருக்கு விற்றாலும் விற்போமே ஒழிய, ஒடுக்கப்பட்ட இனங்களுக்கான உரிமைகளைத் தரமாட்டோமென கொடுக்கிழுத்துக் கட்டுகிறார் ஜயதிலக. ஒரு பக்கத்தில் இப்போது தனது இனவாத முகத்தைக் காட்டும் முனைவர் ஜயதிலக, மறுபக்கத்தில், தமிழ் மேலாதிக்க வர்க்கத்தின் பிரதிநிதிகளான நாடுகடந்த தமிழ் ஈழ அரசு, உலகத் தமிழர் பேரவை (GTF), பிரிட்டிஷ் தமிழர் பேரவை(BTF) போன்ற அமைப்புகளையும், விக்னேஸ்வரன் போன்றவர்களையுமே தமிழ் மக்களின் நியாயமான, சிறந்த பிரதிநிதிகளாகக் கூறுகிறார். மேற்படி புலம்பெயர் அமைப்புகளை மஹிந்த அரசு தடை செய்ததை முட்டாள்தனமெனச் சாடுகிறார். இதற்குப் பெயர்தான் இனங்கடந்த ” வர்க்க” உறவோ?

தயானின் இனவாதக் கூக்குரல் ஒரு பக்கமொலிக்க மறுபுறத்தில், ”வட மாகாண சபைக்கு அதிகாரங்களை வழங்கினால் அது நாட்டின் பிரிவினைவாதத்திற்கே உந்துசக்தியாக அமையும். எனவே, முதலமைச்சர் விக்னேஸ்வரன் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் சம்பந்தியாக இருப்பதால் பிரிவினைவாதத்திற்கான கதவுகளை திறந்துவிட முடியாது” என தெரிவிக்கும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், ”கசினோ சூதாட்டத்திற்குச் சட்ட அங்கீகாரம் கிடைக்காவிட்டால் வெளிநாட்டு “ஹோட்டல்“ முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வரமாட்டார்கள்” என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச்செயலாளர் டாக்டர்.வசந்த பண்டார அறிக்கை விட்டார்.

இந்தப் பண்டாரவின் கருத்தும் கூட ”முற்போக்காளர்” ஜெயதிலகவினது போல, இலங்கையை கசினோவில் சூதாடித் தோற்றாலும் தோற்போமே ஒழிய, ஒடுக்கப்படும் மக்களுக்கு ஒன்றும் வழங்கப்படக் கூடாதென்பதையே வெளிப்படுத்துகிறது.

சிங்கள மக்களின் நண்பர்களாக, அவர்களின் பிரதிநிதிகளாகத் தம்மை சிங்கள மேற்தட்டுவர்க்க இனவாதிகள் முன்னிறுத்தியபடி, சிங்கள - மற்றும் அனைத்து ஒடுக்கப்படும் மக்களின் சொத்தான இலங்கையை வெளிநாட்டு சூதாடிகளுக்கும், சுரண்டல் நிறுவனங்களுக்கும் கூறுபோட்டு விற்க உதவுகின்றனர். இதை மறைப்பதற்கும் மக்களை திசை திருப்புவதற்கும் இவர்கள் கதைப்பதும் - முன்னிறுத்துவதும் இனவாதப் பிரிவினைகளையே.

முடிவாக

இலங்கையில் ஒடுக்கப்படும் மக்களுடன் இணைந்து, அவர்களின் விடிவுக்கான போராட்டத்தை முன்னெடுக்கும் முன்னிலைச் சக்திகளும் மக்கள் முன்னணிகளும் கட்சிகளும்:

-இனவாதம் களைந்து ஒடுக்கப்படும் மக்களிடையேயான பரஸ்பர உறவை வளர்க்க நடைமுறையில் அரசியல் வேலைகளை முன்னெடுக்க வேண்டும். இதுவே இன்று இலங்கையை ஆக்கிரமித்துள்ள தேசியப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கான முன்நிபந்தனையாகவுள்ளது.

-அதேநேரம் சிங்கள - தமிழ் இனவாத மேலாதிக்க - தரகு -முதலாளித்துவ வர்க்கத்தின் பிடியிலிருந்து தேசியப் பிரச்சனைக்கான தீர்வை வைக்கும் ”பொறுப்பை” யும், அதற்காகப் போராடும் ”பொறுப்பையும்” கைப்பற்றி - ஒடுக்கப்படும் தேசியஇனங்களுக்கான தீர்வை உழைக்கும் வர்க்க நலன் சார்ந்து முன்வைத்து, அவ்வுரிமைகளை வெல்வதற்கான நடைமுறைப் போராட்டத்தை நடாத்த வேண்டும்.

### மக்களைச் சாராதா செயற்பாடுகள்,.... 12 பக்கம்

அரசியல் ஒருமைப்பாட்டை உருவாக்க வேண்டி இருக்கின்றது.

தன்னியல்பான போராட்டங்களை திட்டமிட்ட போராட்டங்களாக, இனம் மதம் சாதி பிரதேசம் கடந்து ஒருங்கிணைந்த போராட்டங்களாக மாற்றுவதன் மூலம், அரசை வெற்றிகரமாக எதிர் கொள்ளமுடியும் என்ற உண்மையை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும்.

இலங்கையில் அனைத்து மக்களையும் உள்ளடக்கியதான, அரசுக்கு எதிரான போராட்டங்கள் கட்டமைக்கப்பட வேண்டும். இதுவின்றி இனவொடுக்குமுறையை முறியடிக்கக் கூடிய வேறு வழி கிடையாது. தமிழ் மக்களின் தனிப்போராட்டத்தை கோருபவர்கள் கூட, இதனுடன் சேர்ந்து பயணிப்பதன் மூலமே வெற்றி பெற முடியும். வேறு வடிவத்தில் வெல்லவே முடியாது என்பது மறுக்க முடியாத உண்மையுமாகும்.

இந்தவகையில் அனைவருக்கும் சமவுரிமை என்ற கோரிக்கைக்கான போராட்டமானது, சாராம்சத்தில் சிறுபான்மை மக்களுக்கு சமவுரிமை கொடு என்பதே உள்ளடக்கமாகும். பெரும்பான்மை மக்கள் அனுபவிக்கக் கூடிய உரிமைகள் அனைத்தையும், சிறுபான்மை மக்கள் பெற உரித்துடையவர்கள் என்பதே இதன் அர்த்தம். அரசு சார்ந்து இருக்க கூடிய பெரும்பான்மை மக்கள் மத்தியில் இருந்து, அரசுக்கு எதிராக சமவுரிமையைக் கொடு என்று கூறி முன்னெடுக்கக் கூடிய வேலைத்திட்டமே சமவுரிமை. பெரும்பான்மை மக்கள் மத்தியில் இருந்து அரசை தனிமைப்படுத்தி தோற்கடிக்கக் கூடியதும், அதற்கு ஆதரவாக சிறுபான்மை மக்கள் போராட வேண்டியதுமான, நடைமுறையில் சாத்தியமான ஒரு திட்டம்.

இலங்கையில் பெரும்பான்மை மக்கள் அனுபவிக்கக் கூடியவைகள் எவையோ, அதை சிறுபான்மைக்கும் கொடு என்பதை முன்னிறுத்தி, ஒன்றிணைந்து பயணிக்கும் தெளிவான இலக்கை நோக்கிய பாதையாகும். அதேநேரம் சிறுபான்மையை ஒடுக்கி பெரும்பான்மை அனுபவிக்கின்ற சிறப்பு சலுகைகளை எதிர்த்து, பெரும்பான்மை மக்களின் போராட்டம் கூட.

இங்கு உரிமைகளை மட்டும் முன்வைத்து போராடுவதல்ல, உரிமைகளை மறுக்க கையாளும் இன மத ரீதியான ஒடுக்குமுறைகளை எதிர்த்தும் போராடுவதாகும். இதன் மூலம் இன ரீதியான அனைத்து பிற்போக்கான கூறுகளையும் தோற்கடிக்க முடியும். அதாவது மக்களை சாராத செயற்பாடுகளையும், அன்னிய நலன்கள் சார்ந்த செயற்பாடுகளையும், அரசு சார்ந்த செயற்பாடுகளையும், நடைமுறை சாத்தியமற்றவற்றையும் புறந்தள்ளி, நடைமுறையில் சாத்தியமான மக்களைச் சார்ந்த போராட்டங்களை முன்னெடுப்பது அவசியமானது.

மக்கள் சார்ந்த போராட்டமானது தனிமைப்பட்டதும், வாக்களிப்பை நம்பியதும், அன்னிய சக்திகளை நம்பிய, வெறும் நம்பிக்கைகள் அல்ல. மாறாக தனிமைப்படுத்தும் சொந்த இனவாதத்தில் இருந்து விடுபட்டு, அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களையும் சார்ந்து ஒன்றிணைந்து போராடுவதே. வெறுமனே இனவொடுக்குமுறைக்கு எதிராக மட்டும் போராடுவதல்ல. மாறாக மக்களின் வாழ்க்கை சார்ந்த அனைத்துக்குமாக போராடுவதாகும்.

கடந்தகாலத்தில் இனவொடுக்குமுறையை எதிர்கொண்ட போராட்டப் பாரம்பரியமானது, இனவாதத்துக்கு உட்பட்டு, தனிமைப்பட்டும் காணப்பட்டது. அதேநேரம் மக்களின் வாழ்வு சார்ந்த பிற போராட்டங்களை கண்டுகொள்ளாத தன்மையானது, இயல்பில் படுபிற்போக்கானதாக மக்களுக்கு எதிரானதாகவும் வெளிப்பட்டது. இன்றும் இனவொடுக்குமுறையை இப்படித்தான் எதிர் கொள்ள முற்படுகின்றனர். இதனால் தான் இந்த இனவொடுக்குமுறையில் இருந்து மீள முடியாமல், மக்கள் அரசியல் அனாதையாக்கப்படுகின்றனர்.

இனவொடுக்குமுறைக்கு எதிரான பெரும்பான்மை மக்களுடன் ஒன்றிணைந்து போராடுவதும், இலங்கை மக்கள் அனைவரதும் பொதுவான வாழ்வியல் கோரிக்கைகள் மற்றும் போராட்டங்களை இணைந்து முன்னெடுப்பதன் மூலமும் நடைமுறையில் சாத்தியமான உண்மையான வெற்றிகளைப் பெற முடியும்.

இனவொடுக்குமுறை போல் இனரீதியான குறுகிய போராட்டங்கள் தனிமைப்பட்டவையாகவும், மனித விரோதத்தன்மை கொண்டதாகவும் இருக்கும். இனவொடுக்குமுறையானது, இனரீதியான அதன் பிற்போக்கான எதிர் போராட்டத்தின் பக்கங்களைக் காட்டி முன்னெடுக்கின்றது. உதாரணமாக முஸ்லிம் அடிப்படைவாத பயங்கரவாதத்தையும் அதன் கொடூரங்களையும் காட்டி, ஏகாதிபத்தியங்களும் அரசுகளும் எப்படி மக்களுக்கு எதிரான அரச பயங்கரவாதத்தை முன்னெடுக்கின்றதோ, அதை ஒத்ததே இதுவும் கூட. இனவொடுக்குமுறைக்கு எதிராக அனைத்து இன உழைக்கும் மக்களைச் சார்ந்து போராடாத வரை, அவை அனைத்தும் இனவொடுக்குமுறைக்கு உதவுவதாகவே இருக்கும். இனரீதியான பிற்போக்குகளையும், தனிமைப்பட்ட குறுகிய இனவாதப் போக்குகளையும் களைந்து போராடுவதன் மூலமே, இனவொடுக்குமுறையில் இருந்து விடுபட முடியும்.

### எலியும், சேவலும், பன்றியும் எருதும் 12 பக்கம்

பொறியில் நாங்கள் சிக்க மாட்டோம்□ எனக் கூறி ஏயைன மிருகங்கள் மறுபக்கம் திரும்பிக் கொண்டன. பொறியில் சிக்கிய எலி செத்து விட்டது. எலி செத்த நாற்றத்தினால் நோய்வாய்பட்ட வீட்டுரிமையாளரின் மனைவிக்கு சேவல் சூப் குடிக்குமாறு வைத்தியர் ஆலொசனை வழங்கினார். இதனால் சேவல் பலியானது. நோயாளியை பார்க்க வரும் உறவினர்களை உபசரிப்பதற்கு பன்றி கொல்லப்பட்டது. இறுதியாக அந்தப் பெண் இறந்து விட்டார். அவருக்காக தானம் வழங்குவதற்கு எருதும் உயிர் தியாகம் செய்தது. ஒவ்வொருவரும் தன்னுடைய வேலையை பார்த்துக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் அந்த சீனக் கதையை மீண்டும் படிப்பதில் தவறு இருப்பதாகத் தெரியவில்லை.

### மீனவர்களின் எரிபொருள்.... 06 பக்கம்

தவறும் படசத்தில், மல்கம் ரஞ்சித்தும், கத்தோலிக்க திருச்சபையின் இலங்கைத் தலைமையும் பொறுப்பேற்கும் எனவும் உடன்பாடு காணப்பட்டது.

இலங்கையின் மேற்குக்கரை மீனவப் போராளிகளின் இந்த தற்காலிக வெற்றியானது, அவர்களில் தனிப்பட்ட வெற்றியல்ல. இப்போராட்டத்தால் கிடைக்கும் நலன் அவர்களின் தனிப்பட்ட தேவையை மட்டுமோ, அல்லது சிங்கள மீனவர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு மட்டுமானதல்ல. இத் தற்காலிக வெற்றி இலங்கையின் அனைத்து மீன்பிடிச் சமூகங்களின் வெற்றி! அனைவரின் நலனையும், தேவையையும் பூர்த்தி செய்ய மேற்குக்கரைப் போராளிகளால் பெறப்பட்ட வெற்றி. இவ்வெற்றியின் பயன் வடக்குக் கிழக்கில் இந்தியக் கடல் ஆதிக்கத்தால் - கடற்கொள்ளையால் பாதிக்கப்பட்டு வறுமையில் வாடும் தமிழ் பேசும் மீன்பிடிச் சமூகத்துக்கும் பயனளிக்கும். அதேவேளை எதிர்காலத்தில் அனைவரும் இணைந்து போராடுவதன் மூலம் இதைவிடப் பாரிய வெற்றிகளை இலங்கையின் உழைக்கும் மீனவச் சமூகம் தமதாக்கிக் கொள்ளலாம்.

## பெண்ணின் சமூகத்தன்மை நீங்குமா? 07 பக்கம்

சமூக அமைப்பிலான பெண், குழந்தையை பராமரிக்கின்ற சமூகத்தன்மையை (ஆண் விலத்தி நிற்பதைப் போலவே) இழந்துவிடுவதையே முன்நகர்த்துகின்றது. இதன் விளைவானது, மந்தையை வளர்ப்பது போல் குழந்தையை வளர்க்கும் முதலாளித்துவப் பண்ணைகளையே உருவாக்கும். இன்று குழந்தைகளால் கைவிடப்பட்ட முதியவர்களைப் பராமரிக்கின்ற சட்டவகைப்பட்ட பண்ணைகள் போன்ற, குழந்தைகளை பராமரிக்கின்ற சட்டவகைப்பட்ட பண்ணைகளையே உருவாக்கும். சமூக உறவாக்கம் கொண்ட, சமூகப் பராமரிப்புக்கு இடமில்லை. மனித உறவுகள் என்பது, கூலி வகைப்பட்ட கடமையிலான சட்டவகைச் சடங்குகளைத் தாண்டி இருக்காது.

கூட்டுவாழ்க்கை முறையில் வாழ்கின்ற சமூக வாழ்க்கை முறைக்குப் பதில், சட்ட வகைப்பட்ட தன்மையிலான பண்ணைகளை தனிவுடமை உருவாக்குகின்றது. முதுமையை இங்கு தான் மூலதனம் அடைகின்றது என்றால், குழந்தைப் பருவத்தை இங்குதான் நலமடிக்கும். தன்னலத்தைக் கோரும் தனிவுடமையிலான வாழ்க்கையின் சாரமும் விளைவும் இதுதான்.

தொடரும்.

## தேர்தலை எதிர்கொள்ளுதல் 11 பக்கம்

அணுகவேணடுமே ஒழிய, தேர்தல் முறை மீது நம்பிக்கை கொள்ளுமாறு தேர்தலை முன்னிறுத்தி விடக் கூடாது.

2.தேர்தல் முறையானது எந்த மாற்றத்தையும் தராது என்ற உண்மையை புரிந்து கொண்ட மக்கள், வாக்களிப்பில் பங்குகொள்வதில் இருந்து விலகி வருகின்றனர். இதை ஊக்குவித்து அதற்கு அமைவாக தேர்தலில் பங்கு கொள்ளவேண்டும்.

3.வாக்களிப்பில் நம்பிக்கை கொண்ட சக்திகளின் பின், பங்குகொள்வதன் மூலம் வாலாக மாறிவிடக் கூடாது. மாறாக அவர்களின் நம்பிக்கையை தகர்க்கும் வண்ணம், தேர்தலை மாற்ற வேண்டும்.

மேற்கூறிய போக்குகளை அடையாளம் கண்டு சரியானதை ஊக்குவிக்கவும், அதேநேரம் தேர்தலில் நம்பிக்கை கொண்டவர்களை வர்க்க அரசியல் மயப்படுத்துவற்காகவே தேர்தலில் பங்குகொள்ளும் அரசியல் முடிவுகள் எடுக்கப்படுகின்றது.

இந்த வகையில் பொது வேட்பாளர் என்ற அரசியல் மோசடியை எதிர்த்து, உழைக்கும் வர்க்கத்தை தன் வர்க்கத் தலைமையில் அணிதிரட்டும் வண்ணம், தேர்தல் அரசியலை எதிர்கொள்வது அவசியமானது. ஆளும் வர்க்கங்கள் உழைக்கும் வர்க்கத்தை தன் கீழ் அணிதிரட்டுகின்ற முயற்சியை அனுமதிக்கின்ற அரசியல் என்பது தற்கொலைக்கு ஒப்பானது.

# எலியும், சேவலும், பன்றியும் எருதும்



அளுத்கம மற்றும் பேருவளை பகுதிகளை அண்டிய பிரதேசங்களில் நடந்த மதவெறியாட்டத்துடன் கடந்த வாரம் ஆரம்பமாகியது. 15ம் திகதி ஞாயிறு தொடங்கிய அமைதியின்மை தெஹிவலை மருந்து விற்பனை நிலையம் மற்றும் பானந்துறையில் ஆடை விற்பனை நிலையம் தீ வைக்கப்பட்டு, மஹுவ, திருகோணமலை, கொழும்பு உள்ளிட்ட பல பகுதிகளில் முஸ்லிம் பள்ளிவாயில்கள் மீது கற்கள் வீசப்படுவது வரை பரவலாகியது. பொது பல சேனாவுக்கு எதிராக குரலெழுப்பிய வட்டரக்க விஜித தேரர் தாக்கப்ட்டு பண்டாரகம பிரதேசத்தில் பின்புறமாக கைகள் கட்டப்பட்ட நிலையில் விடப்பட்டிருந்தார். பின்னர் தன்னைத் தானே தாக்கிக் கொண்டதாகக் கூறி கைது செய்யப்பட்ட அவர் ஜுன் 25ம்திகதி தடுப்புக் காவமடலில் வைக்கப்பட்டார். அளுத்கம சம்பவத்தில் தொடர்ப்புடைய எந்தவொரு நபரையும் கைது செய்ய முடியாதளவிற்கு செயலற்றுக் கிடந்த பொலிஸார், திடீரென விழித்தெழுந்தவர்களைப் போன்று அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகக் கூறி மூன்று மாணவர் தலைவர்களை விரைந்த கைது செய்தனர். இதற்கிடையில் அளுத்கம மத வெறியாட்டத்தோடு இராணுவ புலானாய்வுப் பிரிவிற்கு தொடர்பு இருப்பதை உறுதி செய்யும் விதமாக ராணுவ புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த மூன்று அதிகாரிகளின் பெயர்களை நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீமர வெளியிட்டிருந்தார். இதனை ஒரு காட்டிக் கொடுப்பாக அர்த்தப்படுத்தியதால் ஊடகங்களில் வாதப் பிரதிவாதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத இந்தச் செய்தி தலைப்புச் செய்தியாக ஊடகங்களில் வெளியிடப்பட்டிருந்தன.

ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத இச் சம்பவங்களை தொடர்புபடுத்தி பார்க்கும்போது நாட்டின் இன்றைய அரசியல் பயணம் எப்படி என்பதை புரிந்துக் கொள்ள முடியும். அவற்றை தொடர்புபடுத்துவதற்கு முன்னர் இவற்றை தனித்தனியாக அலசுவோம். வட்டரக்க விஜித தேரர் தன்னைத் தானே தாக்கிக் கொண்ட செய்தி குறித்து எங்களுக்கு சரியாகத் தெரியாது. தன்னை யாரோ துன்புறுத்தியதாக பொய் முறைப்பாடு செய்வதாயிருந்தால் ஒன்று அவருக்குப் பின்னால் அரசில் நோக்கமொன்று இருக்க வேண்டும். அல்லது அவர் மன நோயாளியாக இருக்க வேண்டும். பொதுபல சேனாவும் , வட்டரக்க விஜித தேரர் பிரதிநிததித்துவம் செய்த பல சேனாவும் இக்குழப்பதிற்கு மத்தியில் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கும் அமைப்புக்கள் என்பதை இதற்கு முன்னர் நாம் குறிப்பிட்டிருந்தோம். இச்சந்தர்ப்பத்திலும் அதைத்தான் கூற வேண்டியுள்ளது. இவற்றுக்குப் பின்னால் அரசியல் நோக்கம் மட்டுமல்ல, நிதி சம்பந்தமான நோக்கம் உள்ளிட்ட தனிப்பட்ட குறிக்கோள்களும் இருக்கக் கூடும். மன நோயைப் பற்றி கூறுவதாயிருந்தால், இந்த பாழாய்ப்போன சமூகத்தில் யார்தான் மனநோயால் பாதிக்கப்படாதவர்கள். பொருளாதாரப் பிரச்சிணையால் தான் சந்திக்கும் நெருக்கடியும், சிறு முதலாளித்துவ கனவும், நவ தாராளமய முதலாளியத்தினால் நீண்டகாலமாக தொடுக்கப்பட்டு வரும் அழுத்தங்களும் பிற்போக்குத்தனங்களும் ஒன்றாகச் சேர்ந்து குழப்பியடித்திருக்கும் இந்த சமூகத்தில் அநேகமானோர் தெளிவான மனோநிலையில் இல்லை என்பதுதான் உண்மை. சுகாதார அமைச்சின் கூற்றுப்படி நான்கு முதியவர்களில் ஒருவர் என்ற ரீதியல் சிகிச்சை பெறக்கூடிய மன நோயாளியாகவே உள்ளார். இவ்வாறான சமூகத்தில் பித்துப் பிடிக்காமல் வாழ்வது மிகக் கஷ்டம் என்பதால் இச்சம்பவத்திற்கு மனநோய்தான் காரணம் என்று கூறுவது பிழையாக இருக்காது. என்றாலும், வட்டரக்க விஜித தேரர் தானாகவே தன்னுடைய கைகளை பின்புறமாக கட்டி, தன்னையே தாக்கி, மை கத்தியால் தனது உடலை காயப்படுத்திக் கொண்டதாக பொலிஸர் கூறும்போது, தன்னைத் தானே மரத்தில் கட்டிக் கொண்ட கிரிபத்கொட சமுர்தி உத்தியோகத்தர் நினைவுக்கு வருகிறார். வட்டரக்க தேரருக்கு எற்பட்ட கதி எப்படியிருந்தாலும், தீவிரவாதத்தின் எழுச்சியை பௌத்த சமூகத்தில் எல்லோருமே அனுமதிக்க மாட்டார்கள் என கருதப்படுவது வரவேற்கத்தக்கதுதான். நாம் பார்க்க வேண்டியது பொலிஸாரின் தீர்மானங்களுக்கு பின்புலத்தில் உள்ள அரசியல் உள்நோக்கம் குறித்துத்தான்.

நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர அவர்களின் பிரச்சிணை குறித்தும் பேச வேண்டியுள்ளது. ராணுவம் மற்றும் பொலிஸ் சம்பந்தமாக அவரது விளக்கத்தை நாம் கவனிக்க வேண்டும். அளுத்கம சம்பவத்தோடு ராணுவத்திற்கும் பொலிஸ "க்கும் தொடர்பிருப்பதாகக் கூறிய மறுநிமிடம் ராணுவ ஊடகப் பேச்சாளர் உடனடியாக ஊடகவியலாளர் சந்திப்புக்கு ஏற்பாடு செய்தார். அங்கு விளக்கமளித்த அவர் இனவாத- மதவாத வன்முறைகளுக்கு ராணுவ புலனாய்வுப் பிரிவு சம்பந்தப்படவில்லையென கூறவில்லை. ராணுவ புலனாய்வு பிரவினரின் பெயர்களை வெளியிட்டமை தேசத் துரோகம் என்று மட்டும்தான் கூறினார். இப்படியொன்று நடக்கவிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள தேசாபிமான உறுப்பினர்கள் தன்னிடம் கூறியதாக ராணுவ ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார். அவரது விளக்கம் தேசிய பாதுகாப்பு தொடர்பானதாகவே இருந்தது. தேசிய பாதுகாப்பு குறித்து பேசுவதென்றால், பேசுவதற்கு பல விடயங்கள் உண்டு. ராணுவம் கூறும் □இனம்□ என்பதற்கு நாட்டின் கீழ் வர்க்கம் சாராது. தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தாலும், மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தாலும் அதனை தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்றே கூறுகின்றனர். லலித் மற்றும் குகன் ஆகியோர் வடக்கில் இடதுசாரிய அரசியலில் ஈடுபட்டிருந்த சமயத்திலும் தேசிய பாகாப்புக்கு அச்சுறுத்தல் என்றே கூறினர். எனவே, ராணுவமும் ராணுவ புலனாய்வுப் பிரிவும் அரசியல் நிகழ்ச்சிக்கு எற்ப நடந்து கொள்ளும் முறை குறித்து வெளிச்சத்திற்கு கொண்டுவரும் உரிமை ஒவ்வொரு பிரஜைக்கும் உண்டென்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். அவ்வுரிமையை மங்கள சமரவீர போன்றவர்கள் பயன்படுத்தும் நோக்கம் குறித்து பிரச்சிணைகள் இருந்தாலும், அவ்வுரிமை தொடர்பில் எமக்கு இரட்டை கருத்துக்கள் கிடையாது. அரச இரகசியங்களை வெளியிட்டமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரவுக்கு எதிராக வழக்கு தொடுக்கப் போவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார். இனவாத- மதவாத மோதல்களுக்கு அரச அனுக்கிரகம் கிடைத்தமை, மற்றும் ராணுவம் உள்ளிட்ட பாதுகாப்புப் பிரிவுகள் 1983 ஜுலை கலவரத்தோடு சம்பந்தப்பட்டதைப் போன்றே 2014 கறுப் ஜுனிலும் சம்பந்தப்பட்டமை குறித்து நன்றாக அறிந்த எங்களுக்கு அவை □அரச இரகசியங்கள்□ என கூறும்போது சிரிப்புத்தான் வருகிறது.

> ❝ **தேர்தலில் பொது வேட்பாளரை முன்வைத்து மஹிந்த ராஜபக்ஷவை வீட்டுக்கனுப்ப காத்திருப்பவர்களுக்கு ஒன்று சொல்ல வேண்டியுள்ளது. நிலைமை நினைப்பதைப் போன்று இலேசாக இல்ல என்பதுதான். ஜனநாயகத்தை மீட்டெடுப்பது என்ற பிரச்சிணைக்கு தேர்தலின் வாக்குப் பெட்டிகளினால் தீர்வு காண்பது என்பதற்குப் பதிலாக, ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டத்தின் மூலம் தீர்வுகாணுமளவுக்கு நிலைமை மாறிக் கொண்டிருக்கிறது.** ❞

ராணுவப் பேச்சாளர் வெளியிட்ட அறிக்கையில் உள்ள முக்கிய விடயம் என்னவெனில் அதன் அரசியல் செய்திதான். இனவாத அரசியலை அவர் கருத்து மோதல் என்ற வகையில் முன்வைத்ததோடு, மாற்றுக் கருத்துக்களை முன் வைக்கும் நபர்கள் தேசத் துரோகிகளாகவும், பயங்கரவாதத்தை மீள உருவாக்க முயல்பவர்களாகவும், சர்வதேச உளவாளிகளாகவும் முத்திரை குத்தப்பட்டனர். இலங்கை ராணுவம் ஒழுக்கநெறியை கொண்டதெனவும் அரசியலுக்கு அப்பாற்பட்டதெனவும் சில காலங்களுக்கு முன்னர் கருதப்பட்டது. ஆகவேதான், இலங்கை இராணுவம் இராணுவ ஆட்சியை கொண்டுவர சூழ்ச்சி செய்வதில்லை எனவும் கூறப்பட்டது. ஆனால், இன்று இராணுவம் அடக்குமுறை இயந்திரமாக மட்டுமல்ல தத்துவார்த கருவியாகவும் வளர்ந்து தேசியவாத அரசியலின் தொழில் ரீதியிலான செயற்பாட்டாளராவும் ஆகிக் கொண்டிருக்கிறது. அளுத்கம சம்பவத்தின்போதுகூட அரசியல்வாதிகள் மறைக்கப்பட்டு பாதுகாப்பு பாதுகாப்புச் செயலாளரின் பாத்திரம் மேலெழுந்தது. பிரச்சிணைகளை தீர்த்துக் கொள்ள அரசியல்வாதிகளை விடுத்து பாதுகாப்பு அதிகாரிகளோடு பேசும் நிலை உருவாகியுள்ளது.

ராணுவம் அரசியல் வேடம் போடுவது சம்பந்தமான பிரச்சிணையும், தேசியவாத அரசியலின் பேச்சாளராவது சம்பந்தமான பிரச்சிணையும் ஒட்டுமொத்த இலங்கை சமூகத்தினது வீழ்ச்சியோடு சம்பந்தப்படுகிறது. நவ தாராளமய முதலாளித்துவ சூழலில் அரசியல் வியாபாரமயமாக்கப்பட்டு வருகிறது. ஆதலால், அரசியல்வாதி என்பவர் பகுத்தறிவில்லாத, கொள்கையில்லாத வியாபாரியாக இருப்பதோடு, முதலாளித்துவ அரசியல் கட்சிகளும் கொள்கைகளை கைவிட்டு சுபர் ஸ்டார்கள் மீது நம்பிக்கை வைக்க வேண்டிய அரசியலுக்குள் தள்ளப்பட்டுள்ளனர். இறுதியில் திருடர்களும், வியாபாரிகளும், ஊழல்வாதிகளும், ஏமாற்றுப் பேர்வலிகளும் அரசியல்வாதிகளாக வருவதோடு, மேலாதிக்க வர்க்க அரசியலை தொழில் ரீதியாக செய்யக்கூடியவர்கள் ஒரு சிலரே இருக்கின்றனர். இந்த இடைவெளியை நிரப்ப இராணுவம் வந்திருப்பது பயங்கரமான தலைவிதி என்றுதான் கூறவேண்டும். ராணுவ பேச்சாளரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் அரச கொள்கைகள் மற்றும் தேசியவாத கருத்தை சமூகமயமாக்கும் பிரதான நபர்களாக ஆகியிருக்கின்றனர். அவர்கள் ஆற்றலிலும், மேலான்மையிலும் அமைச்சரவை பேச்சாளரையும் மிஞ்சியுள்ளனர். இலங்கையின் அரசியலில் முற்றாக சிங்கள பௌத்த வாக்குகளை தக்க வைத்துக் கொள்வதை இலக்காகக் கொண்டே காய் நகர்த்தப்படுகிறது. இந்த நிலையில் இராணுவம் அரசியல் சக்தியாக வெளிப்படுவது ஆபத்தாகும்.

தேர்தலில் பொது வேட்பாளரை முன்வைத்து மஹிந்த ராஜபக்ஷவை வீட்டுக்கனுப்ப காத்திருப்பவர்களுக்கு ஒன்று சொல்ல வேண்டியுள்ளது. நிலைமை நினைப்பதைப் போன்று இலேசாக இல்ல என்பதுதான். ஜனநாயகத்தை மீட்டெடுப்பது என்ற பிரச்சிணைக்கு தேர்தலின் வாக்குப் பெட்டிகளினால் தீர்வு காண்பது என்பதற்குப் பதிலாக, ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டத்தின் மூலம் தீர்வுகாணுமளவுக்கு நிலைமை மாறிக் கொண்டிருக்கிறது.

எது எப்படியிருந்தாலும், தமிழனுக்கு, முஸ்லிமுக்கு, ரதுபஸ்வல மற்றும் துன்னான பகுதிகளில் போராடிய கிராமத்தவர்களுக்கு, பல்கலைக் கழக மாணவருக்கு, மீனவருக்கு மற்றும் தொழிற் சங்கத் தலைவருக்கு எதிராக சர்வாதிகாரத்தின் அடக்குமுறை நெருங்கிக் கொண்டிருப்பது தெரிகிறது. அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர், பேராதெனிய பல்கலைக் கழக மஹா சிஷ்ய சங்கத்தின் தலைவர் மற்றும் இணை சுகாதார விஞ்ஞான பீட மாணவர் சங்க தலைவர் ஆகியோர் கைது செய்யப்பட்டமை எமக்கு உணர்த்துவது அதைத்தான். தீர்வு என்பது அந்த வேட்பாளரின் கையிலோ அல்லது இந்த வேட்பாளரின் கையிலோ இல்லை. ஒடுக்கப்பட்ட மக்களின் ஒற்றுமையின் மீதே இருக்கிறது. □பிரச்சிணை எனக்கல்ல. உனக்கு□ என்று மறுபக்கம் திரும்புவதால் அனைவருமே அழிவை சந்திக்க நேரிடும். பிரபலமான சீன கிராமிய கதையொன்றின்படி, ஒரு வீட்டில் எலியும், சேவலும், பன்றியும் எருதும் வாழந்து வந்தன. வீட்டு உரிமையாளர் ஒருமுறை எலிப் பொறியை வைத்தார். இதனைக் கண்ட எலி தன்னை எப்படியாவது காப்பாற்றுமாறு ஏனைய ஐந்துகளை கெஞ்சிக் கேட்டது. □அந்தப்

02 ஆம் பக்கம் பார்க்க...

# இந்திய டாடா (TATA) வுக்காக முஸ்லிம்களின் வீடுகள் அபகரிப்பு!

இன்று நகர அபிவிருத்தி என்ற பெயரில்,கோத்தபாய ராஜபக்ஸ தலைமையிலான The Urban Development Authority (UDA), நகர அபிவிருத்தி அதிகாரசபையே - நகரங்கள் சார்ந்த அரச நிலங்களைத் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. இதனால், கோத்தபாயாவின் அதிகாரத்தின் கீழுள்ள பாதுகாப்பு நிறுவனங்களான போலீஸ், இராணுவம், புலனாய்வுத்துறை, கடற்படை போன்றன நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றன.

அரசகாணிகளில் குடியிருப்போரை அகற்றுவது, கடற்கரைக் காணிகளை இராணுவ - கடற்படைத் தேவைகளுக்கென அபகரித்தல், காணி அபகரிப்புக்கு எதிராக போராடுபவர்களை மிரட்டுதல், சர்வதேச நிறுவனங்களுக்காக கட்டிடங்கள் கட்டுதல், கொட்டல்களை நிறுவுதல், அரச கட்டிடங்களை சீர்திருத்தல், காணிகளை விற்பனை செய்வதற்கு சர்வதேச நிறுவனங்களுக்கு தரகு பார்த்தல் போன்ற “வேலைகள்”கோத்தபாயவின் கீழுள்ள பாதுகாப்பு நிறுவனங்களாலேயே நிறைவேற்றப்படுகின்றன.

நாட்டின் அரச சிவில் சேவைகள் இன்று இராணுவமயப்பட்டுள்ளதற்கான ஒரு சிறு உதாரணம் இதுவாகும்.

இன்று இலங்கையின் பொருளாதாரம், பெறுமதியான நிலங்கள், கடல்வளங்கள் மலிவு விலையில் இலங்கையின் அதிகார வர்க்கத்தாலும், அதனைப் பரிபாலனம் செய்யும் குடும்பத்தினாலும் சர்வதேச நிறுவனங்களுக்கு மலிவு விலையில் விற்கப்படுகிறது. இக்கொள்ளையில் ஈடுபடுபவை பெரும்பாலும் இந்திய மற்றும் சீன நிறுவனங்களாகவே இருக்கின்றன.



> இன்று இலங்கையின் பொருளாதாரம், பெறுமதியான நிலங்கள், கடல்வளங்கள் மலிவு விலையில் இலங்கையின் அதிகார வர்க்கத்தாலும், அதனைப் பரிபாலனம் செய்யும் குடும்பத்தினாலும் சர்வதேச நிறுவனங்களுக்கு மலிவு விலையில் விற்கப்படுகிறது. இக்கொள்ளையில் ஈடுபடுபவை பெரும்பாலும் இந்திய மற்றும் சீன நிறுவனங்களாகவே இருக்கின்றன.




கொழும்பில்,ஞடயஎந ளைடயனெ பகுதியில் சில நூறு வருடங்களாக, யாவாவில் இருந்து இலங்கையில் குடியேறிய முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வசித்து வருகின்றனர். பலருக்கு அவர்கள் குடியிருக்கும் காணிகளுக்கு உறுதி இல்லாவிடினும், இலங்கையில் காணிச் சட்டவரைமுறை வர முன்பேயே அவர்கள் அங்கு குடியேறிவிட்டனர். அத்துடன் இலங்கை சட்டத்தின், 71 ஆண்டு திருத்தத்தின்படி இந்த மக்களுக்கே அந்தக் காணிகள் உரித்தானவை. சுதந்திரத்துக்குப் பின்னால் பல அரசுகள் மாறினாலும்,அதிகார வர்க்கம் இதுவரையில் அவர்களுக்கான உறுதிகளை நாசுக்காக மறுத்தே வந்துள்ளது. காரணம் அவர்கள் குடியிருக்கும் ஞடயஎந ளைடயனெ பகுதி இலங்கையின் முக்கிய நகரமான கொழும்பின் இதயப் பகுதியில் அமைந்துள்ளது. இதனால் இலங்கையிலேயே மிகவும் பெறுமதியான காணிகளாக இவை கருதப்படுகின்றன.

கோத்தபாய ராஜபக்ஸ தலைமையிலான வுந ருசடியெ Development Authority(UDA), நகர அபிவிருத்தி அதிகாரசபை சில மாதங்களுக்கு முன் 570 குடும்பங்களை கொழும்பின் Slave Island - சிலேவ் ஜலண்ட் பகுதிலிருந்து வெளியேற்றி உள்ளது. குறிப்பாக மேற்படி முஸ்லீம்கள் வாழ்ந்த ஜாவா லேன் பகுதியிலிருந்த மக்களையே வெளியேற்றியுள்ளது. காரணம்,570 குடும்பங்களும் அரச காணியில் வசித்ததாக நகர அபிவிருத்தி அதிகார சபையால் கூறப்பட்டது. அவர்களை வெளியேற்றியதன் பின்னணியில் உள்ளது இந்திய பெரும் முதலாளித்துவ நிறுவனமான டாடா நிறுவனமாகும். 2010 இல் கோத்தபாய ராஜபக்ஸ தலைமையிலான The Urban Development Authority (UDA)- நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கும், டாடா ஹௌசிங் -TATA Housing நிறுவனத்துக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட 400 மில்லியன் டொலர் பெறுமதியான ஒப்பந்தம் கைச்சாத்தானது. இவ் ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே மேற்படி 570 குடும்பங்கள் சிலேவ் ஜலண்ட் .பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்டன

570 குடும்பங்களும் வெளியேற்றப்படுவதற்கு முன்பு நகர அபிவிருத்தி அதிகாரசபையால் மாற்று வீடு தருவதாக உறுதி கூறப்பட்டது. அத்துடன் அவ் வீடுகள் தயார் செய்யும் வரை மக்கள் தங்குவதற்கான வீட்டு வாடகையையும் தாம் தருவதாகவும் நகர அபிவிருத்தி அதிகார

> தமது வீடுகள் பாரிய இயந்திரங்கள் மூலம் உடைக்கப்படுவதைப் பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர அவர்களால் எதுவும் செய்ய முடியாதுள்ளது. காரணம் அவர்களின் வீடுகள் உள்ளபகுதிக்குள் எவரும் போக முடியாத வண்ணம் கனரக ஆயுதம் தாங்கிய இராணுவ பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

சபையால் கூறப்பட்டது. ஆனால் இவை அனைத்தும் வாய் வழி வாக்குறுதியாகவே உள்ளது. எழுத்து மூல ஒப்பந்தத்தை சிலர் கோரினாலும் இன்று வரை அது வழங்கப்படவில்லை. தற்போது எல்லாம் இழந்து மக்கள் அந்தரிக்கின்றனர். தமது வீடுகள் பாரிய இயந்திரங்கள் மூலம் உடைக்கப்படுவதைப் பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர அவர்களால் எதுவும் செய்ய முடியாதுள்ளது. காரணம் அவர்களின் வீடுகள் உள்ளபகுதிக்குள் எவரும் போக முடியாத வண்ணம் கனரக ஆயுதம் தாங்கிய இராணுவ பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

அனைத்தும் இழந்து அநாதரவான இந்த மக்களுக்குக் குரல் கொடுப்பதற்கு எந்தவொரு சமூக அமைப்புகளும் தயாராக இல்லை. இப்பிரச்சனையில் தலையீடு செய்ய முயன்ற சர்வதேச அரசு சார்பற்ற நிறுவனங்கள் “தருவதைப் பெற்றுக் கொண்டு, சத்தம் போடாமல் போக வேண்டும்” என்று மக்களுக்கு கூறுவதன் மூலம் மறைமுக ஆதிக்க சக்திகளின் அடிவருடிகளாகவே செயற்படுகின்றனர். இப்பிரச்சனையில் மக்கள் நலம் சார்ந்து போராடும் சக்திகளின் தலையீடு உடனடியாகத் தேவைப்படுகிறது.

**ஐ.நா விசாரணை குழு தொடர்பாக 18ஆம் திகதி இடம்பெற்ற பாராளுமன்ற விவாதத்தில் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் குமார ஆற்றிய உரையின் சுருக்கம்**



# அரசாங்கத்தின் ஏகாதிபத்திய எதிர்ப்பு சுத்தபொய்!

## –பாராளுமன்ற உறுப்பினர் அஜித் குமார

**கௌரவ சபாநாயகர்அவர்களே,**

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது நிராயுதபாணிகளான குடிமக்கள் கொல்லப்பட்டார்களா? இல்லையா? என்பதை கண்டறிய ஐ.நா.மனிதஉரிமை கவுன்சில் விசாரணைக் குழு நியமிக்கும் தீர்மானத்தை ஏற்றுக் கொள்வதா? இல்லையா?

என்பது தொடர்பில் விவாதிப்பதற்க்காக அரசாங்கம் பாராளுமன்றத்தில் பிரேரணை ஒன்றை முன்வைத்திருக்கிறது.

கடந்த கால வரலாற்றை திரும்பிப்பார்த்தால் தொடர்ந்து கொள்ளக்கூடிய உண்மைதான் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகள்,அபிலாசைகள் மறுதலிக்கப்டும் சந்தர்ப்பங்களில் எல்லாம் இவ்வாறான யோசனைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு வருகின்றன என்பதாகும்.

அரசாங்கம் ஏகாதிபத்தியத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கு முகமாக இந்த பிரேரணைக்கு ஆதரவு தரும்படி கேட்கிறது. ஐ.நா. வும் அவர்களுக்கு ஆதரவான நோக்கம் என்ன என்பது தெளிவாகிறது.இசைப்பியா என்ற இளம்பெண் தடுப்பு காவலில் வைத்து வன்புனர்ச்சிக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார். இந்த இளம்பெண் எல்.ரி.ரி.ஈ இயக்கத்தில் லெப்டினன்ட் பதவி வகித்தவர்என அரசு கூறிவருகிறது.

அது வேறு விடயம் இந்த இளம்பெண் தடுத்து வைத்திருந்த சமயத்தில்வன்புனர்ச்சிக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கிறார்.என்பதே இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.இதேபோல் 1989,90களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளம்பெண்கள் வன்புனர்ச்சிக்கு உட்படுத்தப்பட்ட பின் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்ட சம்பவங்களுக்கான சாட்சியங்கள் உண்டு அவர்கள் யுத்தம் ஆட்சியாளர்களின் குறுகிய அரசியல் தேவைகளுக்காக வெளிப்படுத்தும் எதிர்ப்பு நடவடிக்கைக்கு நாம் துணைபோகமாட்டோம். அதேபோல் வரலாறு பூராகவும் மனிதஉரிமை

பிரிவினரும் ஜனநாயகத்திற்காகவும் நியாயத்திற்காகவும் விசாரணைக்கு ஆதரவு கோரிநிற்கின்றனர். உண்மையில் இது பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட வேண்டிய விவகரமா?

இது அரசாங்கம் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளை மூடிமறைப்பதற்குப் பயன்படுத்தும் தந்திரோபாயமாகும். இன்றைய சந்தர்ப்பத்தில் சமூகத்தில் எழுச்சிபெற்றிருக்கும் கருத்தாடல்களை மூடிமறைக்க அரசாங்கம் முயற்சிப்பதை தோற்கடித்து அதை முன்னுக்கு கொண்டுவர பயன்படுத்த வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. இத்தேவைக்காவே இந்தச்சந்தர்பத்தை பயன்படுத்திக் கொள்கின்றோம். அரசாங்கம் நெருக்கடிக்குள் சிக்கும் போதும் தேர்தல்களின் போதும் கையாளும் தேசாபிமானம் ஏகாதிபத்திய எதிர்ப்பு இனவாதம் போன்ற ஆயுதங்களை கையிலெடுக்கும். இதுவும் அதுபோன்ற தந்திரோபாயமேயாகும்.

இந்த பிரோரணை பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டாலும் 30வருடகால யுத்த நெருக்கடிகளுக்குள்ளான மக்களுக்கு நியாயம் கிடைக்கும் என நாம் நம்பவில்லை. ஐ.நா மனிதஉரிமை ஆணைக்குழுவும் அவர்களின் ஆதரவாளர்களும் இறுதிக்கட்ட யுத்தத்தில் நிராயுதபாணியான சிவிலியன்கள் கொல்லப்பட்டதை மட்டுமே முன்னிலைப்படுத்தி விசாரணைக்குழுவை நியமித்துள்ளார்கள்.

30வருடகால யுத்தத்தில் மனிதத்துவத்துக்கு எதிரான கொலைகள் பற்றி அவர்களுக்கு அக்கறையில்லை. இதிலிருந்து அவர்களது உண்மையான

“**அரசாங்கத்தின் புனரமைப்பு நடவடிக்கைகளால் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள தாகவும் தமிழ் மக்களின் புனர்வாழ்வு திட்டங்களுக்கும் இடையூறு எனவும் இந்த யோசனையில் கூறப்பட்டுள்ளது .இவ்வாறு கூறுகின்ற அரசாங்கம் கடந்த கால வரலாற்றை மறந்து விடும்படியும் கூறுகின்றது.**”

புரிந்தவர்களா?

யூ.என்.பி அரசாங்கம் யாழ் நூலகத்தை எரியூட்டியதற்குப் பதில் சொல்ல வேண்டியது யார்? என வாரப் பத்திரிகை ஒன்று அண்மையில் கட்டுரை வெளியிட்டிருந்தது. இதற்கு முன்பிருந்தே யுத்தத்தை தொடக்கியவர்கள் யார்? உதவியவர்கள் யார்? என்பவை தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ள தேவையில்லையா? யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டாமா? வடக்கு,கிழக்கு இளைஞர் யுவதிகள் மற்றும் கர்ப்பிணிதாய்மாரையும் மனித வெடிகுண்டுகளாக மாற்றிய சமூக பொருளாதார அரசியல் காரணிகளை புறந்தள்ளி வெறுமனே இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற யுத்தக்குற்றம் தொடர்பாக மட்டுப்படுத்தி விவாதிப்பது பொருத்தமானதல்ல இதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. இவைதான் லிபரல்வாதிகளின் நிகழ்சி நிரலாகும்.

இந்த நிலைமைகளை விளங்கிக்கொள்ள முடியாத மீறல்களுக்கு துணைபோகும் நிறுவனம் தான் ஐ.நா சபை. அவர்களுக்கு இந்த பிரச்சினைக்கு உண்மையான தீர்வு தேவையில்லை. இன்று அவர்கள் முழு உலகிலும் தங்களது நிகழ்ச்சி நிரலை செயற்படுத்தி வருகிறார்கள்.

இது போன்ற நிறுவனங்கள் இலங்கையின் ஒடுக்கப்பட்ட சிங்கள,தமிழ்,முஸ்லிம் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றி வைப்பார்கள் என எதிர்பார்க்க முடியாது. இவ்வாறானவர்களுக்கு நாம் உதவத் தேவையில்லை. மறுபக்கத்தில் இந்த அரசாங்கம கூறுகிறது. ஏகாதிபத்திய வாதிகள் எமது நாட்டில் தலையீடு செய்வதை அனுமதிக்க முடியாது எனவே எமக்கு ஆதரவு தாருங்கள் என கேட்கிறார்கள்.

இதை யார் சொல்கிறார்கள். சுதந்திரக்கல்வி மற்றும் சுதந்திர சுகாதார சேவைகளை சந்தைப் பொருளாக்கும் ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரலுக்கேற்ப செயல்படுத்தும் அரசாங்கம் சொல்கிறது. விவசாயிகளின் விதை உற்பத்தி உரிமையை மறுதலிக்கும் ஓய்வூதியம் பெறுவோரின் கொடுப்பனவுகளை வெட்டிக் குறைக்கும் ஒடுக்கப்பட்ட மக்களின் மானியங்களை வெட்டித்தள்ளும் ஏகாதிபத்தியவாதிகளின் சந்தைத் தேவைக்கேற்ப சட்டங்களை தயாரிக்கும் அரசாங்கம் சொல்கிறது.

ஏகாதிபத்தியத்துக்கு எதிராக அணிதிரளும்படிவெலிவேரிய ”ரத்துபஸ்” பகுதி மக்களின் குடிநீரை நஞ்சாக்கும் நிவனங்களுக்கு ஆதரவாக செயல்படும் அரசாங்கம் கேட்கிறது ஏகாதிபத்தியத்துக்கு எதிராக தமக்கு ஆதரவுதரும் படியாகும்.எனவே அரசாங்கத்தின் ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பது சுத்த பொய்யாகும் இந்த நாட்டை சகல மட்டத்திலும் ஏகாதிபத்தியத்திற்கு தாரை வார்க்கின்ற அரசாங்கம் தனது பிழையான நிகழ்ச்சி நிரல்களால் நெருக்கடிக்குள்ளாகும் போது பராளுமன்றத்தில் யோசனை சமர்ப்பித்து ஏகாதிபத்தியத்திற்கு எதிராக தமக்கு ஆதரவு அழிக்கும்படி கேட்கிறார்கள்.

அரசாங்கத்தின் புனரமைப்பு நடவடிக்கைகளால் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள தாகவும் தமிழ் மக்களின் புனர்வாழ்வு திட்டங்களுக்கும் இடையூறு எனவும் இந்த யோசனையில் கூறப்பட்டுள்ளது .இவ்வாறு கூறுகின்ற அரசாங்கம் கடந்த கால வரலாற்றை மறந்து விடும்படியும் கூறுகின்றது.

யுத்தத்தில் மரணித்தவர்கள் யாராக இருந்தாலும் மனிதர்கள் என்ற வகையில் அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை செய்தாக வேண்டும் அவர்களுக்கு ஏன் இது நடந்தது? என்பதை ஆராய வேண்டும் இந்தப் பொறுப்பில் இருந்து யாரும் விலகிவிட முடியாது இந்த யுத்தத்தில் மரணித்தவர்கள் சிங்களவரா,தமிழரா,முஸ்லிமா? என்பற்கு அப்பால் மனிதர்கள் என்ற வகையில் அவர்களின் மனித உரிமை தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் இதற்காக மனசாட்சி உள்ள அனைவரும் குரலெழுப்ப வேண்டும் அதை விடுத்து இன மதவாதிகளின் பொறியில் சிக்கக்கூடாது.

அதே போல் பொய்யான மனித உரிமை பற்றி குரல் எழுப்பும் ஐ.நா சபை போன்ற சர்வதேச அமைப்புகளின் ஏமாற்றுகளுக்குள் சிக்கி விடாமல் அதற்குப் பதிலாக நீங்கள் தலையீடு செய்யுங்கள் திருத்தங்கள் சமர்ப்பிப்பதன் மூலம் இந்த யோசனைக்கு அங்கீகாரம் கொடுப்பதை தவிர வேறு எதுவும் நடக்கப்போவதில்லை எனவே நாங்கள் அனைத்து மக்களிடம் கேட்டுக் கொள்வது மனிதத்துவத்தை பாதுகாக்க முன்வாருங்கள் என்பதாகும்.








# மீனவர்களின் எரிபொருள் மானியத்துக்கான போராட்டம் வெற்றி!

நீர்கொழும்பு, புத்தளம் மற்றும் மேற்குக் கரையோர மீனவர்கள், எரிபொருள் விலைஉயர்வுக்கு எதிராகவும், எரிபொருள் மானியம் கோரியும் 18.06.2014காலையிலிருந்து சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர். போராட்டம் நீர்கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இலங்கை அரசுக்கும் மீனவர்களுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் அடிப்படையில் ஏற்பட்ட உடன்பாடு காரணமாக, உண்ணாவிரதம் தற்போது (19.06.2014) தற்காலிகமாக முடிவுக்கு வந்தது.

இப்போராட்டம் பற்றிய விபரம் வருமாறு :

2012 இல் புத்தளம் மற்றும் மேற்குக்கரை மீனவர்கள் எரிபொருள் விலையுயர்வுக்கு எதிராக பாரிய போராட்டங்களை முன்னெடுத்தனர். இப்போராட்டங்களை மஹிந்த அரசு இராணுவத்தையும்,புலனாய்வுப் பிரிவையும் உபயோகித்து முறியடித்தது. இராணுவம் வன்முறை உபயோகித்து, போராடிய புத்தள மீனவர்கள் பலரை காயப்படுத்தியதுடன், அந்தனி என்ற இளம் மீனவரையும் படுகொலை செய்தது. இப்படுகொலையுடன், அன்று அப் போராட்டங்கள் முடிவுக்கு வந்தன. இதன் பின் நடந்த நீதிவிசாரணையை முறியடித்த அரசு, எரிபொருள் விலை ஏற்றத்தால் ஏற்படும் பாதிப்பை தவிர்க்கும் வகை யில் மீனவர்களுக்கு மானியம் தருவதாக அறிவித்தது.

இதன் பின் சில மாதங்கள் எரிபொருள் மானியம் மீனவர் சமாசங்கள் ஊடாகக் மீனவர்களுக்கு வழங்கப்பட்டது. ஆனால் அது 2013 ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து வழங்கப்படாது இழுத்தடிக்கப்பட்டது. இதேநேரம் எரிபொருள் விலையும் பல மடங்கு ஏறியது. அரசுடன் மீனவ சங்கங்கள் பல சுற்றுப்பேச்சுவார்த்தைகளை நடாத்தியும் கூட எந்தவிதப் பலனும் கிடைக்கவில்லை. அப்பேச் சுவார்த்தைகளை குழப்பியது மட்டுமல்ல, மீனவர்கள் மீது புதிய புதிய சட்டங்களையும் திணித்தது. கடந்த வருடம் இலங்கையில் அனைத்து மீனவர்களும் காப்பறுதி செய்ய வேண்டுமென்ற சட்டத்தைக் கொண்டு வந்தது. ஒரு சந்தர்ப்பத்தில் காப்புறுதி செய்தால் மட்டுமே, எரிபொருள் மானியம் வழங்கப்படும் எனவும் அறிவித்தது. இதில் உள்ள பிரச்சனை என்னவென்றால், காப்புறுதி செய்ய ஒரு மீனவனுக்கு தேவையான பணம், ஒரு நடுத்தர வருமானமுள்ள மீனவனின் மூன்று மாத வருமானத்துக்கு நிகரானதாகும் இத்தொகையானது அரசின் எரிபொருள் மானியத்தை விட பெரும் தொகையாகும். இக்காப்புறுதி நாடகமானது, அரச அதிகாரம் உள்ளோருக்கு நெருக்கமான சில காப்புறுதி நிறுவனங்களின் இலாபம் கருதியே அரங்கேற்றப்பட்டதென்ற விடயம் சொல்லித் தெரியவேண்டியதல்ல.

இதன் பின்- இறுதியாக நடந்த பேச்சுக்களில் மலிவாக வலை, மடங்கு, கயிறு, இயந்திரப்பாகங்கள், மிதவைகள் போன்ற கடற்றொழில் சார் தொழில் உபகரணங்களை மலிவாக தருவதாகவும், எரிபொருளை மீனவர்கள் சந்தை விலையில் கொள்வனவு செய்ய வேண்டுமெனவும் அரசு கோரிக்கை விடுத்தது. இக்கோரிக்கையின் பின்னாலுள்ள இரகசியம் என்னவென்றால், இலங்கை அரசுடன் நெருக்கமாகவுள்ள, நிறுவனமொன்று சீனாவிலிருந்து கடற்றொழில் சார் உபகரணங்களை இறக்குமதி செய்வதேயாகும்.

இந்தப் பின்னணியிலேயே தான் அரசின் கோரிக்கைகளையும், சட்டங்களையும் எதிர்த்த மீனவ சமூகம், எரிபொருள் விலைஉயர்வுக்கு எதிராகவும், எரிபொ மானியம் கோரியும் 18.06.2014 காலையிலிருந்து சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தது.

உண்ணாவிரதப் போராட்டத்தின் முதற்கட்டமாக,கொழும்பின் தென்பகுதியான மொறட்டுவ தொடக்கம், புத்தளம், சிலாபம் வரையான கடற்றொழிலாளர்கள் கால் நடைப்பயணத்தை மேற்கொண்டு நீர்கொழும்பில் ஒன்றுகூடினர். அங்கு உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பித்த சில மணிநேரங்களிலே, ஆயிரத்துக்கும் மேலான மீனவச் சமூகப் பெண்கள் தமது பங்கிற்கு பாரிய ஆர்ப்பாட்டத்தை நீர்கொழும்பு நகரசபை முன்பாக நடத்தினர்.

இப்போராட்டம் முஸ்லீம் சகோதரர்களின் மீது நடைபெற்ற வன்முறை மற்றும் அதை எதிர்த்து சமவுரிமை இயக்கத்தால் கொழும்பில் 18.06.14 அன்று ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் ஆர்ப்பாட்டம் போன்றவற்றால் ஊடகங்களின் கவனத்தை ஈர்க்கவில்லை. ஆனால், 2012 இல் போராட்டம், அதில் தோழர் அன்ரனி படுகொலை செய்யப்பட்டது போன்ற நிகழ்வுகளின் அனுபவத்தை மறுபடியும் விரும்பாத அரசு, 18.06.14 இரவே மீனவ சமூகத்துடன் பேச்சுவார்த்தை நடாத்த கத்தோலிக்க திருச்சபையின் கருதினால் மல்கொம் ரஞ்சித்தை உதவிக்கு அழைத்தது. அவர் தனது சேவகர்களான சில குருமார்களை அனுப்பி,உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட்டு விட்டு, செபவழிபாடுகளில் ஈடுபடுமாறும், அதனால் பிரச்சனைக்குத் தீர்வு கிடைக்குமெனவும் கூறி, போராட்டத்தை தமது மத ஆதிக்கத்தை உபயோகித்து இடைநிறுத்த முயற்சி செய்தார். முன்னிலைச் சக்திகளான போராட்டத் தலைமை அக்குருமார்களின் கோரிக்கையை மறுத்ததுடன், கர்தினால் மல்கம் ரஞ்சித்தை நேரடியாக பேச வருமாறும், மத நம்பிக்கையைப் பாவித்து மக்களின் உரிமையைப் பறிப்பதற்குத் துணை போக வேண்டாம் எனவும் திருச்சபைக்கு குருமார்கள் ஊடாக வலியுறுத்தியது. இதன் பயனாக கர்தினால் மல்கம் ரஞ்சித் 19.06.2014 அன்று மீனவப் போராளிகளுடன் நேரடியாக பேச்சுவார்த்தையில் பங்குகொண்டார்.

> **“மத நம்பிக்கையைப் பாவித்து மக்களின் உரிமையைப் பறிப்பதற்குத் துணை போக வேண்டாம் எனவும் திருச்சபைக்கு குருமார்கள் ஊடாக வலியுறுத்தியது. இதன் பயனாக கர்தினால் மல்கம் ரஞ்சித் 19.06.2014 அன்று மீனவப் போராளிகளுடன் நேரடியாக பேச்சுவார்த்தையில் பங்குகொண்டார்.”**

தமிழ் வாசகர்கள் யார் இந்த மல்கம் ரஞ்சித் என்பதை தெரிந்து கொள்வது மிக முக்கியமானது. கத்தோலிக்க திருச்சபையின் கர்தினால் பதவியிலுள்ள மல்கம் ரஞ்சித் யாரெனில், 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்கால் அவலத்தை அரங்கேற்றிய கோத்தபாயவுக்கு "Doctor of Letters" என்ற கவுரவ முனைவர் பட்டத்தையும், மஹிந்தவுக்கு "Doctor of Law" என்ற கவுரவ முனைவர் பட்டத்தையும், "யுத்தத்தை வெற்றி " கொண்டதற்காக வழங்கியவர். அப்போது அவர் கொழும்பு பல்கலைக் கழகத்தின் வேந்தராக இருந்தார். இன்று மஹிந்த குடும்பத்தின் மிக நெருங்கிய நண்பராக இருந்து வரும் மல்கம் ரஞ்சித், ராஜபக்ஸ அரசுக்கு வத்திக்கானுடனும், பாப்பரசருடனும் நெருங்கிய தொடர்பு உருவாகக் காரணமானவர். அரசு சார்பில், தற்போதுள்ள பாப்பரசர் பிரான் அவர்களை நேரடியாகச் சந்தித்து இலங்கைக்கு அவரை வருமாறு அழைப்பு விடுக்க வழிவகுத்தவரும் மல்கம் ரஞ்சித் தான்.

போராட்டத் தலைமையுடன், அரசு சார்பில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட கர்தினால் மல்கம் ரஞ்சித் முன்னால் நான்கு நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டது.

1. கடற்றொழில் சார்ந்து பாவனையிலுள்ள அனைத்துவகை எரிபொருட்களையும் சந்தைவிலைக்கும் குறைவாக, கட்டுப்பாட்டுவிலையில் மீனவர்களுக்கு விற்பனை செய்ய வேண்டும்

2. அப்படி இல்லையேல், எரிபொருளீன் சந்தைவிலைக்கும்,உற்பத்திச் செலவுக்கும் இடையிலான ஒரு தொகையை அரசு மானியமாக கடற்தொழிலாளர்களுக்குத் தரவேண்டும். ( உற்பத்தி செலவு 1 லீற்றருக்கு 50,- ரூபா என்றால், சந்தைவிலை 110,- ரூபாய். மீனவர்கள் கோரிக்கை என்னவெனில் எரிபொருளை 75,- ரூபாய்க்கு விற்பனை செய்ய வேண்டும் என்பதாகும்)

3. 2012 இல் தோழர் அன்ரனி படுகொலை செய்யப்பட்டதன் பின் வழங்கப்பட்டு, 2013 இன் நடுப்பகுதியில் நிறுத்தப்பட்ட எரிபொருள் மானியத்தொகையை, நிறுத்தப்பட்ட நாளிருந்து வைகாசி 2014 வரை மீனவர்களுக்கு தருவது.

4. இன்று இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் நவதாராள பொருளாதாரத்துக்கு இசைவாக இயற்றப்படும் மீன்பிடியைப்பாதிக்கும் சட்டங்களை நிறைவேற்றுவதை நிறுத்த வேண்டும். (உதாரணமாக,கடற்றொழிலாளர் காப்புறுதிச் சட்டம், படகில் பாதுகாப்பு அங்கி அணிந்தபடி மீன் பிடியில் ஈடுபடவேண்டும் என்பன போன்ற சட்டங்கள்)

கோரிக்கைகளை அரசு சார்பில் பெற்றுக்கொண்ட மல்கம் ரஞ்சித் பேச்சுவார்த்தையின் ஆரம்பத்தில்,

□இதைப் பற்றிப் பிறகு பேசலாம். இப்போ போராட்டங்களைக் கைவிடுங்கள். இப்போ அரசு இக்கட்டான நிலையில் உள்ளது. தேவையில்லாத தலையிடியை அரசுக்கு தரக் கூடாது.நான் அரசுடன் பேசி முடிவு சொல்கிறேன்.□ எனக் கூறினார். மீனவர் போராட்டத் தலைமை அதை மறுத்ததுடன், உடனடியாக அரசுடன் தொடர்பு கொண்டு பதில் கூறுமாறும், சரியான பதில் கிடைக்கும் வரை தாம் உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிடப் போவதில்லையென கடும்பிடியாக நின்றனர். இதனால் பேச்சுவார்த்தை சில மணிநேரம் ஒத்திவைக்கப்பட்டது.

ஈற்றில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ வுடன் தாம் பேசியதாகவும் பின்வரும் கோரிக்கைகளை அவர் நிறைவேற்ற உடன்பட்டதாகவும் மல்கம் ரஞ்சித் மீனவர் போராட்டத் தலைமைக்கு அறிவித்தார். அவையாவன :

1. 2014 புரட்டாதி மாதத்திலிருந்து,கடற்றொழில் சார்ந்து பாவனையிலுள்ள அனைத்துவகை எரிபொருட்களையும் சந்தைவிலைக்கும் குறைவாக, கட்டுப்பாட்டு விலையில் மீனவர்களுக்கு விற்பனை செய்ய அரசு உடன்படுகிறது.

2. 2013 நடுப்பகுதியிலிருந்து நிறுத்தப்பட்ட எரிபொருள் மானிய தொகை 2014 வைகாசி மாதம் வரை வழங்க அரசு உடன்படுகிறது.

மேலும் மஹிந்த அரசு இவற்றை நிறைந நிறைவேற்றுமென்ற நம்பிக்கை மீனவர்களுக்கு இல்லாமை யால்- உடன்பட்ட கோரிக்கைகளை அரசு நிறைவேற்றத்

02 ஆம் பக்கம் பார்க்க...

# பெண்ணின் சமூகத்தன்மை நீங்குமா?



தனிவுடமையிலான அமைப்பில், தன்னலமே மனிதசாரமாகின்றது. தனிச் சொத்துடமை தொடங்கி தன்னலத்தை அடிப்படையாகக் கொண்ட அமைப்பு, எல்லாவகையான சமூகத்தன்மை கொண்ட குடும்ப வடிவங்களையும் சிதைக்கின்றது. மனித உறவுகள், பண்பாடுகள், கலாச்சாரங்கள் என அனைத்தும், (நுகர்) பொருள் சார்ந்ததாக மாறி வருகின்றது. அதாவது பொருளை முன்னிறுத்தி விடுகின்றது. பொருட் பரிமாற்றம் சார்ந்த உறவாக, அதன் சந்தைப் பெறுமதியைக் கொண்டு உறவை அளவிடும் தன்னலமே, இரண்டு மனிதர்களுக்கு இடையிலான உறவின் எல்லையைத் தீர்மானிக்கின்றது. இன்று எஞ்சியுள்ள ஆண்-பெண் குடும்ப அமைப்பிலும் சரி, தாய்-குழந்தைக்கு இடையிலான உறவிலும் சரி, தீர்மானகரமான பங்கை வகிப்பது நுகர்பொருளும், அது கொண்டிருக்கக் கூடிய சந்தை மதிப்பும் தான்.

சந்தையின் மதிப்பு அடிப்படையில் பொருளை நுகர்வதே மகிழ்ச்சியானதெனக் கருதுமளவுக்கு, அதுவே சமூகத் தகுதியாக கருதுமளவுக்கு சமூகத் தன்மையற்ற தன்னலமே முதன்மை பெற்று வருகின்றது. இதையே சமூகத்தின் தெரிவாகத் தேர்ந்தெடுக்கும் தன்மையானது, ஆண்-பெண் கொண்ட குடும்ப உறவை மட்டும் முரணாக்கவில்லை, பெண்-குழந்தை கொண்ட குடும்ப உறவை கூட முரணாக்கி தகர்க்கின்றது.

இதற்கான அடிப்படையாக இருப்பதானது, தன் சொத்து என்ற தனிவுடமைக் கண்ணோட்டத்துடன், தனிச் சொத்துடமைக் கண்ணோட்டம் நின்றுவிடவில்லை. தன் கூலி என்ற தனிவுடமைக் கண்ணோட்டத்தையும், தான் மட்டுமே நுகர்வதற்கானது என்ற தன்னலத்தையும் உருவாக்குகின்றது. இதுவே தனிமனித உரிமையாகக் கூட விளங்கிக் கொள்ளப்படுகின்றது. இந்தத் தனிவுடமை அமைப்பு முறையிலான இத்தெரிவை, கேள்விக்குள்ளாக்கக் கூட முடியாது. ஆண்-பெண் என்ற எந்த விதிவிலக்கும் இன்றி, தனது உழைப்புக்கான கூலியை தன் குடும்ப அமைப்பில் பகிர்ந்து கொள்வதானது, தனிவுடமை முறைக்கே முரணானதாக மாற்றிவிடுகின்றது. குடும்பத்தில் சிதைவுகளானது, இந்த முரணில் இருந்து தான் அகலமாகத் தொடங்குகின்றது.

இங்கு ஒரு கேள்வியை எழுப்பமுடியும். ஒரு தாய் தன் குழந்தையைச் சார்ந்த சமூகத் தன்மையுடன், எதற்காக தன்னலமற்று வாழவேண்டும்!? இதற்கு பகுத்தறிவுபூர்வமாகக் கேட்டால், இந்த தனிவுடமை அமைப்பில் விடை கிடையாது. இது என்ன பெண்ணின் சொந்த விதியா? அவளின் கடமையா? பெண் என்ற அடையாளமா?

இதற்கான விடையாகத்தான், தனிவுடமை சார்ந்த ஆணாதிக்க அமைப்புமுறை இயங்குகின்றது. இதில் குறைந்தது ஏதோவொன்றை, பெண்ணின் தாய்மை சார்ந்த சமூகத் தன்மை ஊடாகத் திணித்து விடுகின்றது. ஆண்-பெண் முரணின் சாரமே, தன்னலத்தை அடிப்படையாகக் கொண்ட இந்தத் தனிவுடமை அமைப்பு முறையாக இருக்கின்றது. தனிவுடமை உருவாக்கும் தன்னலமான வாழ்க்கை முறைக்கும், அதன் உணர்வுக்கும் முரணாக, பெண்ணை சமூகத் தன்மையுடையவளாக வாழ வைக்கமுடியாது. அதாவது பெண்ணை தனிவுடமை கோரும் தன்னலத்துக்கு மாறாக, தொடர்ந்து காட்ட முடியாத முரணாக மாறுகின்றது. சமூக உணர்வுடன் மற்றவர்களுக்கு சேவை செய்யும் பெண்ணாக வாழ் என்று கோருவது, பெண்ணின் தன்னலம் சார்ந்த தனிமனித உரிமை மறுப்பாக மாறுகின்றது. பெண் கூட இன்று தனிவுடமை கண்ணோட்டம் பெற்றவளாக, தாய்மையை அடிப்படையாகக் கொண்ட சமூகத் தன்மையை இழத்தலே, இன்றைய பொது விதியாகின்றது. இது தனிப்பட்ட பெண்ணின் அல்லது பெண்களின் தெரிவல்ல, இந்த தன்னலம் சார்ந்த தனிவுடமை அமைப்பு முறையின் உள்ளடக்கமாகும்.

பெண்ணில் இருந்து சுதந்திரமாக்குகின்ற ஆணுக்கு ஒத்த நுகர்வாக்கத்தையே, பெண்ணின் சுதந்திரமாக வழி காட்டுகின்றது. இதையே பெண்ணியமாக கருதுகின்ற தனிவுடமைக் கண்ணோட்டமாகக் கூட, இது மேலோங்கி வருகின்றது. பெண்ணியம் என்பது சமூகத் தன்மையை அடிப்படையாகக் கொண்டதா? அல்லது சமூகத் தன்மையை இழந்த தன்னலமான சுயநலமா? என்ற இரு வேறு கண்ணோட்டங்களை உருவாக்குகின்றது. அதேநேரம் சமூகத் தன்மையை இழத்தல் தான், அதாவது சமூகத்தன்மையற்ற ஆணின் நிலைக்கு மாறுதலையே, பெண்ணியமாக இந்த அமைப்புக்குள் வைத்துப் புரிந்து கொள்ளப்படுகின்றது. பெண்ணின் தாய்மையிலான சமூகத் தன்மையை நோக்கி சமூகத்தை இழுத்து



வருவதே பெண்ணியமாக இருக்கவேண்டிய இடத்தில், அதை இழத்தல் பெண்ணியமாக அரங்கேறுகின்றது.

இது பெண்ணியம் குறித்தானதோ அல்லது பெண் சார்ந்த விடையமோ அல்ல. மாறாக சமூகம் குறித்தான கேள்வியாகும். இன்று என்ன வகையான சமூகம் தேவை என்பதே, இவை அனைத்தையும் தீர்மானகரமாகக் கோருகின்றது.

மூலதனத்தைக் குவித்தலும் கூலியை நுகர்தலும் ஒரு நேர்கோட்டிலான அச்சில் இயங்கும் போது, சமூக உறவுகளுக்கு எந்த இடமுமில்லை. கூலியைக் கூட தன்னலத்துடன் நுகர்தலே தனிவுடமை அமைப்பின் பொது விளைவாகும் போது, பகிர்ந்து உண்ணும் சமூகத்தன்மையை அழித்து விடுகின்றது.

கூட்டு உழைப்பும், அதைக் கூட்டாக நுகர்தலும் தான், மனித உறவுகளின் சமூகத் தன்மைக்கான உள்ளடக்கம். மகிழ்ச்சியான மனித உறவுகளான, சமூகத் தன்மை கொண்ட வாழ்க்கை முறையாகும். தனியாக வாழ்தலிலும், தன்னலத்துடன் வாழ்தலிலும், எந்த சமூக உறவையும் காண முடியாது. தன் உழைப்பை வழங்கியும் பகிர்ந்தும் கொண்ட கூட்டு வாழ்க்கையில் இருக்க கூடிய மகிழ்ச்சியை, தனித்து தனக்கென நுகர்ந்து வாழ்வதால் பெற முடியாது. தனித்த நுகர்வே மகிழ்ச்சி என்னும் தன்னலம் முதன்மை பெற்ற அமைப்பில், மகிழ்ச்சியற்று தனித்து உளவியல் சிதைவுகளுடன் வாழ்தலே பொதுவான சமூக விளைவாகி வருகின்றது. உளவியல் சிதைவு கொண்ட இன்றைய வாழ்க்கை மீதான, போலியான பூச்சுத்தான் நுகர்வு பற்றிய தற்பெருமை. இதைக் கவர்ச்சியாக்கி நிற்பது, நுகர்வுக்குரிய பொருளின் சந்தைப் பெறுமானம். நுகர்பொருள் சார்ந்து சந்தைப் பெறுமானத்தையும், தற்பெருமையையும் மற்றவனுக்கு எதிராக முன்னிறுத்தி பெறும் மகிழ்ச்சியையே, தனிவுடமை அமைப்பு முறை முன்வைக்கின்றது. இந்த மகிழ்ச்சியானது சீழ் பிடித்த, மனித அவலமாக வடிகின்றது.

இதன் சாரத்தை விளங்கிக் கொள்வதானால், மூலதனக் குவிப்புக்கும் கூலி சார்ந்த நுகர்வுக்குமான இணக்கம் முரணற்றதாக இருக்கும் வரை, பண்ணையில் உள்ள விலங்கு நிலைக்குள்ளாகவே மனித உறவுகள் முடங்கி விடுகின்றது. தன் நுகர்வுக்காகவே உழைப்பும், வாழ்க்கை முறையுமாக மட்டுப்படுத்தப்பட்டு விடுகின்றது. இந்த வாழ்க்கை முறையானது, இரண்டு மனிதனுக்கு இடையிலான சமூகத் தன்மையை அழித்து விடுகின்றது.

உழைப்பானது மிருகத்தில் இருந்து மனிதனைப் பிரித்த போது, கூட்டான உழைப்பிலான சமூகப் பண்பை உருவாக்கியது. கூட்டாக உழைத்து நுகர்ந்து வாழ்தலை தனிவுடமை சிதைத்த போதும், இயற்கை உயிரியல் தன்மை சார்ந்த ஆண்-பெண்ணின் பாலியலிலும், தாய்மை சார்ந்து தாய்-குழந்தை இடையிலும் சமூகத் தன்மை எஞ்சிக் காணப்பட்டது. மிருகங்கள் கூட கொண்டிருக்கக் கூடிய சமூக உணர்வாக்கமாக இது இருக்கின்றது. ஆனால் தனிவுடமை அமைப்பிலான மனிதனோ, இன்று இதனைக் கைவிட்டு மிருகத்தைவிட கேவலமான உறவாக இதை மாற்றுகின்றான். ஆண்-பெண் பாலியல் உறவை சமூக உறவிற்கு வெளியில் நுகர்வுக்குரியதாக்கி, அதை நுகர்வுவெறியாக்கி, அதையும் திருப்தியற்ற பாலியல் உறவாக்கி விடுகின்றான். விதவிதமாக, வகைவகையாக வக்கிரமாக்கி, அதை நவீன விபச்சாரமாக்கி விடுகின்றான். இதன் மூலம் பாலியல் என்பதை வக்கிரமடைந்த, மகிழ்ச்சியற்ற பாலியல் நடத்தையாக்கி விடுகின்றான். உயிரியல் கூறான பாலியல் இயல்பாகத் தூண்டும் சமூக நடத்தைக்கு பதில், நுகர்வதை இலக்காகக் கொண்ட பாலியல் விபச்சாரமாக சிதைகின்றது.

இப்படி சமூகத்தன்மையும், சமூகப் பொறுப்புமற்றதான, மகிழ்ச்சியை தொலைத்துவிட்ட ஆண்-பெண், பெண்-குழந்தை உறவுகள் உருவாகி வருகின்றது. பாலியலை வெறும் நுகர்வாக்கி விபச்சாரமாக்குகின்றது. குழந்தை மீதான ஆணின் சமூகத் தன்மையை நலமடித்து விடுகின்றது. குழந்தையை பெண்ணின் மீதான சமூகச் சுமையாக்கி குழந்தையை வெறுக்க வைக்கின்றது. குழந்தையை வளர்த்தல் என்பது, பெண் தனது சுதந்திரத்துக்கு தடையாக கருதுமளவுக்கும், பெண் இயற்கையான உயிரியல் வாழ்க்கையில் இருந்தும் கூட அன்னியமாக்கப்படுகின்றாள். இந்த உயிரியல் அழிப்பு உளவியல் சிக்கலாக, மகிழ்ச்சியற்ற உள் நோயாகின்றது.

இயற்கை சார்ந்த உயிரியல் கூறாக இயங்கும் மனித இனவிருத்திக்குப் பின்னால் இருக்கும் சமூகத்தன்மையை அழிப்பது இன்று நடந்தேறுகின்றது. குழந்தையில் இருந்து ஆணை பிரித்துவிடுகின்ற ஆணாதிக்க நுகர்வாக சமூகம், பெண்ணின் மேலான சுமையாக குழந்தையை மாற்றி விடும் போது, குழந்தையை மறுத்தலித்து விடுவதையே பெண்ணின் எதிர்வினையாக்கி விடுகின்றது. பெண் கூட இந்தத் தனிவுடமை அமைப்பில் வாழ்பவள் என்பதால், இந்த தனிவுடமை கண்ணோட்டத்தை தன் தெரிவாக்குகின்றாள்.

இயற்கை சார்ந்து பெண்ணின் சமூக உயிரியல் தன்மையானது, அவள் வாழுகின்ற தனிவுடமை சமூகத்தின் பொது இயல்புக்கே முரணானது. பெண் இதில் இருந்து முரண்பட்டவளல்ல. தனிவுடமை சார்ந்த தன்னலமும், சுயநலமும் சார்ந்த நுகர்வைத் தூண்டும் சமூக அமைப்பில், குழந்தை என்பது பெண்ணுக்கு தடையாக மாறுகின்றது. குழந்தையில் இருந்து அன்னியமாகிய வாழ்க்கை முறைகளும், குழந்தையை வெறுக்கும் தனிவுடமை பெண்ணிய கோட்பாடுகளும் கூட உருவாகின்றது. குழந்தை பெண் சார்ந்து இருப்பதால், அதை வெறுப்பதை "பெண்ணியமாக" கூட முன்னிறுத்தப்படுகின்றது. அதாவது இவை தனிவுடமை நுகர்வாக்க அமைப்பில், தன்னலம் சார்ந்த தனிவுடமைக் கண்ணோட்டமாகும்.

தனிவுடமை உருவாக்கும் சமூகத்தன்மையற்ற தன்னலம், இனப்பெருக்கம் சார்ந்த பெண்ணின் உயிரியலிலான சமூகத்தன்மைக்கும் முரணானதாகும். இது ஆணற்ற குடும்பமாக எஞ்சிய பெண்-குழந்தையை அடிப்படையாகக் கொண்ட குடும்பத்தினுள்ளான, மற்றொரு குடும்பச் சிதைவுக்கும் இட்டுச் செல்லுகின்றது. தனிமனிதனாக தன்னலத்துடன் வாழ்தல், தனிவுடமை அமைப்பின் உள்ளடக்கம்.

எல்லாவகையான சமூகக்கூறுகளும், தனிவுடமைக்கும் அதன் தன்னலத்திற்கும் முரணானதே. இந்த வகையில் தனிவுடமைச்

02 ஆம் பக்கம் பார்க்க...

# சாதிகள் இ…
# கிணத்தில் வாளி…

கிட்டத்தட்ட ஒரு இருபது வருடங்களுக்கு முன்னர் அகதிவாழ்வு என்று இங்கு புலம்பெயர்ந்து வந்த காலம் தொடக்கம் இன்று வரையும் தமிழ் சிங்கள இன ஒற்றுமை பற்றியும், தமிழர்கள் மத்தியில் இருக்கும் சாதியக் கொடுமைகள் பற்றியும், அதிதீவிரமாய் கதைக்கும் ஒரு நண்பர்.

சாதியப் போராட்டங்கள், வெகுஜனப் போராட்டங்கள் என்று தன்னை இணைத்து சமூகப் போராளியாய் வாழ்ந்து.... இனி மேல் இலங்கையில் வாழ முடியாது என்று வெளியேறிய ஒரு தோழர். இருந்து பாருங்கோ தம்பி இந்தத் தமிழீழப் போராட்டம் இந்தத் தமிழ் மக்களை எங்கே கொண்டு போய் முடிக்கப் போகின்றது.... என்றும் அப்பவே தீர்க்கதரிசனமாய் கூறியவர், எல்லோராலும் அன்பாய் சதா என்று அன்பாக அழைக்கப்படும் தோழர் சதானந்தனுடன் சில நிமிடங்கள்.

கே: இப்போது பொதுவாக எங்கே சாதியிருக்கின்றது என்றும், இதுவெல்லாம் எப்போ முடிந்துபோன விடையங்கள்..... இதை நீங்கள் கொஞ்சப் பேர் தான் தூக்கிக் கொண்டு திரிகிறீர்கள் என்றும் சொல்லுகிறார்களே... இந்தச் சாதிப்பிரச்சினை உண்மையிலே முடிந்து விட்டதா........? இது பற்றிய உங்கள் கருத்து.......?

இது பேச்சளவில் வெறும் கண்துடைப்புத் தான். இந்தச் சாதியென்ற கொடுநோய் அன்றிலிருந்து இன்று வரையும் வெவ்வேறு வடிவங்கள் பெற்று மாறுகின்றதே ஒழிய இன்று வரையும் இது இல்லாமல் போகவில்லை. சில பேரது மனங்களில் ஒழிந்தும், மறைந்தும், பலபேரது மனங்களில் பூதாகரமாயும் வியாபித்திருக்கின்றது.

இது ஒரு மழுங்கடிப்பு முறை. இந்த நேரத்தில் இது ஒரு பிரச்சினை என்றால் தமிழுக்கும், இவர்கள் தூக்கிக் கொண்டு திரியும் இந்தத் தேசியப் போராட்டத்துக்கும் பங்கம் விளைவித்து, அவமானம் ஏற்பட்டுவிடும் என்று கருதித் தான் இப்படிச் சொல்லிக் கொண்டு திரிகிறார்கள்.

அந்தக் காலத்திலேயிருந்த கொமியூனிசக் கட்சியினரின் தொடர்ச்சியான புரட்சிகரமான போராட்டங்களினால் தான் இந்தச் சாதியானது பல இடங்களில் ஒழித்துக் கட்டப்பட்டது. சில இடங்களில் இந்தச் சாதியானது தனது நிலையையும் ஓரளவு தளர்த்திக் கொண்டதே ஒழிய அது இல்லாமல் போகவில்லை.

ஏன்... இன்று இந்தளவு அழிவுகளும் துன்பங்களும் நடந்த பிறகு கூட இந்தப்பாழாய் போன சாதி விலகவில்லை. வெவ்வேறு பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்து அகதிமுகாங்களில் வந்து வாழும் மக்கள் இன்றும் கூட பக்கத்துக் கிணறுகளிலில் தண்ணியள்ள முடியாது. அதே போல் மனநிம்மதி வேண்டி ஒரு கோவிலுக்குள் போக முடியாது.

இதை விட மிகவும் கொடுமையான நிகழ்வு... போராட்டக்காலத்தில் இடம்பெயர்ந்த மக்கள் வந்து கோவில்களில் தங்கியிருந்த காலகட்டங்களில் கோவில் கிணறுகளில் தாழ்த்தப்பட்டவன் தண்ணியள்ளிவிட்டான் என்று அந்தக் கிணறுகளில் கழிவொயில்களையும், குப்பைகூளங்களைக் கொட்டி அசுத்தப்படுத்தி அவர்களைத் தண்ணியள்ளச் செய்யாமல் செய்த சம்பவங்களும் நிறையவே உண்டு.

இதை ஒரு சிங்களவன் வந்து செய்யவில்லை. தமிழனுக்குத் தமிழன் தான் செய்தான். செய்து கொண்டும் இருக்கிறான். ஒரு தண்ணிக்கே இப்படியென்றால்..... மற்றைய விடையங்களை எண்ணிப் பாருங்கள். இப்படியான ஒரு கொடுமையான நிகழ்வை மனிதாபமுள்ள எந்தவொரு இனத்தவனும் செய்ய மாட்டான்.

விடுதலைப்புலிகள் காலத்திலும் அவர்களின் கட்டுப்பாட்டுப் பிரதேங்களில் இந்தச் சாதி கொஞ்சம் அடங்கியிருந்தது உண்மை தான். இதைப் பெரிய பொருட்டாக புலியினர் கருதவில்லை. சாதி மதம் பிரதேச பேதங்கள் மறந்து தமிழ் தேசியம் மேலெழுந்த நேரம். சகல தரப்பிலிருந்தும் இளைஞர்களைச் சேர்ப்பதிலே அவர்கள் கவனம் இருந்தது.

ஆனால் அதன் விளைவுகள் இன்று யாழ் மண்ணிலே பெரிய பூதாகரமாய் மீண்டும் விஸ்வருபம் பெற்றிருக்கிறது. சாதிச்சண்டைகள் பற்றியும் அது பற்றி நடைபெறும் வழக்குகள் தொடர்பாகவும் நாளாந்த செய்திகள் இப்போதும் வந்து கொண்டிருக்கின்றது.

ஏன் கனதூரம் போவான் இன்று புலம்பெயர்ந்து வாழும் சமூகத்தினரும் நாட்டிலேயும் இருப்பவர்களும் சரி திருமண பந்தங்கள் என்று தேடி செய்யும் விளம்பரங்களைப் பார்த்தாலே விளங்கிக் கொள்ளலாம். சாதி இருக்கா இல்லையா என்று.......

ஒரு தாழ்த்தப்பட்டவன் என்று சொல்லப்படுகின்றவன்

**“யுத்தகாலம் ஒரு கெட்ட காலம். எனக்கு அப்போது பதினேழோ பதினெட்டோ வயதிருக்கலாம். அப்போது தமிழ்க் கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்த நேரம். அந்த நேரத்திலேயே கூட்டணிக் கோசம் நாட்டுக்கு நாசம் என்று தோழர் சண்முகதாஸன் அவர்கள் மிகத் தெளிவாகவே கூறியிருந்தார்.”**

உயர்சாதியினர் வாழும் பிரதேசங்களில் இப்பவும் ஒரு காணி வாங்க முடியாது. இதே போல் இந்தப் புலம்பெயர் பிரதேசங்களில் வீடு வாங்கிப் போகும் உயர்சாதியினர் தாங்கள் வாழும் இடங்களில் இன்னொரு குறைந்த சாதிக்காரன் வந்து குடியேறிவிடுவானோ என்ற பயத்திலேயும், ஒரு குறிப்பிட்ட பிரதேசங்களில் உயர்சாதியினர் மாத்திரம் ஒன்றாய் போய் குடியேற வேண்டும் என்ற மனநிலையோடும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

நந்தனார் வரலாறு எல்லோருக்கும் தெரியும் தானே. சிதம்பரம் கோவிலில் நந்தனார் நுழைந்த தெற்குப்புற வாசல் இதுவரையும் மூடியிருப்பது தீண்டாமையின் எச்சம் தான்.




இந்தச் சாதியானது அரசியல், கலாச்சாரம், பண்பாடு, போன்ற பல துறைகளோடு மாத்திரமல்லாது சாதாரண பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழகங்கள் வரையிலும் தனது ஆதிக்கத்தைச் செலுத்திக் கொண்டு தான் இருக்கின்றது.

கே:அந்தக் கால சாதிய முறைகளுக்கும் இந்தக் கால சாதியமுறைகளையும் நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள்?

தன்னை ஒரு உயர்சாதியாகவும் இன்னொரு மனிதனை தாழ்ந்த சாதியாகவும் கருதுபவன் ஒரு மன நோயாளி, என்றார் அம்பேத்கார். இந்த மனநோயாளிகள் அன்றும் நிறையவே இருந்தார்கள். இன்றும் நிறையவே இருக்கின்றார்கள்.

நான் சிறியவனாய் இருந்த காலகட்டங்களிலேயே சாதி சம்பந்தமான பல விடையங்கள் அற்றுப் போகத் தொடங்கிவிட்டன. ஆனால் அவையொன்றும் தானாக மாறவில்லை. தொடர்ச்சியான போராட்டங்களினாலும் அடிக்கு அடி என்று தோழர் சண்முகதாஸன் அவர்களின் தலைமையிலான கட்சியின் கொள்கையினாலும் தான் அந்தச் சாதிக் கொடுமைகள் அழிக்கப்பட்டது என்பது தான் உண்மையான வரலாறு.

நான் படித்த பாடசாலையில் தாகம் வந்தால் கூட சொந்தமாக தண்ணியள்ளிக் குடிக்க முடியாது. யாரும் ஒரு உயர்சாதியைச் சேர்ந்தவர் வந்து அள்ளி வார்க்கும் வரையில் காத்திருக்க வேண்டும்.

இதற்கு முந்திய காலங்களில் எந்த ஒரு தாழ்த்தப்பட்ட மாணவனும் கதிரையிலிருந்து படிக்க முடியாது. நிலத்திலிருந்து தான் படிக்க வேண்டும், பள்ளிக்கூடங்களைப் போலவே போக்குவரத்து பஸ்களிலும் இருந்து போக முடியாது.

பள்ளிக்கூடங்களும் போக்குவரத்தும் அரசாங்கத்தின் பொறுப்பில் இருந்த போதும் தாழ்த்தப்பட்டவர்களினால் ஒன்றுமே செய்ய முடியாமல் போனதற்கு காரணம்,கோடுகளும், கச்சேரிகளும் உட்பட அனைத்து மட்ட அரசநிர்வாகங்கள் எல்லாம் உயர்சாதினரின் கைகளிலே தான் இருந்தது. இப்பவும் கூட அப்படித்தான்.

இப்படி எத்தனை எத்தனையோ கட்டுப்பாடுகள் கொடுமைகள், இதே போல் உதாரணமாக ஆணோ பெண்ணோ மேற்சட்டை அணியக் கூடாது. நகைகள் போடக் கூடாது, திருமணத்திலே தாலிகட்டக் கூடாது.. ஏன் செத்த பிரேதங்களைக் கூட தகனம் செய்யாது புதைக்க வேண்டும்..

இன்று இவையெல்லாம் நடைமுறையில் பெரிதளவில் மாறினாலும் உயர்சாதியினரின் மனதளவில், தாழ்த்தப்பட்டவர்கள் இப்பவும் தங்கள் அடிமை குடிமைகளாக இருக்க வேண்டும் என்றே பலபேர் நினைக்கிறார்கள்.

ஆனால் இன்றும் திறக்கப்படாத கோவில்களும் தாழ்த்தப்பட்டவன் நீர் அள்ளக் கூடாத கிணறுகளும் யாழ்மண்ணில் நிறையவே இருக்கு.

எனக்கு ஒரு அண்ணன் முறையானவர் புத்தூர் என்ற கிராமத்தில் பிறந்து சுண்ணாகத்தில் வந்து வளர்ந்தவர், அவர் படித்து பட்டங்கள் பெற்ற பின்னர் கூட இன்று வரையிலும் தான் பிறந்த அந்தக் கிராமத்துக்குச் செல்லவில்லை. காரணம் இவர் சிறியவனாய் இருந்த காலகட்டங்களில் கண்டு கேட்ட சாதிக் கொடுமைகளின் காரணங்களினால்.

அவரது தாயானவர் வேறு ஊர்களுக்கு வரும் போது தனது செருப்பை ஒரு பையினுள் மறைத்துக் கொண்டு வந்து போட்டுத் திரிந்து விட்டு, பின்னர் அதைக் கழற்றி திரும்ப மறைத்துக் கொண்டு தனது ஊருக்குப் போவார்.

அதே கிராமத்தில் தான் அந்தக் காலத்தில் நடந்த ஒரு சாதிச் சண்டையில் ஒரு தாழ்த்தப்பட்டவனை, உயர்சாதியினர் துரத்திக் கொண்டு போன போது அவன் தப்பித்துக் கொள்வதற்காக ஒரு தென்னையில் ஏறினானாம், அவனை தென்னை மரத்தோடு தறித்து வீழ்த்தி அவனையும் கொத்திக் கொலை செய்தார்கள், அந்த உயர்சாதியினர். இதை கே. டானியல் அவர்களும் பல இடங்களில் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

புலிகளின் காலத்தில் அவர்களது கட்டுப்பாட்டு பிரதேசங்களில் சாதிப்பிரச்சினைகள் அமிழ்ந்து போயிருந்ததும் ஆங்காங்கே அதற்கெதிரான சில நடவடிக்கைகளும் எடுக்கப்படடிருந்ததும் உண்மை தான். ஆனால் அதை அவர்கள் ஒரு பெரிய பொருட்டக எடுத்துக் கொள்ளவில்லை. பல தரப்பட்ட தாழ்த்தப்பட்ட தரப்பினர் புலியில்

வந்து இணைந்து கொண…
பிரச்சினையாகப் பார்க்கவி…
பெரிதாய் முக்கியத்துவம்…

இதில் வேடிக்கை எ…
இவ்வளவு அழிவுகளும்…
பிறகும் கூட இந்தத்…
ஒற்றுமையை வளர்க்க…
க்கிக் கொண்டு திரிகிற…
இழிவுநிலையை யாராலும்…




இன்றைய தமிழர்க…
இன்றைய அரசியல் நி…
கருதுகின்றீர்கள்....?

யுத்தகாலம் ஒரு கெட்ட…
பதினேழோ பதினெட்டோ…
தமிழ்க் கட்சிகள் எல்லா…
அந்த நேரத்திலேயே கூ…
நாசம் என்று தோழர் சண்…
தெளிவாகவே கூறியிருந்தா…

சண்முகதாஸனுக்கும்…
சுண்ணாகத்தில் இருக்கும்…
நடைபெற்ற ஒரு விவா…
கூறுகையில் அமிர்தலிங்…
பிழையான பாதையிலே ந…
என்றும், இது ஒரு பா…
போய் விடும் என்று, அ…
தெளிவாகவும் ஆணித்…
போலவே கடைசியில் எல்…
கசப்பான வரலாறு.

இந்தத் தமிழ்த்தலை…
தலைமைகளும் மாறிமா…
பிரிவினைகளையும் வளர்த்…
இனங்களுக்குமிடையிலான…
வீழ்த்தப்பட்டிருக்கின்றது,…
க்கி நிறுத்துவதற்கு நா…
வேண்டும். திரும்பவும் தமி…
வைப்பதனால் இந்த இ…
மேலும் கசப்புகளும் க…
நிற்கும்.

குறிப்பாக இந்தப்…
கொண்டிருக்கும் தமிழர்…
பாட்டங்கள் கூத்துக்கள்…
சொல்ல முடியாத…

_தால் இது ஒரு பெரிய
ல்லை. புலிகளும் அதற்கு
கொடுக்கவில்லை.
னோதம் என்னவென்றால்
அட்டுழியங்களும் நடந்த
தமிழன் தனக்குள் ஒரு
மல் சாதியைத் தூ
னே..... என்றால் இந்த
மாற்ற முடியாது.

விடையங்களையும் செய்து கொண்டு எல்லாவற்றையும் மறந்து போய் இருப்பார்கள்.

திடீரென ராஜபக்ஸா வாறாராம் என்ற செய்தி கிட்டியவுடன் எல்லோரும் ரோட்டுக்கு வந்து ஆர்ப்பாட்டம் செய்வார்கள். இது முடிந்து இரண்டோ மூன்றோ மணித்தியாலங்களின் பின்னர் வீடு போய் வழமைக்கு மாறிவிடுவார்கள். நிலமை என்ன... மாறாக இந்தத் தாக்கத்தின் விளைவுகள் எதிரொலியெல்லாம் எமது மண்ணிலுள்ள அந்த அப்பாவித் தமிழ் மக்களையே போய்ச் சேரும்.

என்று மிகவும் சாதாரணமாகவே சொல்லுகிறார். இன்னொருவர் தன்னுடைய பிள்ளைகள் சின்னனில் விளையாடும் போது என்ன நளப்பிள்ளையள் போல் சத்தம் போடுதுகள் என்று சொல்வார், இப்படி ஆயிரம் உதாரணங்கள் சொல்லலாம்.

தமிழ் சிங்கள இன உறவுகள் ஒற்றுமை பற்றி........

எங்களுடைய கிராமத்திலே மாத்திராபேக்கரி சந்திரா பேக்கரி என்று இரண்டு இருந்தன. சிங்களப் பிரதேசங்களிலே ஏதாவது அசம்பாவிதம் நடைபெறுகின்ற போது இங்குள்ள தமிழ் இனத்துவேசிகள் வந்து உடனே சண்டைக்கு வந்துவிடுவார்கள், கடைகளைக் கொளுத்துவார்கள் அவர்களும் பூட்டிப் போட்டு வந்து ஒழித்து விடுவார்கள்.

என்ற இடத்துக்கே இடமளிக்காது. இன்று எமது நாட்டில் நடந்த அழிவுகளை வைத்து மொத்தச் சிங்கள மக்களையும் எடைபோடக் கூடாது. உண்மையிலே நல்ல மனம் படைத்த எத்தனையோ சிங்கள மக்கள் எங்களுக்காக குரல் கொடுத்துக் கொண்டு தானே இருக்கின்றார்கள்.

ஒரு அரசாங்கம் என்பது பிரச்சினை என்று வரும் போது சாதாரண மக்களை இப்படித் தான் அழிக்கும் கொல்லும். இது முதலாளித்துவ அரசுகளுக்கு எப்பவும் எங்கேயுமுள்ள பொதுவான இயல்பு. இந்த முதலாளித்துவ அரசாங்கத்துக்கு தமிழரும் ஒன்று தான் சிங்களவரும் ஒன்று தான். தமிழர்கள், சிங்களவர், முஸ்லீம்கள், பறங்கியன். கறுப்பன் வெள்ளையன்..... நாங்கள் எல்லாம் மனிதர்கள்.

# ...்லையடி பாப்பா..

# ...கள் இல்லையடி பாப்பா...

புலம்பெயர் மண்ணில் தமிழர்கள் மத்தியில் இருக்கும் சாதிகள் பற்றிய.... உங்கள் கணிப்பு....?

முதலிலே இங்கே ஆண்கள் தான் கூடுதலாக வந்தவர்கள். அப்போது இந்தச் சாதி பற்றிய தாக்கங்கள் பெரிதாய் தெரியவில்லை. ஆனால் மனைவிமார் குழந்தைகள் என்று வந்த பின்னர் இந்தச் சாதியென்ற ஆயுதம் தூக்கப்பட்டிருக்கின்றது.

இங்கே பெரும்பாலானவர்கள் தங்கள் குழந்தைகளுக்குச் சின்ன வயதிலிருந்தே சாதி பற்றிக் கற்றுக் கொடுக்கின்றார்கள். யாருடன் பழகலாம் யாருடன் பழகக் கூடாது என்று பிள்ளைகளுக்கு கற்பிக்கப்படுகின்றது. இங்கேயே பிறந்து வளர்கின்றவர்கள் மத்தியில் நாங்கள் யார் என்ற அந்தச் சாதியடையாளம் கட்டாயப்படுத்தி விதைக்கப்படுகின்றது.




ஒரு வகுப்பில் படிக்கின்ற ஒரு மாணவி தன் தாயை வந்து கேட்டாளாம் அம்மா நாங்கள் என்ன குறைந்த சாதியா.....? என்று. ஏன் என்று விசாரித்த போது சகமாணவி சொன்னாளாம் என்றும், அவளுக்கு அவர் பெற்றோர்கள் சொல்லிக் கொடுத்தவர் என்று ஒரு நடந்த சம்பவம் இங்கு நடந்தது, எனக்குத் தெரியும்.

தொழில் அடிப்படையில் தான் சாதிகள் காப்பாற்றப்பட்டு வருகின்றது. இங்கே அப்படியில்லை காசு வேண்டும் என்றால் யாரும் என்னவும் செய்யலாம்.

அங்கே கோழியுரிக்கவோ, ஆடுரிக்கவோ அல்லது மாடுவெட்ட கந்தனோ பூதனோ, என்றொரு குறைந்த சாதிக்காரன் தான் வரவேண்டும். ஆனால் இங்கே கோழியுரிக்கும் தொழிற்சாலைகளில் மாடுவெட்டும் தொழிற்சாலைகளில் நிறையவே இந்த உயர்சாதியினர் வேலை செய்கின்றனர். அதே போல் ரொய்லற் சுத்தம் செய்வதில் இருந்து சகலவிதமான சுத்தம் செய்யும் வேலைகளையும் இவர்கள் இங்கே செய்கின்றார்கள். இதை நாட்டிலே போய்ச் செய்வினமா என்றால்... அது கேள்விக்குறி தான்.

எவ்வளவோ பழகினாலும் குடும்ப விழாக்கள் என்று வரும் போது சாதிகள் பார்த்து பறக்கணிக்கப்படுகின்ற விடையங்கள் நிறையவே இருக்கு. ஆங்காங்கே வெள்ளைக்காரரைத் திருமணம் செய்யும் நிகழ்வுகளும் நடைபெறுகின்றது. ஒரு குறைந்த சாதிக்காரக் குடும்பத்தில் திருமணம் செய்வதை விட ஒரு வெள்ளையினத்தில் திருமணம் செய்தால் ஒரு பிரச்சினையும் இல்லை என்று நினைக்கிறவர்களும் நிறையவே உண்டு.

ஆங்காங்கே சாதி மாறி திருமணங்கள் நடைபெற்றாலும் தொடர்ந்தும் இரண்டு குடும்பத்தினரும் சேர்ந்து பழகும் நிலை குறைவாகவே இருக்கு. சில விதிவிலக்கான நிகழ்வுகளும் உண்டு தான்

இதைவிட சில பேர் இந்த நாட்டு வாழ்க்கை முறைகளைப் பார்த்து.... இங்கேயெல்லாம் இதுகளை தொடர்ந்து கடைப்பிடிக்க முடியாது என்று சொல்பவர்களும், சாதி பற்றிய விடையங்கள் பகிர்ந்து கொள்ளப்படும் இடங்களில் ஒன்றுமே பேசாது மௌனம் சாதிப்பவர்களாகவும் பலர் இருக்கின்றார்கள்.

தன்னுடைய மகளைக் காதலிக்கிறான் என்ற காரணத்துக்காக அவனை காரால் அடித்துக் கொலை செய்யப் போன ஒரு சம்பவம் கனடாவில் நடந்தது செய்தியாக வெளிவந்தது பல பேரறிந்த உண்மை.

நிறைவாக என்ன சொல்ல விரும்புகிறீர்கள்....?

தமிழ்மக்கள் ஒடுக்கப்பட்டு நசுக்கப்படுகிற பொழுதெல்லாம் சிங்கள மக்களின் ஆதரவும் அரவணைப்புக்களும் எப்படியெல்லாம் கைகொடுத்து உதவியது போலவே தாழ்த்தப்பட்டவர்களும் ஒடுக்கப்பட்டு நசுக்கப்படுகின்ற பொழுதெல்லாம் சில உயர்சாதினரின் உதவிக்கரங்கள் எப்போதும் உயர்ந்தே இருந்தது. அந்தக் காலத்தில் நடைபெற்ற பல சாதியப் போராட்டங்களுக்கு உயர்சாதினரின் பங்களிப்புக்கள் மறக்க முடியாதவை.

் நிலை பற்றியும்..
மைகள் பற்றியும்.....என்ன

காலம். எனக்கு அப்போது
வயதிருக்கலாம். அப்போது
ஒன்று சேர்ந்த நேரம்.
_ணிக் கோசம் நாட்டுக்கு
கதாஸன் அவர்கள் மிகத்
.
ர்மலிங்கம் அவர்களுக்கும்,
வாழைக்குலை மாக்கற்றில்
ந்தில் சண் அவர்கள்
ம் அவர்கள் கப்பலை
ர்த்திக் கொண்டு போகிறார்
ய அழிவுக்கே கொண்டு
த நேரத்திலேயே மிகத்
மாகவும் எடுத்துரைத்தது
ாம் நடந்து முடிந்தது ஒரு

மப் பீடங்களும் சிங்கள
இனத்துவேசங்களையும்
து விட்டதனால் இந்த இரு
தொடர்பாலம் அறுத்து
இந்தப்பாலத்தைத் தூ
கள் எல்லோரும் பாடுபட
மீழம் என்று கோசங்களை
இனங்கள் மத்தியிலே
ணீருமே வந்து மீண்டும்

புலம்பெயர்ந்து வாழ்ந்து
ள் பலர் ஆட்டங்கள்
கொண்டாட்டங்கள் என்று
ஆடம்பரங்களாய், எல்லா

ஆர்ப்பாட்டங்கள் செய்வது பிழையென்ற கருத்தில் விளங்கிக் கொள்ளக் கூடாது. உரிய காலங்களில் தகுந்த முறைகளிலே அவை கையாளப்படல் வேண்டும் என்பது தான் எனது தாழ்மையான அபிப்பிராயம்.

சாதிசம்பந்தமான நேரடி அனுபவங்கள் ஏதாவது சொல்ல முடியுமா....?

நிறையவே இருக்கு... அப்போது ஊரில் இருக்கும் காலத்தில் எங்கள் கிராமத்திலிருந்து முல்லைத்தீவுக்கு நானும் எனது நண்பன் ஒருவனும் போய் கொண்டிருந்த வேளையில் சேர்ந்திருக்க இடம் கிடைக்காததால் ஒவ்வொரு இடமாக இருந்தோம். கொஞ்சத் தூரம் சென்றவுடன் எனக்குப் பக்கத்தில் இருந்த ஒருவர் என்னைப் பார்த்து தம்பி எவடம் என்று தொடங்கி எந்த ஒழுங்கை அவர் வீட்டுக்கு முன்னாலேயா பின்னாலேயா.... அவரைத் தெரியுமா இவரைத் தெரியுமா... என்று எல்லாம் விசாரிக்கத் தொடங்க ஏன் கஸ்ரபடுறையள் நான் ஒரு பறையன் என்று சொல்ல அந்த மனிசன் பக்கத்தில் இருக்காமல் திடிரென எழுந்து விட்டார். முல்லைத்தீவு போய்ச் சேரும் வரையில் அவர் இருக்கவேயில்லை. காரணம் அவருக்குள் இருந்த சாதிவெறி.

இப்ப இரண்டு கிழமைக்கு முன்னர் இங்கே ஒரு தமிழ்க் கடைக்கு முன்னால் ஒரு சண்டை நடந்தது. விசாரித்ததில் அவன் மனைவி போக இவர் என்ன நளத்தி என்று கூப்பிட்டாராம்... டேய் கொலை செய்வனடா என்று துள்ளிக் கொண்டு நின்றான் மற்றவன்.

இவர்களுக்குத் தான் தமிழீழம் வேண்டுமாம்.

இங்கே ஒரு வீட்டிலே போய் நின்ற போது அந்த வீட்டுக்காரர் தூரத்தில் இருக்கும் தன்னுடைய பிள்ளைகளுடன் ரெலிபோனில் கதைத்து விட்டு பார் இந்தப் பறைப் பிள்ளைகளுக்கு ஒன்றும் விளங்கவில்லை

பாவம் அவர்கள் உழைப்பைத் தேடி வந்த மிகச் சாதாரண ஏழைகள். கடைசிக் காலங்களில் இப்படித் தான் ஒரு முறை அவர்கள் கடையை கொளுத்த வந்த போது எங்களுடைய கிராம மக்கள் பல பேர் சேர்ந்து அன்றைய வெகுஜன இயக்கத்தின் தலைவராய் இருந்த எஸ்ரியன் நாகரட்னம் அவர்களும் அங்கேயிருந்த ஒரு கத்தோலிக்கப் பாதரும் தலைமை கொண்டு எதிர்த்ததால் அந்தச் சிங்களச் சகோதரர்களும் அந்தக் குடும்பங்களும் உயிருடன் காப்பற்றப்பட்டார்கள்.

இதே போல் தான் அப்பப்ப நடைபெற்ற கலவரங்களின் போது பல ஆயிரக்கணக்கான தமிழ்க் குடும்பங்கள் சிங்களச் சகோதரர்களால் காப்பாற்றப்பட்டது.

காரணம் நாங்கள் எல்லாம் சகோதரர்கள் என்ற உணர்வு எல்லோருக்கும் நிறையவே இருக்கு. ஆனால் இந்த இருபக்கத் தலைவர்களும் தங்களுடைய சுயநலங்களுக்காக இந்த மக்களைக் கூறுபோட்டு பிரித்து விட்டிருக்கிறார்கள். சிங்களத் தலைவர்களும் தமிழ்த்தலைவர்களும் பேசுகின்ற மொழி தான் வேறுபட்டதே தவிர கருத்து எல்லாம் ஒன்று தான்.

இங்கே புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் அந்தந்த நாட்டுமொழிகளைக் கற்று அந்த இனமக்களுடன் இணைந்து சந்தோசமாக வாழுகின்றார்கள். நாட்டிலேயும் ஒரு நல்ல அரசு உருவாகுமேயானால் தமிழர்கள் சிங்கள மொழியையும், சிங்களவர்கள் தமிழ் மொழியையும் கட்டாயக் கல்வியாக்கி கற்க வேண்டும், அதே போல சகலவிதமான உரிமைகளும் சரிசமனாய் பங்களிக்கப்படும் போது இந்தப் பிரிவினை




# பொனபாட் பெரிதா—வேட்பாளர் பொதுவா—எதிர்பார்ப்பு வெள்ளையா? என்ற தலைப்பில் இடம்பெற்ற கருத்தரங்கின் சுருக்கம்!

தற்போது நாம் கடந்து கொண்டிருக்கும் காலம் இனவாதம், மதவாதம்,வர்க்கவாதம் எழுச்சி பெற்றுள்ள சந்தர்ப்பமாகும். இந்த நிலைமைகளின் மத்தியில் ஜனாதிபதி தேர்தல், பொதுவேட்பாளர், கட்சிசார்பற்ற வேட்பாளர், போன்ற பேச்சுக்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இது வரைகாலமும் மறைந்து மறைந்து அரசியலில் ஈடுபட்டவர்கள் இன்று பகிரங்கத்துக்குவர நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

1977 இல் அதிகாரத்துக்கு வந்த ஜே.ஆர் தாராளமயக் கொள்கையை அறிமுகப்படுத்தி தார்மிஷ்ட சமுதாயத்தை கட்டியெழுப்பப்போவதாக சூளுரைத்தார். யூ.என்.பி க்கு மாற்றாக அதிகாரத்துக்கு வந்த சந்திரிகா அம்மையார் நீதியான சமூகத்தை உருவாக்கப் போவதாகக் கூறிக்கொண்டு சிறீலங்கா சுதந்திரக்கட்சி தீவிரமாக எதிர்த்த திறந்த பொருளாதார கொள்கையையே பின்பற்றினார். இடையில் பாராளுமன்ற அதிகாரத்தை கைப்பற்றிய ரணில் விக்ரமசிங்க

இலங்கையை மீளக்கைப்பற்றல் நிகழ்ச்சி நிரலை அறிமுகப்படுத்தியதன் மூலம் நவ லிபரல்வாத முதலாளித்துவ பொருளாதார முறைமைக்கு இருபது வருட திட்டம் என புதியவடிவம் கொடுத்தார். இவர்களை தொடர்ந்து 2005இல் ஜனாதிபதி அதிகாரத்தை கைப்பற்றிய மஹிந்தராஜபக்ஸவும் நவ லிபரல்வாத முதலாளித்துவ முறைமையை தீவிரமாக அமுல்படுத்தி வருகிறார்.

இந்த நிலைமைகளின் மத்தியில் ஜனாதிபதி தேர்தலின் பின்னர் தயாராக இருக்கிறது விதைகள் சட்டம் இந்தசட்டமூலம் விவசாயிகளுக்கு உகந்தான விதை மற்றும் நாற்று உற்பத்தி உரிமையை பறிப்பதுடன் இவற்றில் ஈடுபட்டு அகப்படும் விவசாயிகள் கடும் தண்டனைக்குள்ளாவர்கள். இதனை நடைமுறைப்படுத்த விவசாய உத்தியோகத்தர்களுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்படவுள்ளது.

நகர அபிவிருத்தி என்ற போர்வையில் கொழும்பு திருகோணமலை யாழ்ப்பாணம் அம்பாந்தோட்டை அனுராதபுரம் போன்ற நகரங்கள் பன்னாட்டு நிறுவனங்களுக்கு பெரிய அளவில் உல்லாசப்பயணிகளுக்கான ஹோட்டல்கள் அமைப்பதற்காக தாரைவார்க்கப்படவிருக்கிறது. இத்தேவையை முன்நிலைப்படுத்தி மேல்மாகாணத்தில் வாழும் 54இலட்சம் பேரில் சேரிகளிலும் பின்தங்கிய குடியிருப்புகளிலும் வாழும் 21இலட்சம் பேர் வெளியேற்றப்படவிருக்கின்றனர். இதேபோன்று மேற்குறிப்பிடப்பட்ட ஏனைய நகரங்களில் பின்தங்கிய குடியிருப்புகளில் வாழும் பெரும் தொகையான மக்கள் வெளியேற்றப்படவிருக்கின்றனர். தற்போதைய பொருளாதார முறைமைக்கிணங்க மக்கள் வெறும் குப்பை கூழங்களாக மாற்றப்பட்டுள்ள அதேவேளை இந்தசட்டங்களுக்கு இணக்கமான மக்கள் பிரிவினரை உருவாக்குவதற்க்கு ஏற்புடையதான வேலைத் திட்ங்களும் முன்னெடுக்கப் படுகின்றன. முதலாளித்துவம் காலத்துக்கு காலம் புதுப்புது தந்திரோபாயங்களை கையாண்டு தனது சுரண்டலை தீவிரப்படுத்தி வருகிறது. முழுஆசியாவையும் சுரண்டும் ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரலுக்கேற்பவே அதிவேகப்பாதைகள் அமைக்கப்பட்டு எம்மீது கடன்சுமை ஏற்றப்படுகிறது.

சுதந்திர கல்வி சுதந்திர சுகாதாரசேவை போன்ற அடிப்படை உரிமைகள் தனியார் மயப்படுத்தலின் மூலம் விற்பனைப் பொருளாக மாற்றப்படுகிறது. இந்ததிட்டங்கள் தொடர்பில் எஸ்.பி.திஸாநாயக்கா பந்துலகுணவர்த்தன மீதாக பழிசுமத்துவதில் அர்த்தமில்லை. இவற்றை செய்துமுடிப்பதற்காகத்தான் ஜே.ஆர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை உருவாக்கினார் அடக்குமுறையை கையாண்டார். இனவாதம்,மதவாதம்,வர்க்கவாதம் போன்றவற்றை கட்டவிழ்த்துவிட்டு முதலாளித்துவ சுரண்டலை விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. 30வருடகால யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதை அடுத்து சிங்கள-முஸ்லிம் கலவரம் அரங்கேற்றப்பட்டுள்ளது. இன்று அனைத்து மட்டத்திலும் மக்கள் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளனர். தற்போது சூட்சுமமான முறையில் உழைப்பு சுரண்டப்படுகிறது.தொழிலாளர் வர்க்கத்தை குழுக்களாகப் பிரித்து மேற்பார்வையாளார்களுக்கு பதிலாக குழுக்களுக்கு தலைவர்களை நியமிப்பதன் மூலம் மேலதிக உழைப்பு சுரண்டப்படுகிறது. கவர்ச்சிகரமான திட்டங்களை முன்நிறுத்தி உழைக்கும் மக்கள் கடன்பொறிக்குள் வீழ்த்தப்பட்டு மேலதிக உழைப்பு சுரண்டப்படுகிறது. மக்களின் சிந்தனைகளை திசைதிருப்பும் விதத்தில் தொலைகாட்சி நாடகங்கள், கேழிகை கூத்துக்களை ஒளிபரப்பப்படுகிறது.

> “நகர அபிவிருத்தி என்ற போர்வையில் கொழும்பு திருகோணமலை யாழ்ப்பாணம் அம்பாந்தோட்டை அனுராதபுரம் போன்ற நகரங்கள் பன்னாட்டு நிறுவனங்களுக்கு பெரிய அளவில் உல்லாசப்பயணிகளுக்கான ஹோட்டல்கள் அமைப்பதற்காக தாரைவார்க்கப்படவிருக்கிறது. இத்தேவையை முன்நிலைப்படுத்தி மேல்மாகாணத்தில் வாழும் 54இலட்சம் பேரில் சேரிகளிலும் பின்தங்கிய குடியிருப்புகளிலும் வாழும் 21இலட்சம் பேர் வெளியேற்றப்படவிருக்கின்றனர்.”

இவ்வாறான நிலைமைகளுக்கு மத்தியில்தான் ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொது வேட்பாளார் கட்சி சார்பற்ற வேட்பாளர் போன்ற பேச்சுக்கள் பரவலாக பேசப்படுகிறது. ரணில் விக்ரமசிங்காவை ஜனநாயகவாதியாக ஊடகங்கள் முன்னிலைப்படுத்தி பிரச்சாரம் செய்துவருகின்றன. ரணிலும் சுதந்திரக்கல்வி காப்பற்றபடவேண்டும் எனவும் ஜனநாயக உரிமைகள் பறிக்கபடுவதாகவும் முதலைக் கண்ணீர் வடிக்கத் தொடங்கியுள்ளனர். 1978இல் உயர்கல்வி சட்டத்தின் 16வது திருத்தத்தை கொண்டுவந்ததன் மூலம் சுதந்திரகல்வி தனியார்துறைக்கு திறந்துவிடப்பட்டது ரணில் கல்வி அமைச்சராக பதவிவகித்த காலத்தில் என்பதை மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

1989,90களில் வீதிக்கு வீதி ஜே.வி.பி இளைஞர்கள் ஆயிரக்கணக்கில் குற்றுயிரும் குறைஉயிருமாக ரயர்களில் பொசுக்கியதும்,அன்றைய காலகட்டத்தில் பிரசித்தமான பட்டலந்த வதைமுகாமுடன் ரணிலுக்கிருந்த தொடர்புகள் பற்றிய பேச்சுக்கள் பற்றி எல்லாம் மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். எனவே ரணில் கூறும் ஜனநாயகம் எத்தகையது என்பதை விளக்க வேண்டிய அவசியம் இல்லை. இங்குள்ள வேறுபாடு கால்சட்டையும் - சாரமும்தான் புரட்சிகர கொள்கை பேசும் ஜே.வி.பி முதலாளிக்கு அதிகலாபம் தொழிலாளிக்கு அதிக சம்பளம் என்ற புதிய கொள்கை பிரகடனத்துடன் கட்சி சார்பற்ற பொதுவேட்பாளரை தேடும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டிருப்பதை ஊடகங்களில் வெளியாகும் செய்திகளில் இருந்து அறியக்கூடியதாக உள்ளது. இவர்கள் என்னதான் கட்சி சார்பற்ற வேட்பாளார் என கூறினாலும் இவர்கள் பேச்சுவார்த்தையில் ஈடுபடுபவர்கள் ஏதாவது ஒரு அரசியல் கட்சியுடன் தொடர்புடையவர்களாக அல்லது பிரபல அரசியல்வாதிகளுடன் நெருங்கிய தொடர்புடையவர்களாக காணப்படுகிறார்கள்.

ஊடகங்கள் மக்களை ஏமாற்றும் வகையில் விதம் விதமான கருத்து திணிப்புகளை செய்யும் அதேவேளை ஒடுக்கப்பட்ட மக்களின் உண்மையான பிரச்சினைகளை வெளிப்படுத்த தயாரில்லை. அனுராதபுரத்தில் வருடத்திற்க்கு 300 பேர் சிறுநீரக வியாதியால் மரணிக்கிறார்கள். "றத்துபஸ்வெல" பகுதி மக்கள் தமது குடிநீரை நஞ்சாக மற்றவேண்டாம் எனக்கோரி வீதிக்கிறங்கி போராடும் போது அம்மக்களுக்கு துப்பாக்கி குண்டுகளால் பதில் சொல்லப்படுகிறது. பாதாளஉலக கிரிமினல்களின் உருவாக்கத்தை இல்லாமல் செய்வதற்க்குப் பதிலாக அவர்களை கொல்வதன் மூலம் பிரச்சினைக்கு தீர்வுகாண முற்படுகின்றனர்? நவலிபரல்வாதத்தையும் ஜனநாயக மறுதலிப்பையயம் பிரித்து பார்க்க முடியாது.

இந்த நிலையில் தற்போது ஜனாதிபதி முறைமையை ஒழித்தல் கோசம் முன்னிலை படுத்தப்படுகிறது. நிறைவேற்று ஜனாதிபதிக்குப் பதிலாக நிறைவேற்று பிரதமர் பாராளுமன்றத்துக்கு பதில்சொல்லும் ஜனாதிபதி என புதுப் புது யோசனைகள் முன்வைக்கப்படுகின்றன. இந்த யோசனைகள் எவையுமே சாதாரண மக்கள் எதிர்கொள்ளும் உண்மையான பிரச்சினைகளுக்கு தீர்வை தரப்போவதில்லை. பிரச்சினைகள் அனைத்து மக்களுக்கும் சமமானது எனவே சாதாரண மக்களின் அரசியல் சிந்தனை விரிவுபடுத்தப்பட வேண்டும். ஒடுக்கப்பட்ட மக்கள் தாம் சார்ந்த வர்க்கத்தில் இன,மத,மொழி பேதங்களை ஓரங்கட்டி ஓரணியாக திரண்டு அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.



**"ஆளும் வர்க்கத்துக்கு தலைமை தாங்கும் ஆட்சியாளர்களும் சரி, எதிர்க்கட்சியினரும் சரி உழைக்கும் வர்க்கத்தை சுரண்டுவதையே தமது அடிப்படைக் கொள்கையாகக் கொண்டவர்கள். இதற்காக உழைக்கும் மக்களை இனம், மதம், சாதி.... பிரித்து மோத விடுவதுடன், அதை தமக்கான வாக்குவங்கியாக்கி அறுவடையும் செய்கின்றனர்."**



# தேர்தலை எதிர்கொள்ளுதல்

தேர்தல் மூலம் இலங்கையில் வறுமைக்கும் சமுதாயப் பிரச்சனைகளுக்கும் தீர்வு காண முடியுமென்றும், "ஜனநாயகத்தையும்", "அமைதியையும்", "சமாதானத்தையும்" "சுபீட்சத்தையும்" கொண்டு வர முடியும் என்றும் கூறி, இன்றைய ஆட்சியாளருக்கு எதிராக பொது வேட்பாளரை முன்னிறுத்துகின்ற அரசியல் செயற்பாடு இன்று முன்னுக்கு வருகின்றது. அரசுக்கு எதிராக போராடி வரும் மக்களுக்கு, பொது வேட்பாளரை மாற்றுத்தீர்வாக முன்வைக்கின்றனர். இந்த அரசியல் முன்னெடுப்பானது ஆளும் வர்க்கம் சார்ந்த எதிர்க்கட்சிகளினதும், அரசுடன் முரண்பட்ட ஏகாதிபத்தியங்களினதும் ஒருங்கிணைந்த அரசியல் செயற்பாடாக இருக்கின்றது. இந்த அரசியல் பின்புலத்தில் அனைத்து இன-மதங்களையும் கடந்த, சுரண்டும் வர்க்கங்களின் பொது முன்னெடுப்பாகவும் உள்ளது.

அரசுக்கு எதிராக இனம்-மதம் கடந்த உழைக்கும் வர்க்கத்தை அணிதிரட்டுவதை எதிர்க்கின்றதும், அதை சாத்தியமற்றதாக காட்டுகின்ற ஆளும் வர்க்கங்களே, தமக்குள் இன-மத பேதம் கடந்த பொது வேட்பாளரை முன்னிறுத்துகின்றனர். உழைக்கும் வர்க்கத்தை இனம்-மதம் கடந்து, கீழ் இருந்து அணிதிரட்டுகின்ற போது அதை "இனவாத" கூட்டாளிகள் எனச் சித்தரிக்கின்றவர்கள், ஆளும் வர்க்கம் சார்ந்த இன-மதவாதிகளுடன் இணைந்தே பொது வேட்பாளரை முன்னிறுத்துகின்றனர்.

இந்த வகையில் யூ.என்.பி, ஜே.வி.பி., கூட்டமைப்பு, சரத் பொன்சேகா, முஸ்லிம் கட்சிகள், மலையக கட்சிகள் தொடங்கி நாடு கடந்த தமிழீழக் கட்சி வரை, மேற்கு நாடுகள் முன்னெடுக்கும் "பொது வேட்பாளர்" என்னும் அரசியல் பின்னணியில் செயற்படுகின்றனர். இங்கு இனவாதிகளும், மதவாதிகளும் தங்களை இன-மத தேசமற்றவராக காட்டிக் கொண்டு, உழைக்கும் மக்களை இன-மத ரீதியாக பொது வேட்பாளரின் கீழ் அணிதிரட்ட முற்படுகின்றனர்.

இந்த வகையில் இன்று இலங்கையை ஆட்சி செய்கின்றவர்களும், அதை கைப்பற்ற முனையும் ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்த எதிர்கட்சியினரும், தமக்குள் இனமத பேதமற்ற ஆளும் வர்க்கமாக தேர்தலை முன்னிறுத்தி ஒன்றிணைகின்றனர். அதேநேரம் உழைக்கும் மக்களை தேர்தலுக்கு வெளியில் தமக்குள் அணிதிரள்வதை மறுக்கின்றவர்கள், அதை மீறி வர்க்க ரீதியாக தமக்குள் அணிதிரள்வதை பொது வேட்பாளர் கோசம் மூலம் தடுத்து நிறுத்த முற்படுகின்றனர்.

ஆளும் வர்க்கத்துக்கு தலைமை தாங்கும் ஆட்சியாளர்களும் சரி, எதிர்க்கட்சியினரும் சரி உழைக்கும் வர்க்கத்தை சுரண்டுவதையே தமது அடிப்படைக் கொள்கையாகக் கொண்டவர்கள். இதற்காக உழைக்கும் மக்களை இனம், மதம், சாதி.... பிரித்து மோத விடுவதுடன், அதை தமக்கான வாக்குவங்கியாக்கி அறுவடையும் செய்கின்றனர்.

இன்று உழைக்கும் மக்கள் தமக்குள் இனமத பேதமற்ற வகையில் கீழ் இருந்து ஒன்றிணைவதை தடுத்து நிறுத்த முனையும் ஆளும் வர்க்க அரசியல் நகர்வை எதிர்த்து, அதை எப்படி எதிர்கொள்வது என்பதே தேர்தல் பற்றிய எமது அரசியல் நிலைப்பாடாகும். அதாவது உழைக்கும் வர்க்கத்தை வர்க்க அடிப்படையில் அணிதிரட்ட கையாளும் கொள்கையே, தேர்தல் பற்றிய நிலைப்பாடும் அதையொட்டிய செயற்பாடுமாகும்.

இன்று சமுதாயப் பிரச்சனைகளை தேர்தல் மூலமே தீர்வு காண முடியும் என ஆளுகின்ற வர்க்கங்கள் தொடர்ந்து மக்களுக்கு கூறிவருகின்றனர். வாக்களிப்பதன் மூலம் ஆட்சியாளரை மாற்றி விட்டால், மாற்றம் வந்துவிடும் என்று நம்பவைக்கப்படுகின்றது. ஆட்சியாளர்களை மாற்றக்கூடிய தேர்தல் முறையானது, ஆட்சி அமைப்பை மாற்ற முடியாது என்ற உண்மையைக் கொண்டது. மக்கள் முன் ஆட்சியாளர்கள் தான் பிரச்சனை, ஆட்சி அமைப்பு முறையல்ல என்பதை மையப்படுத்தியே, தேர்தலில் மக்கள் வாக்களிக்க வைக்கப்படுகின்றனர். ஆட்சியாளர்களை மாற்றலாம், ஆட்சி அமைப்பை ஆட்சியாளர்கள் மாற்ற முடியாது என்ற உண்மையை மக்கள் உணர வைப்பதற்காகவே, உழைக்கும் வர்க்க தேர்தல் செயற்பாடு அவசியமானது.

ஆட்சி அமைப்பானது சட்ட வடிவம் பெற்றது. ஆளும் வர்க்கங்களாலானது. அதை நிர்வகிக்கும் அதிகார வர்க்கத்தாலானது. சுரண்டலை அடிப்படையாகக் கொண்ட, அதை ஜனநாயக உரிமையாகக் கொண்ட, அரசியல் அமைப்பு சட்ட உள்ளடக்கமாகும். தனிச் சொத்துடமையை அடிப்படையாகக் கொண்டது. வாக்களிப்பு மூலமான ஆட்சிமாற்றங்கள் மூலம், இந்தச் சட்டவடிவத்தையும், அந்த உறுப்பையும் மாற்ற முடியாது. தனியார்மயமாக்கம், நவதாராளமயம் வரையான கொள்கைகளை மாற்ற முடியாது. உழைக்கும் மக்களை ஒடுக்குவதை தடுக்க முடியாது. வாக்களிப்பு முறையானது ஆட்சியை மாற்றும் தன்மை கொண்டதே ஒழிய, உழைக்கும் வர்க்கத்துக்கு எதிரான சுரண்டும் வர்க்க அரசியல் அமைப்பை மாற்ற முடியாதது.

தேர்தல் மூலம் மாற்றத்தை பெற முடியாது என்ற உண்மைதான். மக்கள் போராட்டங்களாக, தொழிலாளர் வேலைநிறுத்தங்களாக, மாணவ எழுச்சியாக, இறுதியில் கிளர்ச்சியாக, புரட்சியாக நடக்கின்றது. மறுபக்கத்தில் மாற்ற முடியாது என்ற உண்மையே, வாக்களிப்புகளில் நம்பிக்கை இழந்து அதில் பங்குகொள்வதை புறக்கணிப்பது அதிகரித்து வருகின்றன.

ஆனால் இந்த அமைப்பு முறையானது, மக்கள் வாக்களிக்கின்றார்களோ இல்லையோ, தேர்தல் நடக்கின்றது, ஆட்சி மாற்றங்கள் நடக்கின்றது. மக்களின் வாக்களிப்பில் தங்கி, இந்த தேர்தல் முறை இயங்குவதில்லை. அதேநேரம் தேர்தல் மூலம் மக்கள் பிரச்சனைகள் தீர்க்கப்படுவதில்லை. தேர்தல் முறை மூலமான ஆட்சி மாற்றங்கள் மூலம், மக்களின் கோபத்தையும், அவர்களின் விழிப்புணர்வையும் வடிகாலாக்கி வடிய வைக்க முடிகின்றது. தேர்தல் முறையில் உள்ள சூட்சுமமே இதுதான். இதைத் தடுத்து, மக்களை அரசியல்ரீதியாக விழிப்புணர்வூட்டி அணிதிரட்டுவதற்கான இரண்டு வழிகள் காணப்படுகின்றது.

1.தேர்தல் பற்றிய அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்துவது. தேர்தலில் தானும் ஒரு அணியாக பங்குகொள்வதற்கு பதில், மக்களை இதற்கு எதிராக அணிதிரட்டி மக்கள் போராட்டங்கள் மூலம் அரசியல் அமைப்பை தூக்கி எறிவதற்கான அறைகூவலுடன் தேர்தலை எதிர்கொள்வது.

2.தேர்தலில் தானும் அணியாக பங்குகொள்வதன் மூலம், வாக்களிக்கும் மக்களை தேர்தல் முறைக்கு எதிராக அணிதிரட்டிக் கொள்ளும் அரசியல் விழிப்புணர்வை உருவாக்கி அரசியல் அமைப்பை தூக்கியெறிவது.

இவ்விரண்டும் உழைக்கும் மக்களை வர்க்க ரீதியாக அணிதிரட்டும் செயற்பாடாக இருக்கும் அதே நேரம், இதிலொன்றை எப்போதும் கையாள்வது அவசியமானது. இதில் எது என்பது அன்றைய அரசியல் சூழல், மக்களின் விழிப்புணர்வு போன்ற பல்வேறு அரசியல் காரணங்களுடன் தொடர்புபட்டது.

இந்த வகையில் தேர்தல் என்னும் ஆளும் வர்க்க அரசியல் மோசடிக்கு எதிராக, உழைக்கும் வர்க்கம் தன்னை அணிதிரட்டிக் கொள்ள தேர்தல் காலத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தேர்தலில் தன் வர்க்க அடையாளத்தை முன்னிறுத்தி பங்கு கொள்ளுதல் அல்லது பங்கு கொள்ளாது பகிஸ்கரித்தல் என்ற இரண்டு அரசியல் தெரிவுகளில் ஒன்றே, வர்க்க சக்திகளின் தெரிவாகவும் இருக்கின்றது. அதாவது உழைக்கும் வர்க்கம், ஆளும் வர்க்கத்திற்கு எதிராக தன்னை அணிதிரட்டுவதேயாகும். உழைக்கும் வர்க்கத்தை அணிதிரட்டுவதற்கான வழிமுறை எதுவாக இருந்த போதும், வாக்களிப்பில் பங்கு கொள்ளும் வர்க்க சக்திகளையும், வாக்களிப்பை புறக்கணிக்கும் வர்க்க சக்திகளையும் ஒருங்கே அணிதிரட்டக் கூடிய செயல் தந்திரம் அவசியமானது. ஒன்றையொன்று எதிராக அணுகாத, எதிராக மாற்றாத வரைதான், தேர்தலை வெற்றிகரமாக வர்க்க அணிதிரட்டலுக்கு பயன்படுத்த முடியும். இதில் ஏதாவது ஒன்றுக்கு அரசியல் அழுத்தம் கொடுத்தால், வர்க்க ரீதியான அணிதிரட்டலுக்கு எதிரானதாகவும், அரசியல்ரீதியான தவறான பாதைக்கும் இட்டுச் செல்லும்.

இந்த வகையில் வர்க்க ரீதியான மக்கள் திரள் போராட்டங்களுக்கு மக்களை அணிதிரட்டுவதற்கு, தேர்தல் காலத்தை சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதேநேரம் தேர்தலில் ஒரு அணியாக பங்கு கொள்ளும் போது அரசியல் ரீதியான திரிபுகளுக்கு இடமில்லாத வண்ணம் தெளிவு அவசிமானது.

1. தேர்தல் முறை மூலம் வர்க்க ரீதியான அதிகாரத்தைக் கொண்டு வரலாம் என்று நம்பிக்கை ஏற்படுத்தக் கூடாது.
2. மக்கள் திரள் போராட்டங்களை, தேர்தல் முறைக்கு கீழ்ப்படுத்தி விடக் கூடாது.
3. தேர்தல் மூலம் முன்னுக்கு வரும் சக்திகளை, வர்க்கப் போராட்டத்துக்கு தலைமை தாங்குவதான பொதுக் கண்ணோட்டத்தை உருவாக்கிவிடக் கூடாது. அதாவது மக்கள் போராட்டத்தின் ஊடான புரட்சிகர தலைமைக்கு பதில், தேர்தல் தலைமைகளை முன்னுக்கு கொண்டு வந்துவிடக் கூடாது.

தேர்தலில் பங்குபற்றும் போது ஏற்படக்கூடிய இது போன்ற அரசியல் விலகல்கள், வர்க்க சக்திகளின் வர்க்கத் தன்மையையே அழித்துவிடும். இன்றைய நவதாராளமயமாக்கல் ஏற்படுத்தும் அரசியல் முரண்பாடுகளை களைவதாக, தேர்தலில் பங்குகொள்ளும் முறை மாறிவிடக் கூடாது. அதாவது

1.தேர்தல் முறை மீதான நம்பிக்கையீனங்களும், அதிருப்திகளும் அதிகரித்து வரும் சூழலில், அதை அரசியல் ரீதியாக வளர்த்தெடுப்பதை மையப்படுத்தியே தேர்தலை

02 ஆம் பக்கம் பார்க்க...

# மக்களைச் சாராதா செயற்பாடுகள், இனவொடுக்குமுறைக்கு உதவுவதே

இனரீதியான இராணுவ அடக்குமுறைக்குள் தமிழ் இனத்தை இணங்கி வாழக் கோரும் அரசு, இதற்குள் இணக்க அரசியலை செய்து பிழைக்கவும் கோருகின்றது. இனரீதியான முரண்பாட்டுக்கு, இதையே இன்று தீர்வாகவும் காட்டுகின்றது. அரசியல்ரீதியாக தீர்க்க வேண்டிய இன முரண்பாட்டை, இராணுவ ரீதியாக வென்றதன் மூலம், இனப்பிரச்சனை தீர்வுக்கு வந்துவிட்டதாக கூறி முரண்பாட்டை புதைத்து விட முனைகின்றனர். மறுபக்கம் தீர்வுகாண கால அவகாசம் தேவை என்று கூறி, அரசியல்ரீதியாக இந்தப் பிரச்சனையை நீர்த்துப் போகுமளவுக்கு, இனவொடுக்குமுறையை பன்முகத்தன்மை கொண்டதாக மாற்றி வருகின்றனர்.

இன்று இனரீதியான வாழ்வியல் பிரதேசங்களை திட்டமிட்டே இல்லாதாக்க முனைகின்றனர். சலுகைகளுக்குள் வாழ்தலையும், அண்டிப்பிழைத்தலையும் உருவாக்குவதன் மூலம், இதை வடக்கு-கிழக்கில் வாழ்வியல் நடைமுறையாக்க இதை முன்தள்ள அரசு முன்னெடுக்கின்ற இனரீதியானதும், மதரீதியானதுமான ஒடுக்குமுறையானது, இலங்கை மக்களை பிரித்து வைத்திருக்கின்றது. திட்டமிட்ட வகையில் அரசு கையாளுகின்ற இனம் மற்றும் மத ரீதியான செயற்பாட்டுக்குள், பொது மக்களை இழுத்து விடுகின்றது. அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் நடைமுறையாக உள்ள தேர்தலைக் கூட, இன மத ரீதியான வாக்களிப்பாக குறுக்கி வைத்திருக்கின்றது. இதை மீறிய போராட்டங்களைக் கூட, இன மத ரீதியானதாக பிரித்து வைத்திருக்கின்றது.

இலங்கையின் அரசியல் செயற்பாடுகள் அனைத்தும் இனம் மதம் சார்ந்ததாகவும், தாம் அல்லாத இன மத மக்களை எதிரியாகவும் காட்டிவிடுகின்றது. இப்படி அரசியலை குறுக்கிவிட்ட நிலையில், அதற்குள் தீர்வுகளும், போராட்டங்களும் கூட முன்னெடுக்கப்படுகின்றது. இவை புதிதல்ல, மாறாக கடந்த காலத்தில் தோற்றுப் போனவற்றை மீண்டும் தூசி தட்டி மக்கள் சார்ந்த போராட்டத்தை பற்றி பேசுகின்றனர். இந்த தமிழ் இடது அணிக்கு குண்டு வைப்பதன் மூலம் அணிதிரட்டும் இடது அரசியல் அணியும் கூட காணப்படுகின்றது. அதே நேரம் வலதுடனான ஒரு இணக்க அரசியல் அடிப்படையும் காணப்படுகின்றது.

இவ்விரண்டு அரசியல் போக்குக்கும் 1980 களில் இருந்த மக்கள் ஆதரவோ, அரசியல் அலையோ இன்று கிடையாது. ஆனால் இதன் மூலம் தீர்வு காணலாம் என்கின்றனர். கடந்த காலத்தில் தோற்றது ஏன் என்ற விளக்கம் கூட முன்வைக்க முடியாத அளவுக்கு, இவை வெறும் நம்பிக்கைகள் சார்ந்த வெற்றுக் கானல் நீராகும்.

இப்படி வலது-இடது சார்ந்த இவ்விரண்டு அரசியலில் உள்ள அடிப்படை வேறுபாடானது, குறுந்தேசிய இனவாதத்தைக் கொண்டிருப்பதா இல்லையா என்பதும், உழைக்கும் மக்களை முன்னிறுத்துவதா இல்லையா என்பதுமே, இதைக் கோடு போட்டுப் பிரிக்கின்றது. இரண்டும் முற்றாக சந்தர்ப்பவாத அளவில் ஒன்றையொன்று மற்றவர்களை நம்பி கனவுகாணவும் வைக்கின்றது. உதாரணமாக ஏகாதிபத்திய ஐ.நா விசாரணை, மோடியின் பாசிச ராஜதந்திரம்... என்று, இந்தக் கழுதைகளை நம்பி ஏறுமாறு மக்களை வழிகாட்டுகின்றனர். இதே போல் தான், முன்பும் காலத்துக்கு காலம் ஏதோ ஒன்றைக் காட்டி ஏமாற்றி வந்தனர். மக்களை அணிதிரட்டிய போராட்டத்தை முன்னெடுக்க மறுக்கின்ற, அதன் அரசியல் சாத்தியப்பாட்டை அரசியல்ரீதியாக நிராகரிக்கின்றவர்கள், மக்களை கற்பனையில் கனவு காணுமாறு வழிகாட்டுகின்றனர். இந்தப் பின்புலத்தில் கருத்து விவாதம் மூலம் தம்மை முன்னிறுத்தி, நடைமுறையில் மாற்றத்துக்கான எதார்த்தத்தை மறுக்கின்றவர்கள் கூட, சாராம்சத்தில் இனவொடுக்குமுறைக்கு உதவுகின்றவர்களாக இருக்கின்றனர். அதாவது சாத்தியமற்ற, எதார்த்தமற்றவற்றைக் கொண்ட எண்ணங்கள், செயற்பாடுகள் அனைத்தும் இனவொடுக்குமுறைக்கு உதவுவதே. தோற்றுப்போன பழைய அதே சாரமே, இன்று மீண்டும் பல முகங்கள் மூலம் அரங்கேற்றப்படுகின்றது.

இதற்கு மாற்று வழி என்ன?

இந்த இனவொடுக்குமுறையை எதிர்த்துப்

முனைகின்றனர். இனரீதியான ஆளும் அதிகார வர்க்கத்தை கொண்டு அடிமைப்படுத்தி, வடக்கு கிழக்கை கண்காணிக்கின்றனர்.

உழைத்து வாழும் பண்பாட்டு சமூகக் கூறுகளை அழித்து, அதனிடத்தில் பொறுக்கித் தின்னும் லும்பன் பண்பாட்டை புகுத்தி வருகின்றது. நவதாராள

> **“இலங்கையின் அரசியல் செயற்பாடுகள் அனைத்தும் இனம் மதம் சார்ந்ததாகவும், தாம் அல்லாத இன மத மக்களை எதிரியாகவும் காட்டிவிடுகின்றது. இப்படி அரசியலை குறுக்கிவிட்ட நிலையில், அதற்குள் தீர்வுகளும், போராட்டங்களும் கூட முன்னெடுக்கப்படுகின்றது. இவை புதிதல்ல, மாறாக கடந்த காலத்தில் தோற்றுப் போனவற்றை மீண்டும் தூசி தட்டி மீள முன்வைக்கின்றனர்.”**

உற்பத்திகளையும், அதன் நுகர்வுகளையும் கொண்டு, தேசியத்தன்மைகளையே வேருடன் புடுங்கி வருகின்றனர். இந்த வகையில் வடகிழக்கு நவதாராள மயமாக்கலானது, இலங்கையில் சீரழிந்த சிறப்புப் பொருளாதார மண்டலமாகி வருகின்றது.

தேசியத்தன்மையை அழிக்க நவதாராள பொருளாதார அபிவிருத்தி, உற்பத்தி, நுகர்வு.. என்பன வடகிழக்கில் முழுவீச்சில் முடுக்கிவிடப்பட்டுள்ளது. இது தேசியப் பண்பாட்டுக்கு பதில் நவதாராள லும்பன் பண்பாட்டை உருவாக்குகின்றது. யுத்தத்துக்குப் பின்பான இனவொடுக்குமுறையானது நவதாராள பொருளாதார வடிவம் பெற்றதன் மூலம், தேசிய ஒடுக்குமுறைக்கான சர்வதேச மூலதனத்தின் அங்கீகாரத்தைப் பெற்று இருக்கின்றது.

யுத்தத்துக்கு பிந்தைய இனவொடுக்குமுறையானது தேசியத்தன்மையை அழித்து நவதாராள தன்மையை புகுத்துவதன் மூலம், எதிர்ப்பை குறுகிய இனத்தன்மை கொண்டதாக மாற்றி அமைக்கின்றனர். அதாவது தேசியம் சார்ந்த சமூகப் பொருளாதார அடிப்படைகளை இல்லாதாக்குவதற்கே, யுத்த மீள்கட்டுமான அபிவிருத்தியாக இவை காட்டப்பட்டு முன்னெடுக்கப்படுகின்றது. தமிழ் தேசிய பொருளாதாரத்தை அழிப்பதற்கு, அந்த இனத்தின் ஆதரவை பெற்று முன்னெடுப்பதே யுத்தத்தின் பின்னான இனவொடுக்குமுறையின் சூக்குமம். எதிர்ப்பை சிங்கள மக்கள் சார்ந்ததாக மட்டும் மாற்றியிருக்கின்றது. நவதாராள பொருளாதார அபிவிருத்தி ஊடான தேசிய சிதைவை அங்கீகரித்தலே, இன எதிர்ப்பாக காட்டி முன்னெடுக்கப்படுகின்றது.

இப்படி இன ரீதியானதும், நேர் எதிரானதாக செயற்படும் தேசியத்தை அழித்து, நவதாராளமயமாக்கி வருகின்றது.

மீள முன்வைக்கின்றனர்.

அந்த வகையில் பாராளுமன்ற வடிவங்கள், ஆயுதப் போராட்டங்கள், அரசுடனான இணக்க அரசியல் மூலம் தீர்வு என்று, அனைத்து வடிவங்களும் கடந்த காலத்தில் கையாளப்பட்டு இருக்கின்றது. இன ரீதியான இந்த அரசியல் முன்னெடுப்புகள் அனைத்தும், படுதோல்வியையே பெற்று இருக்கின்றது. இந்தியா முதல் அமெரிக்கா வரை நம்பிக்கெட்ட தரகு அரசியல், படுகுழியில் புதைத்து வந்திருக்கின்றது.



1980 இல் அனைத்து இன மக்களையும் தலைமை தாங்கக் கூடிய கட்சி இல்லாத சூழலில், இனவொடுக்குமுறைக்கு எதிரான தமிழ் மக்களின் எழுச்சியை ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்கள் போராட்டமாக மாற்ற முனைந்த அரசியல் முன்னெடுப்புகள் கூட தோல்வியையே சந்தித்தது. தன் இனம் சார்ந்த ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்கள் போராட்டங்கள் சொந்த இனத்தின் இனவாதிகளால் அழிக்கப்பட்டது. அதேநேரம் அந்த அரசியலையே துறந்தோடியதன் மூலம், முற்றாக அதுவும் தோல்வியைச் சந்தித்தது. ஆனால் இன்று இடதுசாரியத்தின் பெயரில் அதை மீள முன்வைக்கின்ற கூத்தும் கூட இன்று அரங்கேறுகின்றது.




2009 இல் புலிகளை அரசு அழித்த போது, இனவொடுக்குமுறையை எதிர்கொண்டு போராட யாரும் இருக்கவில்லை. அதை இல்லாதாக்குகின்ற புலியெதிர்ப்பு அரசியலும், அதனுடன் இணைந்த இணக்க அரசியலும், இவற்றை எல்லாம் எதிர்க்கும் கருத்தியல் போராட்டமுமே எஞ்சிக் காணப்பட்டது. ஒரு வெற்றிடமும், அதை பயன்படுத்திக் கொண்ட வலது-இடது பிழைப்புவாதிகளும் பொறுக்கிகளும் எஞ்சினர்.

அதேநேரம் தொடர்ந்த இனவொடுக்குமுறையை எப்படி வெற்றிகரமாக முறியடிப்பது என்பதே எம்முன்னுள்ள கேள்வியாக இருந்தது, தொடர்ந்ம் இருக்கின்றது. மறுபக்கத்தில் மீண்டும் தோற்றுப் போன பழைய வலது-இடது பாதையை தீர்வாகவும் முன்வைக்கின்றனர். இந்த வகையில்

1. பழையபடி பாராளுமன்ற வடிவங்களில் நம்பிக்கை கொள்ளுமாறு, மேற்கு மற்றும் இந்தியாவை நம்பக் கோருவதும், மீண்டும் ஆயுதப் போராட்டத்தைக் கட்டமைப்பது பற்றியும் .. வலதுசாரிய குறுந்தேசிய இனவாதிகளின் தொடர் நடைமுறையாக இருக்கின்றது.

2. 2009 ஆண்டு வரை இடதுசாரியத்தை துறந்தோடியவர்கள் முதல் இடதுசாரியத்தை செயலற்றதாக்கி படுத்துக் கிடந்தவர்கள் வரை, குறுக்கு வழிகளில் தமிழ் தேசியப் புரட்சியை முன்வைக்கின்றனர். இன குறுந்தேசியமல்லாத, தேசியம் என்றுரைப்பதன் மூலம் தமிழ் உழைக்கும் சார்ந்தும், ”தேசியம்” ”இனம்” என்ற வேறுபாட்டை மூடிமறைக்கும் இணக்க அரசியலையும் கொண்டு முன்னெடுக்கின்றனர்.

1980 களில் இந்த அரசியல் இயங்கக் கூடிய வண்ணம் வெகுஞன எழுச்சியும், விழிப்பும் காணப்பட்டது. இன்று தமிழ் இனம் சிதறடிக்கப்பட்டு, போராட்டமே வேண்டாம் என்ற மனநிலையில் மக்கள் உள்ளனர். அடக்குமுறையானது பாசிச வடிவமெடுத்துள்ள சூழலில், மக்கள் மூச்சுக்கூட விட முடியாத வண்ணம் எதிரியின் நாசிக்குள் வாழ்கின்றனர். அன்று இருந்த தேசியப் பொருளாதார பண்பாட்டு கூறுகளுக்கு பதில், இன்று நவதாராள பொருளாதார பண்பாட்டு சிதைவுக்குள் வாழ்கின்றனர்.

தமிழ் தேசியவெழுச்சியோ, இனவெழுச்சியோ சாத்தியமற்றதாக இருக்கும் சூழலில், இனவொடுக்குமுறை கூர்மையாகி வருகின்றது. தேசியரீதியான, இனரீதியான அணிதிரட்டல்கள், அதன் செயற்பாடுகள் கடந்தகாலத்தில் தோற்றுப்போன ஒன்றாகவும், இன்று பலவீனமான ஒன்றாகவும் கூட காணப்படுகின்றது. இன்று கற்பனையானதும், ஊகங்களைக் கொண்டதும், பெரும்பாலும்

போராடுவதற்கான நடைமுறைரீதியான செயற்தந்திரம் தேவை. அது அரசைத் தோற்கடிக்கும் வண்ணம், ஒடுக்குமுறையில் இருந்து விடுபடுவதற்கு சாத்தியமானதாகவும் இருக்க வேண்டும்.

அங்குமிங்குமாக அரசுக்கு எதிராக நடக்கும் தன்னியல்பான நடைமுறைப் போராட்டங்கள் கூட இதற்கு முன்னுதாரணமிக்கதாக வழிகாட்டலாக இருக்கின்றது. எந்தப் போராட்டமும் இன்று சாத்தியமற்றது என்றும், மக்கள் போராட மாட்டார்கள் என்றும் கூறுகின்றனரோ, அதற்கு மாறாக மக்கள் மத்தியில் இருந்து தன்னியல்பாகவே போராட்டங்கள் எழுகின்றது. அது மக்கள் சார்ந்த போராட்டமாகவும் இருக்கின்றது. அரசுக்கு எதிராக போராடும் மக்கள், இயல்பாகவே இந்த தன்னியல்பு போராட்டங்களை ஆதரிக்கின்றனர். இனம், மதம், சாதி, மொழி என எதுவும், இதைத் தடுக்கவில்லை. அதே நேரம் அரசு இதைக் கண்டு அஞ்சுவதும், அதை தனிமைப்படுத்தி ஒடுக்குவதும் நடக்கின்றது.

இதை தடுத்து நிறுத்தவும், வெற்றி பெறவும் இவற்றுக்கு இடையில் ஒரு ஒருங்கிணைவை உருவாக்க வேண்டி இருக்கின்றது. மற்றவர்கள் பிரச்சனையில் அக்கறை கொண்டு போராடுவதற்கான,

02 ஆம் பக்கம் பார்க்க...

# ஐரோப்பிய நவநாசிய தேசியவாதக் கட்சிகளின் தேர்தல் வெற்றிகள்

வெளிநாட்டவருக்கு எதிரானவர்கள், தேசியவாதிகள், நவநாசிகள், பாசிட்டுகள், ஜனநாயக விரோதிகள் என்று பொதுவாக பலராலும் அடையாளப்படுத்தப்படும் இன, நிற அடிப்படைவாதக் கட்சிகள், ஐரோப்பிய பாராளுமன்றத்துக்காக நடந்த தேர்தல்களின் கணிசமான வெற்றியைப் பெற்றிருக்கின்றது. பிரான்ஸ்சிலும், பிரிட்டனிலும், டென்மார்க்கிலும் மற்றைய கட்சிகளை விட அதிக ஆசனங்களைப் பெற்று, முன்னணிக் கட்சியாகியுள்ளது. மற்றைய ஐரோப்பிய நாடுகளிலும் கூட நவநாசிய வலதுசாரிய தேசியவாதிகள் முன்பைவிட பலம் பெறுகின்றனர். அடுத்தடுத்த தேர்தல்களில் தங்கள் சொந்த இன-நிற ஆட்சியை அமைக்க முடியும் என்ற நம்பிக்கையை அவர்கள் கொள்ள, இதற்கு எதிரானவர்களோ அச்சத்தை வெளியிடுகின்றனர்.

தேர்தலில் 50 சதவீதத்துக்கு குறைவாகவே வாக்களித்த ஒரு அரசியல் பின்புலத்தில், அரசியல் விழிப்புணர்வைக் கொண்ட அதிசுறுசுறுப்பான நவநாசிய வலதுசாரிய அரசியல் வெற்றி பெற்று வருகின்றது. செக்குமாடாக இயங்கும் தேர்தல்முறை மற்றும் ஆட்சிமாற்றங்கள் மூலம், இனி எதையும் மாற்ற முடியாது என்ற உண்மையே இந்தத் தேர்தல்களில் வாக்களிப்பதில் இருந்து மக்கள் ஓதுங்கிக் கொள்வதன் ஊடாக தெரிகின்றது. தேர்தல் மூலம் தங்கள் பிரச்சனைகளைத் தீர்க்கலாம் என்ற நம்பிக்கைகளை இழந்து ஒதுங்கும் அரசியல் சூழலில், தேர்தலில் சுறுசுறுப்பாக இயங்குவதன் மூலம் நவநாசிகள் ஆட்சிக்கு வரமுடியும் என்ற உண்மையை ஐரோப்பிய தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டுகின்றது. சமூக பொருளாதார மாற்றத்தை கோரும் மக்களுக்கோ, மாற்றத்தை தராத தேர்தல் முறை தீர்வல்ல. ஆனால் நவநாசிகளுக்கு இன நிற ஆட்சியை முன்னெடுக்க, இதுவே தீர்வாகக் காணப்படுகின்றது. இந்த முரணானது நாசிகளின் ஆட்சிக்கு கம்பளம் விரிக்கின்றது.

இந்த வகையில் தேர்தல் முறையானது உலகளாவிய வகையில் காலாவதியாக, இன அல்லது மத அல்லது நிற அல்லது அனைத்தையும் உள்ளடக்கிய அடிப்படைவாதங்கள் சார்ந்த நவநாசிய, பாசிசக் கட்சிகள் வெற்றிபெற்று வருகின்றது, ஆட்சிக்கு வருகின்றது. இந்த வகையில் இந்தியாவில் மத அடிப்படைவாதம் சார்ந்த பாசிச ஆட்சியும், இலங்கையில் இன அடிப்படைவாதம் சார்ந்த ஆட்சிகளும் நடக்கின்றது. பல நாடுகளின் நிலை இதுதான். நவநாசிகளோ கெடுபிடி மூலமான ஏகாதிபத்திய ஐரோப்பாவையே கோருகின்றனர்.

அதாவது உலக பொருளாதார நெருக்கடியை அமைதியான இணக்கமான வழிகளில் கடக்க முனையும் ஐரோப்பிய ஏகாதிபத்தியத்துக்கு பதில், கெடுபிடி மூலம் உலகப் பொருளாதாரத்தைக் கைப்பற்றக் கோரும் தேசியவாதமே நவநாசிய தேசியவாதமாகும்.

இதை அடைவதற்காகவே ஒருங்கிணைந்த ஐரோப்பாவை எதிர்த்தும், இன நிற மத வாதத்தை முதன்மைப்படுத்திய தேசியத்தை முன்னிறுத்தியே தேர்தலில் வெற்றி பெற்று வருகின்றனர். இந்த நாடுகளிலுள்ள ஆட்சிகள் முன்தள்ளும் “இஸ்லாமிய பயங்கரவாதம்” பற்றிய பிரச்சாரத்தை, இஸ்லாமிய மக்களுக்கு எதிரானதாக நவநாசிகள் முன்னெடுக்கின்றனர். வெவ்வேறு சமூகங்கள் ஒன்றுகலப்பதை தடுக்கும் ஐரோப்பிய வாழ்வியல் நடைமுறைகளைக் கொண்டு, நவநாசிகள் வெள்ளை இன-நிற-மதம் அல்லாதவர்களை ”இழிவான நாகரிகமற்றவராக” காட்டுகின்றனர்.

ஐரோப்பாவில் அதிகரிக்கும் வேலையின்மைக்கு காரணமாக, ஐரோப்பிய ஒருங்கிணைவையும், வெளிநாட்டவர்களின் வருகையையுமே காரணமாக காட்டுகின்றனர். வாழ்க்கைச் செலவுகளின் அதிகரிப்புக்கும், கூலிகளின் வீழ்ச்சிக்கும் கூட இவற்றையே காரணமாகக் காட்டுகின்றனர்.

உலக பொருளாதார நெருக்கடிக்கும் அதன் சமூக பொருளாதார விளைவுக்கும் எதிராக, சாதாரண மக்களை அணிதிரட்டக் கூடியதான இந்தப் பிரச்சாரம் தான், நவநாசிக் கட்சிகளின் தொடர் வெற்றியாக மாறி வருகின்றது. உண்மைகளை மூடிமறைப்பதன் மூலம், மக்கள் இன-மத-நிற ரீதியாக அணிதிரட்டப்படுகின்றனர். இந்த வகையில்

1.உலக பொருளாதார நெருக்கடிக்கும் அதன் விளைவுகளுக்கும் காரணம், இவர்கள் ஆதரிக்கும் மூலதனத்தின் கொள்கைகளே காரணமாக இருக்கின்றது. அதாவது மூலதனக்குவிப்புவெறி கொண்ட மூலதனத்தின் செயற்பாட்டை மூடிமறைத்து, அதை இன நிற பிரச்சனையாக்கி திரித்துக் காட்டுகின்றனர்.

2.தாங்கள் ஆட்சிக்கு வந்தால் உலகம் தழுவிய மூலதன சுரண்டலையும் விரிவாக்கத்தையும் கெடுபிடிகள் மூலம் விரிவாக்குவதே பொருளாதார கொள்கை. மாறாக ஏகாதிபத்திய பொருளாதாரத் தன்மையை ஒழித்து, தேசியத்தன்மை கொண்டதாக பொருளாதாரத்தை மாற்றி அமைக்கப் போவதில்லை. இந்த உண்மையை மூடிமறைக்கின்றனர்.




தங்கள் ஏகாதிபத்திய பொருளாதாரத்தை கெடுபிடி மூலம் நடைமுறைக்கு கொண்டுவரவே, ஐரோப்பிய ஒருங்கிணைவுக்கு எதிரான தேசியவாதத்தையும், இன, மத, நிற வெறிப் பிரச்சாரங்களையும் நவநாசிய தேசியவாதிகள் முன்னெடுக்கின்றனர்.

ஐரோப்பிய ஒருங்கிணைவின் சாரத்தை விளங்கிக் கொள்வதாயின், அது மூலதனங்களின் ஒருங்கிணைவாகும். நாடுகளை மூலதனரீதியாக தமக்குள் ஒருங்கிணைத்து, வரியற்ற சந்தையை தமக்குள் திறந்துவிட்டதன் மூலம், பிற மூலதனங்களுக்கான சந்தையைக் கட்டுப்படுத்தினர். அதேநேரம் பிற நாடுகளை சூறையாடுவதில் தமக்குள்ளிருந்த தனித்தனியான போட்டியை இல்லாதாக்கினர். தமக்கு இடையோன முரண்பட்ட குறுகிய ஏகாதிபத்திய நலன்களை தமக்குள் இல்லாதாக்கி, ஒற்றையான ஏகாதிபத்திய தன்மையைப் பெற்றனர். முன்பு யுத்தங்கள் மூலம் நாடுகளை ஒன்றிணைத்த பொருளாதாரத்துக்கு பதில், தாமாக ஒன்றிணைந்ததே ஐரோப்பிய யூனியன்.

இதன் மூலம் அமெரிக்கா, ஜப்பான்.. என்று உலக மூலதனங்களுடனான போட்டியை ஈடுகொடுத்து நடத்துகின்றது. மூலதன நோக்கில் இந்த ஒருங்கிணைவானது உழைக்கும் மக்களுக்கு எதிரானது என்பது வெளிப்படையான உண்மை. மறுபக்கத்தில் இனம், மதம், நிறம், நாட்டு எல்லைகள் கடந்து உழைக்கும் மக்கள் ஒன்று கலப்பதானது, முன்னேற்றகரமான மனித நாகரிகத்தையும் வாழ்வையும் உருவாக்குகின்றது. தன்னை மனிதனாக மட்டும் உணருகின்ற புதிய பண்பாட்டை உருவாக்குகின்றது. ”உலகத் தொழிலாளரே ஒன்று சேருங்கள்” என்ற மார்க்ஸ்சின் கூற்றுக்கு அமைவாக, எல்லை கடந்த மனித வாழ்க்கை நடைமுறையாகின்றது. இதனால் தான் இனம்-நிறம் கடந்த உழைக்கும் மக்களின் ஒருங்கிணைந்த வாழ்க்கையை முன்னிறுத்தும் பாட்டாளி வர்க்கக் கட்சிகளுக்கு எதிரான எதிர்ப்பு, நாசிகள் கட்சிகளின் முனைப்புப்பெற்ற முதன்மையான ஒன்றாகவும் இருக்கின்றது.

நாசிய தேசியவாதமானது உழைக்கும் வர்க்கம் இனம், மதம், நிறம் கடந்து ஒன்றிணைவதை எதிர்க்கின்றனரே ஒழிய, மூலதனம் ஒன்றிணைவதை அல்ல. ஐரோப்பாவை ஒன்றிணைத்த மூலதனம் பற்றி, இவர்கள் பேசுவது கிடையாது. மாறாக இன-நிற அடையாளத்தை உழைக்கும் வர்க்கம் இழப்பதை எதிர்க்கின்றனர். இதை மூடிமறைக்கவே ”மற்றவர்களால்” வேலையின்மை பற்றி பேசுகின்றனர். மூலதனத்தின் செயற்பாட்டைப் பற்றி பேசுவது கிடையாது.

மூலதனமானது சுரண்டுவதும், சூறையாடுவதுமே அதன் கொள்கையே ஒழிய, மக்களுக்கு வேலை கொடுப்பதல்ல. அதேபோல் தன் இன, மத, நிற, சாதி மக்களுக்கு வேலை கொடுப்பதுமல்ல.

உலகில் மலிவான கூலியைத் தேடியும், தொழிலாளர் சட்டங்களற்ற நாடுகளையும், சுற்றுச்சூழல் பாதுகாக்கும் சட்டங்கள்


> “ஐரோப்பாவில் அதிகரிக்கும் வேலையின்மைக்கு காரணமாக, ஐரோப்பிய ஒருங்கிணைவையும், வெளிநாட்டவர்களின் வருகையையுமே காரணமாக காட்டுகின்றனர். வாழ்க்கைச் செலவுகளின் அதிகரிப்புக்கும், கூலிகளின் வீழ்ச்சிக்கும் கூட இவற்றையே காரணமாகக் காட்டுகின்றனர்.”


கொண்டிராத நாடுகளையும், வரைமுறையின்றி கனிம வளங்களை சூறையாடக் கூடிய நாடுகளையும்... நோக்கி மூலதனம் பாய்ந்து செல்லுகின்றது. இதற்காகவே தனித்துவமாக, ஒருங்கிணைந்து செயற்படுகின்றது. இதன் விளைவே உலக பொருளாதார நெருக்கடி.

இந்த வகையில் மேற்கு மூலதனங்கள் சொந்த நாட்டில் இருந்து தொடர்ந்து வெளியேறுகின்றது. அதேநேரம் தனது உற்பத்திக்கான சந்தையை, சொந்த நாட்டிலும் தக்க வைக்கின்றது. மூலதனத்தின் வெளியேற்றம் உள்நாட்டில் வேலை இன்மையையும், அதே நேரம் பொருட்களை வாங்கும் திறனை மக்கள் இழப்பதாலும், உற்பத்தி தேங்கி உலக நெருக்கடியாகி வருகின்றது. பொதுவாக வாங்கும் திறனை, மேற்கு சமூகங்கள் இழந்து வருகின்றது.

சந்தையில் தேங்கிய பொருளை சந்தைப்படுத்தும் வண்ணம் முன்னெடுத்த திறந்த பொருளாதாரக் கொள்கையானது, பல போட்டியாளர்களின் போட்டியால் சந்தை மேலும் தேக்கத்துக்குள்ளாகி வருகின்றது. பொருளை வாங்க மக்களிடம் பணமில்லை. அதாவது வேலை இன்மை, கூலிக் குறைப்பு.... அனைத்தும் தொடரான நிகழ்ச்சியாக, பொருளாதார நெருக்கடியாக்கி வருகின்றது. உலக பொருளாதார நெருக்கடியானது, மீள முடியாத மூலதனத்தைக் குவிக்கும் வெறிதான்.

இந்த உண்மையை மூடிமறைத்த நாசி தேசியமானது, சொந்த நாட்டை மட்டும் தேசிய மூலதனம் மூலம் சுரண்டுவதால் நெருக்கடியை தீர்க்கலாம் என்பது சுத்தமான பொய். தேசிய மூலதனம் ஏகாதிபத்திய மூலதனமான பின், மீண்டும் தேசிய மூலதனமாக்கல் என்ற நாசிய தேசியவாதமானது கெடுபிடியான ஏகாதிபத்தியத் தன்மையை கோருவதாகும்.

நாசிய தேசிய வெறியானது அமைதியான ஒருங்கிணைந்த ஐரோப்பிய மூலதனத்துக்கு பதில், தன் தேச மூலதனத்தை முதன்மைப்படுத்தி மற்றவற்றை அழித்தபடி உலக மூலதனத்தை கைப்பற்றுவது தான். ஐரோப்பாவில் இருந்து, நாசிய தேசியவாதிகள் மூலமாக நாடுகள் வெளியேற்றம் நடக்குமாயின், அதன் அர்த்தம்

1.தனது தேச மூலதனத்தை முதன்மைப்படுத்தி, மற்றைய ஐரோப்பிய மூலதனத்தை அழிக்கும் கெடுபிடியான ஐரோப்பாவுக்குள்ளான உள்நாட்டு யுத்தத்தை நடத்தும்.

2.பல்வேறு ஐரோப்பிய நாசிய தேசியவாத சக்திகள் ஒருங்கிணைந்து, உலகச் சந்தையை கைப்பற்றும் உலக கெடுபிடி யுத்தத்தை நடத்தும்.

உலக நெருக்கடியில் இருந்து மூலதனத்தை மீட்டெடுக்க கெடுபிடியான யுத்தமும், மக்களிடமிருந்து இருந்து மூலதனத்தை பாதுகாக்க இன-மத ரீதியான வக்கிரமான வன்முறையையுமே நவநாசி தேசியவாதம் முன்வைக்கின்றது. மக்களை ஏமாற்ற ”தேசிய உற்பத்தி”, ”அன்னியருக்கு வேலை மறுப்பு” என்று கவர்ச்சிகரமான பிரச்சாரத்தை முன்னெடுத்து வாக்காளர்களை கவருகின்றது.

உலகளவில் பாட்டாளி வர்க்கத்தின் பலவீனமான இன்றைய நிலைமையே, இதற்கு உதவுகின்றது. இதை மாற்றி அமைப்பதன் மூலமே, ஏகாதிபத்தியத்தில் இருந்து தோன்றக் கூடிய பாசிச நெருக்கடிகளில் இருந்து உலக மக்களை பாதுகாக்க முடியும். இதை தவிர வேறு மாற்று வழி கிடையாது.



# தமிழ்- சிங்கள மேலாதிக்க வர்க்கமும் - ஒடுக்கப்படும் மக்களும்

தமிழ்-சிங்கள மேலாதிக்க வர்க்கங்கள் இணைந்து, அரசியல்ரீதியான சந்தர்ப்பங்கள் கிடைக்கும் போதெல்லாம் இலங்கையின் உழைக்கும் மக்களை இனவாத அடிப்படையில் பிரித்தாளுகின்றன. இப் பிரித்தாளல்-அரசியல் உதாரணங்கள் சுதந்திரத்துக்குப் பின்னான இலங்கையின் வரலாற்றில் நிரவிக்கிடக்கின்றன.

## ‘ஸ்ரீ’ யும்— இனவாதமும்.

”சிங்களம் மட்டும்” என்ற சட்டவாக்கம், இனவாத சிங்கள மேலாதிக்கத் தலைமையால் 1956-ஆம் வருடம் கொண்டு வரப்பட்டது. இதன் அடிப்படையில் இலங்கை பாராளுமன்றத்தால் வாகன- மற்றும் போக்குவரத்துச்சட்டதில் திருத்தம் கொண்டுவரப்பட்ட போது, தமது வாகனப்பதிவிலக்கத் தகடுகளில் ”ஸ்ரீ” போட முடியாதென்று உக்கிரமாகப் ”போராடினார்கள்” தமிழ் மேலாதிக்கவர்க்கப் பிரதிநிதிகள். தகடுகளில் ”ஸ்ரீ” போடுவது பற்றிய மேலாதிக்க தமிழ் -சிங்கள வர்க்கத்தினருக்கிடையிலான கருத்து வித்தியாசங்கள் தமிழ்பேசும் மக்களின் உரிமைப் பிரச்சனையாகப்பட்டது. சிங்கள எழுத்தான ”ஸ்ரீ” இக்குப் பதிலாக தமிழ் எழுத்தைப் போட வேண்டுமென மேலாதிக்கத் தமிழ் தலைமைகள் போராடவில்லை. தொடர்ந்தும் ஆங்கில எழுத்துக்களே பதிவிலக்கத் தகடுகளில் உபயோகிக்கப்படல் வேண்டுமெனக் கோரினர், கொலனிய அடிவருடிகளான தமிழ் ”தேசியத் தலைவர்கள்”. சிங்களம் மட்டுமென்ற இனவாதச் சட்டம் பல பாதிப்புகளை உழைக்கும் வர்க்க தமிழ் -சிங்கள மக்களுக்கு ஏற்படுத்தும் எனத் தெரிந்திருந்த போதும் - தமிழ் ஆதிக்கச் சமூகத் தலைவர்களுக்கு ”ஸ்ரீ” பிரச்சனை பெரும் பிரச்சனையாகத் தெரிந்தது. சிங்கள இனவாதச் சட்டத்தை முன்னிறுத்தி சிறிது சிறிதாக தமிழ் தலைமைகள் தமிழ் - இனவாதக் கருத்துகளைச் சமூகத்தில் கசியவிடத் தொடங்கினார்கள். அதேபோல ”ஸ்ரீ”- பிரச்சனைக்கு முன், சிங்கள - தமிழ் மக்கள் தமது தாய்மொழி மூலம் கல்வி பெறும் வாய்ப்பை உருவாக்க இடதுசாரிகளால் பிரேரணை கொண்டு வரப்பட்டது. அதற்கெதிராக ஆங்கிலக் கல்வியை முன்னிறுத்தி - அப் பிரேரணையைத் தோற்கடித்தவர்கள் தான் மேற்படி தமிழ் மேலாதிக்கத் தலைமைகள். யாழ் - மேலாதிக்க சமூகத்தின் கட்டுப்பாட்டில் பெரும்பான்மையான ஆங்கில பாடசாலைகள் இருந்தமையும், அன்றைய இலங்கையின் அரசநிர்வாகத்தைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தவர்கள் யாழ் - மேலாதிக்க சமூகத்தினராக விளங்கியதுமே இதற்கான காரணமாகும். யாழ் -சைவ வேளாள ”சற்சூத்திர” ஆறுமுகநாவலர் பரம்பரையிடம் இதை விட வேறு எதை எதிர்பார்க்க முடியும்?

அநாகரீக தர்மபாலாவின் பரம்பரை மட்டுமென்ன சும்மாவா இருக்கும்? சிங்கள ஆதிக்கச் சக்திகளும் அதன் தலைமைகளும் ”ஸ்ரீ” போராட்டத்தையும், தமிழ் தலைமையின் ஆங்கிலச் சார்பு நிலையையும் சாட்டாக வைத்துக் கொண்டு, அந்தக் காலத்தில் மோட்டார் வாகனத்தை தொட்டுக் கூடப்பார்க்காத கொழும்புவாழ் உழைக்கும் வர்க்க தமிழர்கள் மீது திட்டமிட்ட கொலைவெறித் தாக்குதலை மேற்கொண்டார்கள். தாக்குதல்களை மேற்கொள்ள, மோட்டார் வாகனங்களைக் கண்ணால் கூடக் காணாத சிங்கள உழைப்பாளிகளை இனவாத உணர்வேற்றி - உசுப்பி விட்டார்கள். இலங்கையின் அரச ஆதிக்கம் அன்று தமிழ்-சிங்கள மேற்தட்டுவர்க்கத்தின் கட்டுப்பாட்டிலிருந்ததென்ற உண்மையை மறைத்து, தமிழ் பேசும் மக்களே அரச அதிகார வர்க்கமெனப் பொய்யுரைத்தனர் சிங்கள ஆதிக்கவாதிகள். இதன் மூலம், தமிழ்மொழி பேசும் உழைக்கும் மக்கள் மீது, சிங்கள உழைக்கும் மக்கள் சார்ந்த குழுக்கள் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட வகை செய்தனர். இப்பிரித்தாளும் மேற்தட்டு வர்க்க அரசியலில் உச்சக்கட்டமாக, இரு இன உழைக்கும் மக்களும், ஒருவரையொருவர் எதிரியாகப் பார்க்கும் சமூக உளவியலைக் கட்டமைத்தனர்.

## யாழ் - மேலாதிக்கமும், தரப்படுத்தலும்

வடக்கிலும் - தெற்கிலும், யாழ்ப்பாணிய - ஆதிக்க சாதியினர் மற்றும் சிங்கள-ஆதிக்கச் சமூகங்களின் கட்டுப்பாட்டிலிருந்த கல்வியை ஓரளவுக்கு ஜனநாயகமயப்படுத்த 1971-இல் கொண்டுவரப்பட்ட சட்டம் தான் ”தரப்படுத்தல்” எனப்படும் கல்விச் சீர்திருத்தச் சட்டம். இச் சட்டத்தைக் கொண்டு வந்ததன் மூலம், அனைத்துத் தமிழ்பேசும் மக்களின் கல்வி உரிமையையும், ஒட்டுமொத்த சிங்களச் சமூகமும் இணைந்து பறித்ததாக - தமிழ் மேலாதிக்க வர்க்கத்தால் பிரச்சாரம் செய்யப்பட்டது.

யாழ்ப்பாணத்துக்கு வெளியில், மன்னார், வவுனியா, திருகோணமலை தொடக்கம் கிழக்குத் தமிழர்களும் மேற்படி சட்டத்தால் பயன் பெற்றார்கள் என்பதைப் பற்றி மூச்சுக்கூட விடவில்லை- இந்தத் தமிழ் - இனவாத மேலாதிக்கம். அதேவேளை யாழ்ப்பாணிய ஆதிக்க சமூகம் தமது பிள்ளைகளை, பரீட்சை எழுதி உயர்கல்வி பெற வடக்கின் மற்றைய மாவட்டங்களுக்கும், மலையகத்துக்கும், கிழக்குக்கும் அனுப்பி வைத்தார்கள். அப்படிப் போக வசதியில்லாதவரின் பிள்ளைகளுக்கும், இளைஞர்களுக்கும் தமிழ் இனவாத உணர்வேற்றி அவர்களைப் பிற்காலத்தில் நடந்தேறிய முள்ளிவாய்க்கால் படுகொலைகள் வரை இரத்தம் சிந்த வைத்தார்கள்.

> **தமிழ் தேசியத்தைத் தாங்கியபடி பிரபாகரனின் தலைமையில் யுத்தம் நடந்ததால், ஒடுக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த தலைமை உருவாகியது. இவ் வரலாறு மிக விரைவாக இல்லாதொழிக்கப்பட வேண்டியது என்பது யாழ் - மேலாதிக்க சக்திகளுக்குண்டு. அதனாலேயே மேற்படி தமது பாரம்பரிய "தமிழ் தலைவர்களை" தூசி தட்டுகிறார்கள்.**

தமிழ் உழைக்கும் மக்களின் பிள்ளைகள் உணர்வேற்றப்பட்டு ஆயுதமும் கையுமாக அலைவதற்கு ஊக்கப்படுத்திய - தமிழ் இனவாதவுணர்வுகளை ஊட்டிய யாழ்- மேலாதிக்கம், போர் வெடித்தபோது ஐரோப்பாவுக்கும், அமெரிக்காவுக்கும், அவுஸ்திரேலியாவுக்கும் ”அகதிகளாக”ப் படையெடுத்தார்கள்.

துரையப்பாவை புன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் வைத்துப் பிரபாகரன் கொலை செய்த சில நிமிடங்களிலேயே - தான் தான் அந்தக் கொலையைச் செய்ததாகக் கூறிப் பல நூறு யாழ்ப்பாண ஆதிக்கசாதி இளைஞர்கள் அகதி அந்தஸ்துக் கோரியதாக சிலர் சிலேடையாக கூறுவதுண்டு. ஆனால், அதில் உண்மைகள் இல்லாமலில்லை. அத்துடன் ஏற்கனவே இலங்கை அரச நிறுவன உத்தியோகங்களில் யாழ்- மேலாதிக்க சமூகம் தெற்கில் கணிசமான அளவுக்கு இருந்ததனால், தமது குடும்பங்களையும் கொழும்பில் உள்ள வெள்ளவத்தையிலும், கொச்சிகடையிலும் குடியமர்த்தினார்கள்(இப்போ நீர்கொழும்பு தொடக்கம், மொரட்டுவ வரையும் பரந்துள்ளனர்).

## யாழ்-ஆதிக்கமும் இன்றைய அரசியலும்

ஆனால், ஆயுதம் கையிலெடுத்து ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் - சமூகங்களின் பிள்ளைகள் போராடிய போதும் மேலாதிக்கவர்க்கமும், யாழ் -மேலாதிக்கசாதியும் தமிழ் அரசியலின் மீதான தமது ஆதிக்கத்தை ஒரு இம்மியளவும் விட்டுக் கொடுக்கவில்லை. தமது ஆதிக்கத்துக்குப் பங்கம் வரும் போதெல்லாம், ஏதோவொரு தமது ஆதிக்கத்தை நிலை நிறுத்தினார்கள். இதை தமது அரசியல் ஆதிக்கத்தை தந்திரமான முறையில் நிறுவினார்கள். கூட்டணி அரசியல்- மற்றும் தமது இயக்கங்கள் தோல்வி அடைந்து புலிகளின் கை ஓங்கிய போது, யாழ்ப்பாணிய மேலாதிக்கம் தளர்ந்து விடவில்லை.

புலிகளுக்கு அரசியல் ஆலோசகர்களாகவோ, அவர்களின் நிதிகளைக் கட்டுப்படுத்துபவர்களாகவே இயங்கினார்கள். மறுபக்கத்தில், புலிகளுக்கு எதிராகப் போர் நடாத்திய இலங்கை அரசுகளுடன் இணைந்து புலிகளின் ஜனநாயக மறுப்புக்கு எதிராகப் போராடுவதாகக் கூறிக் கொண்டு, இனவாத அரசுகளின் சட்ட-அரசியல் ஆலோசகர்களாகவும், மந்திரிகளாகவும் இயங்கித் தம் ஆதிக்க நிலையை இன்றும் நிலை நிறுத்தி வருகிறார்கள்.

யாழ்-ஆதிக்கசாதிய - மற்றும் மேற்தட்டு வர்க்கத் தமிழினவாதிகளின் அரசியல் ஆதிக்கம் 2009- இக்குப் பின், இலங்கை- மற்றும் புலம்பெயர்ந்த தமிழ் அரசியல் பரப்பிலும் முன்பை விட உக்கிரமாக முன்னெடுக்கப்படுகிறது. இன்று தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தொடக்கம், வடமாகாண சபையின் அமைச்சரவை ஈறாக, நாடுகடந்த தமிழ் ஈழ அரசு தொடக்கம் புலிகளின் எச்சசொச்சமாகக் காட்டிக் கொள்ளும் புலம்பெயர் அமைப்புகள், மற்றும் இடதுசாரிய முகமூடியுடன் பிரிவினைவாதம் கதைக்கும் சிறுகுழுக்கள் வரை- அனைத்தும் இப்போது ஆதிக்கசாதிய- மற்றும் மேற்தட்டு வர்க்கத் தமிழினவாதிகளின் கட்டுப்பாட்டில் தான் உள்ளது.

தற்போது மேற்படி மேலாதிக்கவாதிகள், ஆறுமுகநாவலர், அருணாச்சலம், பொன்னம்பலம் இராமநாதன், ஜி.ஜி. பொன்னம்பலம், எஸ்.ஜே.வீ.செல்வநாயகம் போன்ற தமது பாரம்பரிய ஆதிக்க வர்க்கச்- சாதித் தலைவர்களின் வரலாற்றை முன்னிறுத்தி - அவர்களைத் தூசி தட்ட தொடங்கியுள்ளனர்.

தமிழ் தேசியத்தைத் தாங்கியபடி பிரபாகரனின் தலைமையில் யுத்தம் நடந்ததால், ஒடுக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த தலைமை உருவாகியது. இவ் வரலாறு மிக விரைவாக இல்லாதொழிக்கப்பட வேண்டியது என்பது யாழ் - மேலாதிக்க சக்திகளுக்குண்டு. அதனாலேயே மேற்படி தமது பாரம்பரிய ”தமிழ் தலைவர்களை” தூசி தட்டுகிறார்கள்.

## கூட்டமைப்பின் பின்னணி

மேற்கூறிய அரசியற் பின்புலத்திலேயே- தமிழ் ”தேசியக்” கனவான்களின் வாரிசாகவே - இன்று யாழ் கொழும்பு - சைவவேளாள- வடக்கு முதலமைச்சரும் இயங்கி வருகிறார்.

இவரின் தனிப்பட்ட குடும்பவாழ்க்கை தொடக்கம் இவரின் வர்க்கச் சார்பு, மதநம்பிக்கை வரை இப்போது இலங்கை அரசியல் களத்தில் தமிழ் - சிங்கள ஆதிக்க சக்திகளால் முன்னிறுத்தப்படுகிறது. இலங்கையின்- குறிப்பாக கொழும்பின் மேற்தட்டு வர்க்கத்துடன் திருமண உறவு தொடக்கம் - அனைத்து நெருக்கங்களையும் கொண்ட முதலமைச்சர் அவ்வப்போது தமிழ்த் தேசிய அபிலாசை என்ற பெயரில், ”இருதேசங்கள் ஒரு நாடு” - ”வெளியக சுயநிர்ணயம் வேண்டாம்- உள்ளக சுயநிர்ணயமே போதும்” என்பது போன்ற அரசியல்- மத்தாப்புக்களை கொளுத்திப் போடுகிறார்.

“இதை அடைவதற்கான நடைமுறை அரசியற் செயற்பாடு என்னவெனக் கேட்டால் மவுனம் மட்டுமே பதிலாகத் தருகிறார். ஆனால், அவரின் பின்னால் இருந்து தமிழ் தேசியக் கூட்டமைப்புக் கனவான்கள் அசரீரியாக இந்தியாவும், மேற்குநாடுகளும் ”வென்று ” தருவார்கள் என்கின்றனர். (இவர்களைப் போலவே இடதுசாரியம் கதைக்கும் மேற்படி கனவான்களின் வாரிசுகளான புலம்பெயர் குறுங்குழுக்கள் ”இருதேசங்கள் ஒரு நாடு” - ”பிரிந்து போகும் சுயநிர்ணயத்தை அங்கீகரித்தால் யாருடனும் இணைந்து வர்க்கப் போராட்டம் நடத்தத் தாம் தயார் ”என அறிவித்தல்கள் விட்ட வண்ணமுள்ளனர். இதைப் பிறிதொரு சந்தர்ப்பத்தில் விரிவாகப் பார்ப்போம் )

இது தான் இனங்கடந்த ” வர்க்க” உறவோ ?

தமிழ் ஆதிக்கச்சாதிய - மேல்தட்டு வர்க்கம், தமது நலனுக்காக உழைக்கும் ஒடுக்கப்பட்ட சமூகங்கள் மீது

02 ஆம் பக்கம் பார்க்க...

# புத்தரின் போதனைகளை புறம்தள்ளும் பொதுபலசேனா பௌத்த பிக்குகள்!

புத்தரின் உருவத்தை உடலில் பச்சை குத்தியதற்காக ஒரு வெளிநாட்டவரை புத்தமதத்தை அரசமதமாக கொண்ட இலங்கை அரசு நாட்டிற்குள் வர அனுமதி மறுத்து வெளியேற்றியது. கௌதம சித்தார்த்தனின் அகிம்சை போதனைகளை காலில் போட்டு மிதிக்கும் இலங்கை அரசு பச்சை குத்தியதை பெரிய விடயமாக எடுத்தது உங்களிற்கு வியப்பை தரலாம். ஆனால் மதவாதத்தை ஊக்குவிப்போர் எப்பொழுதும் அப்படித்தான் இருக்கிறார்கள். மதத்தை வைத்து மக்களின் உணர்ச்சிகளை தூண்டி விட்டு தங்களின் கொள்ளைகளை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள்.

கௌதம சித்தார்த்தனின் வரலாறு, அவரின் பெயரில் வழங்கப்படும் தத்துவங்கள், நடந்ததாக சொல்லப்படும் கதைகள் எல்லா மத தத்துவங்களையும்விட யதார்த்தமானவை. உண்மையில் சித்தார்த்தன் மதத்தை மறுத்தவர். பிராமணர்களின் நால்வருணம் என்னும் கொடியசிந்தனை முறைகளிற்கு எதிராக எழுந்த அஜீவகம், சமணம் போன்ற மதங்களையும் சார்வாகம் என்னும் கடவுள் மறுப்பு கொள்கை கொண்ட ஆதிப் பகுத்தறிவாளர்களின் விவாத அறிவியல், பகுத்தறிவு போன்ற சிந்தனை மரபுகளையும் ஒட்டி அவரது தத்துவங்கள் இருக்கின்றன மரணம் தொடர்பாக ஒரேமாதிரியான இரு கதைகள் கிறிஸ்தவ மதத்திலும், புத்த மதத்திலும் இருக்கின்றன அருளப்பர் என்று அழைக்கப்படும் யோவானின் சுவிசேசத்தில் ஒரு கதை வருகிறது. பெத்தானியா என்ற ஊருக்கு வரும் யேசுகிறிஸ்து லாசரு என்ற அவரின் நண்பனின் வீட்டிற்கு போகிறார். ”இவ்வளவு நாளும் எங்கே போயிருந்தீர் குருவே, லாசரு இறந்து விட்டான்” என்று அவனின் சகோதரிகள் மரியாவும், மார்த்தாவும் கண்ணீர் விடுகிறார்கள். ”அவன் இறக்கவில்லை, அவனின் கல்லறைக்கு கூட்டிச் செல்லுங்கள்” என்கிறார் யேசு. கல்லறைக்கு முன்னால் நின்று ”லாசரு எழுந்திரு” என்று சொல்ல லாசரு உயிர்பெற்று வருகிறான்.

**“ ஒரே விதமான கதை ஆனால் புத்தரின் தத்துவம் பகுத்தறிவை சொல்கிறது. வாழ்வின் உண்மையை, நிதர்சனத்தை சொல்கிறது. பிறப்பு என்ற தொடக்கம் இருக்குமாயின் இறப்பு என்ற முடிவு வந்தே தீரும். ஆண்டவர்கள், அற்புதங்கள் என்று ஒன்றுமில்லை. எவராலுமே யதார்த்தத்தை மாற்ற முடியாது என்பதை உணர்த்துகின்ற சிந்தனை அது. ”**

தன் சிறுவயது மகனை இழந்த தாய் சித்தார்த்தனின் காலடியில் விழுந்து கதறுகிறாள். தனது வாழ்வின் ஒரே ஆதாரமான மகனை மறுபடி உயிர்ப்பித்து தருமாறு புத்தரிடம் கேட்கிறாள். சித்தார்த்தர் சொல்கிறார்”மரணம் வராத ஒரு வீட்டில் இருந்து கடுகு வாங்கி வா. நான் அவனை மறுபடி உயிர்பெறச் செய்கிறேன்”. ஊர் முழுக்க கடுகு கேட்டுச் சென்ற தாய் மரணம் வராத வீடு என்று ஒரு வீடும் இல்லை என்ற வாழ்வின் அடிப்படையை விளங்கிக் கொண்டு வந்து கௌதம சித்தார்த்தரை வணங்கி நின்றாள். ஒரே விதமான கதை ஆனால் புத்தரின் தத்துவம் பகுத்தறிவை சொல்கிறது. வாழ்வின் உண்மையை, நிதர்சனத்தை சொல்கிறது. பிறப்பு என்ற தொடக்கம் இருக்குமாயின் இறப்பு என்ற முடிவு வந்தே தீரும். ஆண்டவர்கள், அற்புதங்கள் என்று ஒன்றுமில்லை. எவராலுமே யதார்த்தத்தை மாற்ற முடியாது என்பதை உணர்த்துகின்ற சிந்தனை அது.



கடவுள் இருக்கிறாரா இல்லையா என்று கௌதம சித்தார்த்தனிடம் கேட்டார்கள். ”எனக்குத் தெரியாது, உங்களிற்கு நோய் வந்தால் மருந்தைக் குடியுங்கள். நோய் எப்படி வந்தது என்று யோசித்துக் கொண்டிருக்காதீர்கள்” என்று அவர் சொன்னார. இத்தகைய யதார்த்தவாதி கௌதம சித்தார்த்தனை முன்நிறுத்தித்தான் இலங்கையின் மரணவியாபாரிகள் பாமர சிங்கள மக்களை ஏமாற்றுகிறார்கள். பொதுபலசேனா, சிங்களராவய, இராவணா போன்ற அமைப்புகள் கட்டுக்கதைகளை பரப்புகிறார்கள். பாமரசிங்கள மக்களின் மனதில் இனவாதம், மதவாதம் என்னும் நச்சுவிதைகளை விதைக்கிறார்கள். ஏழைச்சிங்கள மக்களின் மனதில் தாங்கள் இந்த மண்ணின் மைந்தர்கள், மற்றவர்கள் அன்னியர்கள் என்னும் பிரிவினைவாதத்தை விதைக்கிறார்கள். இந்த நச்சுவிதைகள் பெருமரமாக வளர்ந்து விடுகின்றன. சிங்களமக்களினது வேலைகளை, நிலத்தை, பொருளாதாரத்தை இந்த அன்னியர்கள் தட்டிப்பறிக்கின்றார்கள் என்று இந்த மதவாதிகளும், அவர்களை வளர்த்து விடுபவர்களான இலங்கையின் அரசியல்வாதிகளும் திரும்ப திரும்ப சொல்லி வருகிறார்கள்.

தமிழ் மொழியுடன் பெருமளவு ஒற்றுமைகளை கொண்டிருக்கும் சிங்களமொழிக்கு ஆரியமொழி என்று பொய்யான இலக்கணம் கொடுக்கிறார்கள். அது இந்திய ஆரியமொழி என்றால் சிங்களம் இந்தியாவின் எந்த பகுதியிலும் ஏன் பேசப்படுவதில்லை என்ற கேள்விக்கு விடை எவரிடமும் இல்லை. அல்லது சிங்களம் பேசப்பட்டதற்கான வரலாற்று ஆதாரங்களோ, இலக்கிய ஆதாரங்களோ இல்லையே என்ற கேள்விக்கும் எந்தக் காலத்திலும் மறுமொழி இல்லை. இலங்கையின் தேரவாதபுத்தமதத்தின் மொழியான பாளி மொழியின் குழந்தை சிங்களம் என்று கதை சொல்கிறார்கள். இது வரை கண்டுபிடிக்கப்பட்ட புத்தரின் வரலாற்று சுவடிகளில் மிகப்பழமையான சுவடியான ஆப்கானிஸ்தானின் கந்தாரி மொழியில் எழுதப்பட்ட கந்தகார் புத்தக சுவடியில் இந்தக் கதைகள் ஏன் இல்லை? என்பதற்கு சிங்களபௌத்த அடிப்படைவாதிகள் ஒரு நாளும் வாய் திறக்கப்போவதில்லை.

இன, மதவாத வெறியர்களின் மூலதனமே பொய்களும், புராணங்களும் தான். அதனால் தான் புத்தரின் உருவத்தை பச்சைகுத்தியது புத்தமதத்திற்கு எதிரானது என்று மதவாதம் பேசுகிறார்கள். ஆசைகளே மனிதரின் துன்பங்களிற்கு காரணம் என்று சொன்ன புத்தரின் தர்மபோதனையை காலால் மிதித்து விட்டு அவுஸ்ரேலிய சூதாடிக்கு சூதாட்ட கேளிக்கைவிடுதி கட்ட இடம் கொடுக்கிறார்கள். புத்தரின் புனிதபூமி என்று சொல்லிக் கொண்டு மக்களின் நிலங்களைப் பறிக்கிறார்கள். அன்னிய பெருமுதலாளிகள் இலங்கை மண்ணை நஞ்சாக்கும் இரசாயனங்களை அள்ளித் தெளிப்பதற்கு அனுமதி கொடுக்கிறார்கள். அதற்கெதிராக போராடுபவர்களை கொன்று குவிக்கிறார்கள்.

பிராமணர்கள் யாகங்கள் செய்யும்போது மிருகங்களை பலி கொடுக்கும் கொடுமையை, முட்டாள்தனத்தை எதிர்த்தவர் கௌதம சித்தார்த்தன். ஆனால் தமிழ்மொழி பேசுபவர்கள் என்னும் ஒரே காரணத்திற்காக தமிழர்களை கொல்கிறார்கள். தமது வறுமைக்கு வழி கேட்டதற்காக சமத்துவம் வேண்டும் என போராடிய சிங்களமக்களையும் கொன்றார்கள். வேற்று மதத்தை சேர்ந்தவர்கள் என்பதற்காக முஸ்லீம்களை கொல்கிறார்கள். அகிம்சையை உயர்த்தி நிற்கும் புத்தரின் தர்மபோதனையை குழிதோண்டிப் புதைத்து இலட்சக்கணக்கான தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்களை கொல்கிறார்கள். கௌதம சித்தார்த்தனின் தர்ம போதனைகள் இலங்கையில் கொலை செய்யப்படுகிறது என்பது தான் வரலாறாகப் போகிறது.

# போராட்டம்

41/32, கெந்தஹேனவத்தை, தெபானம, பன்னிபபிட்டிய.
தொலைபேசி/தெலைநகல்: 094-113185692
mpssrilanka@gmail.com, http://www.peoplesstruggle.com


## ராஜபக்ஷவின் "தெருவன் சரணய் ஞானசாரவின் அப சரணய்"

சிறிய சம்பவங்களுக்காகக் கூட சிலர் பெரிய ஹர்த்தாலை செய்கின்றனர் என ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் நடந்த விழாவொன்றின்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கிண்டலாகக் கூறியிருந்தார். அளுத்கமை முஸ்லிம் மக்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதல்களை கண்டித்து முஸ்லிம் மக்கள் கடையடைப்பு நடத்தினர். இந்த ஹர்த்தால் நடவடிக்கையை ஏற்பாடு செய்த குற்றத்தின் பேரில் " முஸ்லிம் உரிமைகளை பாதுகாக்கும அமைப்பைச்" சேர்ந்த நான்கு பேர் சமீபத்தில் கைது செய்யப்பட்டனர். அதோடு, ஹர்த்தால் நடவடிக்கை தொடர்பில் விசாரிப்பதற்கு மேல் மாகாண சபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் புலனாய்வுப் பிரிவினரால் நான்காம் மாடிக்கு ஜுன் 25ம் திகதி அழைக்கப்பட்டிருந்தார். முஸ்லிம் மக்களுக்கு எதிராக நாட்டில் தாண்டவமாடிய இனவெறியை சர்வதேச கவனத்திற்கு கொண்டுவந்தமையை சிங்கள ஊடகங்கள் "நாட்டை காட்டிக் கொடுக்கும் செயல்" என குறிப்பிட்டிருந்தன.

"சிறிய சம்பவங்களுக்குக் கூட பெரிய ஹர்த்தால் செய்கிறார்கள்"என்று ஜனாதிபதி கூறியதின் அர்த்தம் என்ன? "சிறிய சம்பவம்" என அவர் எதைக் கூறுகிறார்? பொது பல சேனை என்ற சிங்கள பௌத்த கடும்போக்காளர்களின் தூண்டுதல்களால் முஸ்லிம்களில் சிலர் படுகொலை செய்யப்பட்டும், கோடிக்கணக்கான சொத்துக்கள் அழிக்கப்பட்டும் அளுத்கம, பேருவளை, தர்கா நகர் போன்ற இடங்களில் நடத்தப்பட்ட இனவாத தாக்குதல்கள் இவருக்கு சிறிய சம்பவமா? இனவெறியர்களால் தூண்டிவிடப்பட்ட சிங்களவர்கள் முஸ்லிம்களின் வீடுகளை கொள்ளையடித்து மனிதர்களை கொல்லும்போது, முஸ்லிம்களின் பக்கத்திலிருந்து தற்காப்பு நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று சொல்கிறாரா? சிங்கள இன காடையர்களுக்கு பொலிஸாரினதும், விஷேட அதிரடிப்படையினரினதும் ஒத்துழைப்பு கிடைத்ததற்கான ஆதாரங்கள் இப்போது வெளிவந்து கொண்டிருக்கின்றன சிங்களை இனவெறியர்கள் முஸ்லிம்களை தாக்கும்போது பொலிஸார் கை கட்டி பார்த்துக் கொண்டிருந்திருக்கிறார்கள். இது ஒரு வகையில் "83 கறுப்பு ஜுலை" யை கண்முன்னே கொண்டு வந்ததைப் போலிருந்தது.

இந்த இனவெறித் தாக்குதலை கண்டித்துத்தான் ஹர்த்தால் நடந்தது. ஹர்த்தால் செய்தவர்களுக்கு எதிராக அரச சட்டம் பாய்ந்திருக்கிறது. ஆனால் இனவாத கலவரத்தை தூண்டிய எந்தவொரு சிங்கள இனவெறியனோ, தலைவனோ, இயக்கமோ சட்டத்தின் முன் கொண்டுவரப்படவில்லை. அளுத்கம சம்பவத்திற்கு காரணமான, பொது பலசேனா ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் ஞானசார ஆற்றிய உரை "அமைதிக்கு பங்கம்" விளைவிக்கும் உரையாக இருந்தது. "அதிகமாக துள்ளினால் முஸ்லிம் வர்த்தக நிலையங்களுக்கு "அப சரணய்' என்று கூறும்போது அங்கு குழமியிருந்தவர்கள் ஆரவாரமாக கை தட்டினார்கள். இனவெறியை பகிரங்கமாகவே தூண்டும் இந்தச் செயல் அரசாங்கத்தை பொறுத்தவரையில் குற்றமாகத்' தெரியவில்லை.

அளுத்கமை சம்பவமும் அதன் பின் நடந்த அனைத்து சம்பவங்களும் அரசாங்கத்தின் பக்கச் சார்பை படம் பிடித்துக் காட்டுகின்றன. இன உறவுகள் விடயத்தில் பார்த்தால் இந்நாட்டு அரச இயந்திரத்திற்குள் சிங்கள- பௌத்த இனத்தின் மீதான பக்கச்சார்பு இருக்கிறது. அதன்படி, கலகொட அத்தே ஞானசார அளுத்கமையில் ஆற்றிய உரையில் கூறியது உண்மைதான். "இந்த நாட்டில் இருப்பது சிங்கள ராணுவமும், சிஙகள பொலிஸூம் தான் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்" என்று அவர் கூறினார். முஸ்லிம் மக்கள் கொல்லப்படும்போது பொலிஸ ாரும் ராணுவத்தினரும் கை கட்டி வேடிக்கை பார்த்தது ஏன்? அந்த இனவெறித் தாக்குதல்கள் ஜனாதிபதிக்கு "சிறு சம்பவங்களாக" தெரிந்தது எப்படி? சிங்கள இனவாத காடையர்கள் சட்டத்தின் முன்னால் "நிரபராதிகளாவதும்""முஜிபுர் ரஹ்மானை மட்டும் 4வது மாடிக்கு அழைக்கப்படுவதும் ஏன்? இனவெறியைத் தூண்டும் இனவாத கூட்டங்களை ஏற்பாடு செய்து, அந்த மேடைகளில் முஸ்லிம்களை தூற்றுவதும், இனத்துவேசமாக திட்டுவதும் "குற்றமாக" கருதப்படாமல், ஹர்த்தாலை ஏற்பாடு செய்வது குற்றமாகப்படுவது ஏன்? இலங்கை அரச அமைப்புக்குள் வேருன்றியிருக்கும் இனப்பாகுபாடுகளுக்கு இது சிறந்த உதாரணமல்லவா.

இந்த இனவெறி தாண்டவத்திற்குப் பிறகு ஜனாதிபதி இது தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார். சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் ஒருதாய் மக்களின் பிள்ளைகளைப் போல் வாழ வேண்டுமென அந்த அறிக்கையில் கூறியிருந்த ஜனாதிபதி இறுதியில் "ஒப செமட்ட தெவியன் சரணய்" (உங்கள் அனைவருக்கம் மும்மூர்திகள் துணை) என குறிப்பிட்டிருந்தார். பொதுபல சேனா போன்ற சிங்கள நாசிவாத குழுக்களை போஷித்து வளர்ப்பது ராஜபக்ஷ சர்வாதிகாரம் தான் என்பது வெளிப்படை. சிறுபான்மை இனங்களுக்கு எதிராக குரோதத்தை வளர்த்து வன்செயல்களுக்கு வழிசமைத்துக் கொடுப்பதும் ராஜபக்ஷ சர்வாதிகாரம்தான். இது, சிறுபான்மை மக்களுக்கு எதிராக மிருக வெறியை தூண்டிவிட்டு, அதற்காக வெறிநாய்களை அவிழ்த்து விட்டு, சிங்கள மக்களோடு ஒரு தாய் மக்களாக வாழுமாறு சிறுபான்மை மக்களை கேட்டுக் கொள்ளும் குள்ளநரித்தனமேயன்றி வேறென்ன? முஸ்லிம்களுக்கு "அப சரணய்" என்று கூறும், முஸ்லிம்களின் இரத்தத்தை உறிஞ்சக் காத்திருக்கும் மதவாதிகளை வீதிகளில் நடமாடவிட்டு, அந்த மதவெறி சமூகத்தை அழிக்கும்போது"உங்கள் அனைவருக்கும் மும்மூர்திகள் துணை" என ஜனாதிபதி கூறுவது வேடிக்கையாக இருக்கிறது. ஞானசாரவின் "அப சரணய்" என்ற வார்த்தை மற்றும் ராஜபக்ஷவின் "தெருவன் சரணய்" என்ற வார்த்தைக்கும் உள்ள வித்தியாசம் என்ன? நாய் தப்பிச் செல்லாதபடி மட்டுமல்ல, நாயின் எஜமான் தப்பிச் செல்லாதபடியும் குரல்வலையை நாம் பிடித்துக் கொள்ள வேண்டும். இதற்காக முற்போக்கு சிந்தனை கொண்ட அரசியல் தேவை.

## "உங்களை நாங்கள் அளவுக்கதிகமாக நேசிக்கிறோம்"

29வது மாணவ வீரர் தினம் ஜுன் 20ஆம் திகதி பேராதனை பல்கலை கழகத்தில் நினைவு கூரப்பட்டது. இந்நிகழ்வில் பல்கலை கழக பேராசிரியர்கள், மாணவ மாணவிகள் பெருமளவில் கலந்து சிறப்பித்தனர். அதன்போது பிடிக்கப்பட்ட படங்களையே இங்கு காண்கிறீர்கள்.













## 'இனவாத, மதவாதத்தை எதிர்ப்போம்'

மேற்படி தொனிப்பொருளில் "சமஉரிமை இயக்கத்தினர்" ஜுன் 20ஆம் திகதி லண்டன் மற்றும் பாரிஸ் நகரங்களில் மக்களை தெழிவுபடுத்த துண்டுபிரசுர வினியோகத்தில் ஈடுபட்டனர்.இந்நிகழ்வில் இலங்கையர் உட்பட வெளிநாட்டவர்களும் பெருமளவில் இணைந்து துண்டுபிரசுர வினியோகத்தில் ஈடுபட்டிருக்கும் காட்சிகளையே படத்தில் காண்கிறீர்கள்.




லண்டன்



பாரிஸ்


41/32, கெந்தஹேன வத்தை, தெபானம, பண்னிபிட்டிய் வசிக்கும் ஜுட் சில்வா புள்ளே ஆகிய என்னால் கடவத்தை, கோனஹேன பாதை, சத்தர்மதிலகாராம மாவத்தையில் அமைந்துள்ள ஸ்பெக்ட்ரா எட்வடைசிங் நிறுவனத்தில் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது.